நிச்சயமற்ற தன்மையுடன் வாழ்ந்து வருதல்

# இலங்கையில் காணாமல் போனவர்களுடைய குடும்பங்களின் தேவைகள்

COMITE INTERNATIONAL GENEVE
ICRC

அறிக்கை

செஞ்சிலுவை சர்வதேசக் குழு
29, லெயார்ட்ஸ் வீதி, கொழும்பு 5
இலங்கை
தொ.பே: +94 (11) 2503346 தொ.ந: +94 (11) 2503348
மின்னஞ்சல்: Colombo@icrc.org


©ICRC, ஜுலை 2016



வவுனியா அலுவலகம்
70, வைரவர் கோவில் வீதி,
வைரவப்புளியங்குளம்,
வவுனியா,
இலங்கை
தொ.பே: +94 (0)24 222 28 55 தொ.ந: +94 (0)24 222 25 37

மட்டக்களப்பு அலுவலகம்
மண்ரீசா வீதி,
கொத்துக்குளம், பிள்ளையாரடி
மட்டக்களப்பு
இலங்கை
தொ.பேசி: +94 (0) 65 222 70 70


ICRC

நிச்சயமற்ற தன்மையுடன் வாழ்ந்து வருதல்

# இலங்கையில் காணாமல் போனவர்களுடைய குடும்பங்களின் தேவைகள்

# நன்றி நவிலல்

இவ்வறிக்கையைப் பிரசுரிக்கும் இவ்வேளையில், குடும்பங்களின் தேவைகள் மதிப்பீட்டில் பங்குகொண்டு, கேட்கப்பட்ட வினாக்களுக்குத் தமது நேரத்தை ஒதுக்கி பதிலளித்தமைக்காகவும் குழுக் கலந்துரையாடல்களில் ஒரு பகுதியினராக அங்கம் வகித்தமைக்காகவும் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு ஐ.சி.ஆர்.சி. முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறது.

எமது எதிர்பார்ப்பு யாதெனில், இந்த அறிக்கையானது காணாமல் போன நபர்களின் சகல குடும்பங்களினதும் மனிதாபிமான தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கான விரிவான திட்டம் ஒன்றை வகுப்பதற்கு அரசாங்கத்துக்கு உதவும் என்பதும் இக்குடும்பங்கள் சார்பான நிகழ்ச்சித் திட்டங்களை விருத்தி செய்வதற்கு இலங்கையிலுள்ள ஏனைய தேசிய மற்றும் சர்வதேச பங்குதாரர்களுக்கு களம் அமைத்துக் கொடுக்கும் என்பதுமாகும்.

# உள்ளடக்கங்கள்


**சுருக்கக் குறியீடுகளும் முதலெழுத்துப் பெயர்களும்**

**முக்கிய சொற்பதங்களும் வரைவிலக்கணங்களும்** i

**நிறைவேற்றுத்தளச் சுருக்கம்** iii

**1. அறிமுகம்** 1

**2. பின்னணித் தகவல்** 3

2.1. காணாமல் போனவர்களின் மக்கள் தொகைசார் குறிப்பு 3

**3. மதிப்பீட்டின் நோக்கங்கள்** 7

**4. மதிப்பீட்டின் முறைமையியல்** 9

4.1. தரவு சேகரிப்பு 9

4.2. மாதிரியின் அளவு மற்றும் கட்டமைப்பை வரையறுத்தல் 10

**5. மதிப்பீட்டின் கண்டறிதல்கள்** 15

5.1. காணாமல் போன தமது உறவினர்கள் எங்குள்ளார்கள் மற்றும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பவற்றை அறிந்து கொள்வதற்கான குடும்பங்களின் தேவை 16

5.2. சமூக உளவியல் தேவைகள் 18

5.3. பொருளாதாரத் தேவைகள் 21

5.4. சட்ட மற்றும் நிர்வாகத் தேவைகள் 23

5.5. நீதிக்கும் அங்கீகாரத்துக்குமான தேவைகள் 25

**6. பரிந்துரைகள்** 28

6.1. இலங்கை அதிகாரத் தரப்பினருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிரதான பரிந்துரைகள் 28

6.2. ஏனைய பங்குதாரர்களுக்கான பரிந்துரைகள் 29

**7. இலங்கையில் காணாமல் போனவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் சார்ந்த ஐ.சி.ஆர்.சி.யின் செயற்பாடுகள்** 31

**8. முடிவுரை** 34

# சுருக்கக் குறியீடுகளும் முதலெழுத்துப் பெயர்களும்

| | |
|---|---|
| CBO | சமூகம் சார்ந்த அமைப்புகள் |
| CoA | காணப்படாமைக்கான சான்றிதழ் |
| CoD | மரணச் சான்றிதழ் |
| DS | பிரதேச செயலகங்கள் |
| FNA | குடும்பத் தேவைகள் மதிப்பீடு (மதிப்பீடு) |
| GoSL | இலங்கை அரசாங்கம் |
| ICRC | செஞ்சிலுவை சர்வதேசக் குழு |
| IHL | சர்வதேச மனிதாபிமானச் சட்டம் |
| INGO | சர்வதேச அரச சார்பற்ற அமைப்பு |
| LTTE | தமிழீழ விடுதலைப் புலிகள் |
| MIA | இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போயிருத்தல் |
| NGO | அரச சார்பற்ற நிறுவனம் |
| SLA | இலங்கை இராணுவம் |
| SLAF | இலங்கை விமானப் படை |
| SLN | இலங்கை கடற்படை |
| SLP | இலங்கை பொலிஸ் |

# முக்கிய சொற்பதங்களும் வரைவிலக்கணங்களும்

## காணாமல் போன நபர்[1]

காணாமல் போன நபர் என்பவர் சர்வதேச அல்லது உள்நாட்டு ஆயுத மோதல், உள்நாட்டு வன்முறை அல்லது குழப்பச் சூழ்நிலை ஒன்றுடன் தொடர்புபட்ட வகையில், கிடைக்கக் கூடிய நம்பத்தகுந்த தகவல்களின் அடிப்படையில் காணாமல் போனவராக அறிவிக்கப்பட்ட நபர் எங்குள்ளார் என்பது பற்றி அவரது உறவினருக்குத் தெரியாத நபராவார்.

## காணாமல் போன நபரின் குடும்பம்[2]

பொதுவாகக் குடும்பம் என்பது பின்வருவோரை உள்ளடக்கியிருக்கும்: பிள்ளைகள் (திருமணம் அல்லது திருமணத்திற்குப் புறம்பான உறவின் மூலம் பிறந்த, மகவேற்பு செய்யப்பட்ட பிள்ளைகள் அல்லது சிறிய தாயின் பிள்ளைகள்)ளு துணை (சட்ட ரீதியாக திருமணம் செய்த அல்லது திருமணம் முடிக்காத) பெற்றோர் (இரண்டாம் தார பெற்றோர்கள் மற்றும் மகவேற்பு செய்த பெற்றோர்கள் உள்ளடங்கலாக) சகோதரர்கள் (அரை இரத்தவழி சகோதரர்கள் மற்றும் மகவேற்பு செய்யப்பட்ட சகோதரர்கள் உள்ளடங்கலாக). எதுஎவ்வாறாயினும், பல சமூக - கலாசார சூழ்நிலைகளில் மேற்குறிப்பிட்டவைகளுக்கு அப்பால் குடும்பம் என்பது பொருள் கொள்ளப்படுவதுடன், அது, ஒரே கூரையின் கீழ் வாழ்பவர்களையும் அல்லது அவர்களிடையே நெருக்கமான உறவுகளைப் பேணி வருபவர்களையும் உள்ளடக்குகிறது.

## இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போயிருத்தல்

இலங்கை இராணுவம், இலங்கை கடற்படை, இலங்கை விமானப்படை மற்றும் இலங்கை பொலிஸ் ஆகியவற்றில் கடமையாற்றிய உறுப்பினர்கள், அவர்கள் கடமை நேரத்தின்போது மற்றும்/ அல்லது மோதல்களில் பங்குபற்றுகின்றபோது, காணாமல் போனமையைக் குறிப்பதற்கு இலங்கை அதிகாரத் தரப்பினரால் பயன்படுத்தப்படும் ஒரு வார்த்தைப் பிரயோகமாக செயற்பாட்டின்போது காணாமல் போயிருத்தல் (MIA) என்பது இவ்வறிக்கையில் பயன்படுத்தப்படுகிறது.

## குடும்பத் தேவைகள் மதிப்பீடு[3]

தேவைகள் மதிப்பீடு என்பது பொருத்தமான பதில்களை வரையறுக்கும் நோக்கத்துடன் காணாமல் போன நபர்களுடைய குடும்பங்களின் விசேட பிரச்சினைகள், தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புக்கள், தற்போது இருக்கக் கூடிய வளங்கள், வழிவகைகள் மற்றும் தெரிவிக்கப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இருக்கக் கூடிய பொறிமுறைகள் மற்றும் தெரிவிக்கப்பட்ட தேவைகளுக்கும் இருக்கக்கூடிய வளங்களுக்கும் இடையிலான இடைவெளிகள் (வழங்கப்பட்ட சேவைகள்) என்பவற்றை விளங்கிக் கொள்வதனை இலக்காகக் கொண்ட ஒரு செயன்முறையாகும்.

## உளவியல்

"உளவியல் சார்ந்த" என்பது தனிநபர் ஒருவரின் எண்ணங்களும் உணர்வுகளும் மற்றும் அவர் சுற்றுச் சூழலை எவ்வாறு நோக்குகிறார் என்பதையும் சூழ்நிலைகளை எவ்வாறு பகுப்பாய்வு செய்கின்றார் என்பதையும் குறிக்கும். 'உளவியல் சார்ந்த பிரச்சினைகள்' என்பது மன இறுக்கமிக்க சூழ்நிலைகளைக் கையாளும்போது, தனிநபர்கள் அனுபவித்த துன்பங்களை விபரிப்பதாக அமையும். இந்தப் பிரச்சினைகள் நடத்தை, மனவெழுச்சிகள், சிந்திக்கக் கூடிய ஆற்றல் அல்லது வழமையாக நடைபெறும் விடயங்களை நினைவுகூருதல் அல்லது பகுப்பாய்வு செய்தல், ஏனையோருடனான உறவுகள் மற்றும் தனிப்பட்டவர்களின் உடல் நலம் (உடல்சார்ந்த நோ அற்ற ஏனைய வலிகள்) என்பவற்றைப் பாதிக்கும் தன்மை வாய்ந்தனவாகும்.

## சமூக - உளவியல்

இப்பதம், தனிநபர்கள் மற்றும் அவர்களின் சமூகச் சூழமைவு என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை எடுத்துக்காட்டுகிறது. இது முக்கியமான ஒரு தொடர்பாகும்: தனிநபர்கள் வாழ்கின்ற சமூகச் சூழமைவில் ஏற்படுகின்ற மாற்றங்கள் பரஸ்பரம் அவர்களின் நலன் மற்றும் சமூகத்துடன் ஒன்றிப்போகும் திறன் என்பவற்றைப் பாதிக்கும்.

[1] Guiding principles / Model law on the Missing, ICRC 2009, Article 2 "Definitions", www.icrc.org/eng/resources/documents/misc/model-law-missing-300908.htm.
[2] Accompanying the Families of Missing Persons: A Practical Handbook, ICRC 2013, Chapter 1: General information, page 17, https://www.icrc.org/eng/assets/files/publications/icrc-002-4110.pdf.
[3] Internal guidelines: Assessing the Needs the Families of Missing Persons, ICRC 2011, Key definitions.



Tuan Zaharan/ICRC

# நிறைவேற்றுத்தளச் சுருக்கம்

பின்வரும் அறிக்கை ஐ.சி.ஆர்.சி.யினால் 2014ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் தொடக்கம் 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வரை மேற்கொள்ளப்பட்ட 'குடும்பத் தேவைகள் மதிப்பீட்டின்' (FNA) கண்டறிதல்களைச் சாராம்சப்படுத்துகிறது. காணாமல் போன நபர்களுடைய குடும்பங்களின் தேவைகள், அவர்களுக்கு இருக்கக் கூடிய வளங்கள் (வளப் பற்றாக்குறை உட்பட) மற்றும் அவர்களது தற்போதைய சமாளித்தற் பொறிமுறைகள் என்பவற்றை பற்றிய ஒரு விரிவான விளக்கத்தை இது உள்ளடக்குகிறது. மேலும், இவ்வறிக்கை அத்தகைய தேவைகளை எவ்வாறு பூர்த்தி செய்வது என்பது தொடர்பான ஐ.சி.ஆர்.சி.யினுடைய பரிந்துரைகளையும் உள்ளடக்குகிறது. இவ்வறிக்கை, காணாமல் போன நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்குச் சாதகமான செயற்பாடுகளுக்கு ஒத்துழைக்கவும் வசதிப்படுத்துவதற்குமான நோக்குடன் பிரசுரிக்கப்படுகிறது.

காணாமல் போன நபர்களின் பிரச்சினை தொடர்பான ஐ.சி.ஆர்.சி.யின் அவதானமானது, சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தினால் அரசுகளுக்குச் சுமத்தப்பட்டுள்ள கடப்பாடான காணாமல் போனவர்கள் என அறிவிக்கப்பட்ட நபர்களின் சார்பாக சகல சாத்தியமான நடவடிக்கைகளையும் தழுவிக் கொள்ளுதல் மற்றும் அது பற்றிய தகவல்களை வழங்குதல் என்பவற்றிலிருந்து பெறப்படுகிறது. இதற்கு மேலதிகமாக, காணாமல் போன நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினரின் பிரச்சினைகளுடன் தொடர்புபட்ட விடயங்களைத் தீர்க்காதிருத்தல், நல்லிணக்கத்திற்கு ஒரு பாரிய தடையை ஏற்படுத்துவதுடன், அது சமூகத்தில் தொடர்ந்தும் மோதல் உள்ளது என்பதை நினைவூட்டும் செயலாகவும் அமைகிறது என்பதை உலகளாவிய ரீதியில் மோதல்களிலிருந்து மீண்டுகொண்டிருக்கின்ற நாடுகளின் அனுபவங்கள் வெளிப்படுத்துகின்றன. எனவே, இலங்கையின் கடந்த கால ஆயுத மோதலில் காணாமல் போன நபர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்களுடைய குடும்பங்களின் தேவைகள் என்பவற்றை முழுமையாகப் பூர்த்தி செய்தல் அத்தியாவசியமானது என்பதை ஐ.சி.ஆர்.சி. நம்புகிறது.

சர்வதேச அல்லது உள்நாட்டு ஆயுத மோதல், உள்நாட்டு வன்முறை அல்லது குழப்பச் சூழ்நிலை ஒன்றுடன் தொடர்புபட்ட வகையில், கிடைக்கக் கூடிய நம்பத்தகுந்த தகவல்களின் அடிப்படையில் காணாமல் போனவராக அறிவிக்கப்பட்ட நபர் ஒருவர் எங்குள்ளார் என்பது பற்றி அவர்களது உறவினருக்குத் தெரியாதவரை அவரை ஐ.சி.ஆர்.சி. காணாமல் போன நபராக வரைவிலக்கணப்படுத்துகிறது.[4] இந்த விரிவான வரைவிலக்கணம் அவர்கள் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டார்களா, இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போனவர்களா அல்லது தமது குடும்பத்தினருடன் தொடர்புகள் இல்லாமல் காணாமல் போனவர்களா என்ற வேறுபாடின்றி, ஆயுத மோதலுடன் தொடர்புபட்ட வகையில் காணாமல் போனவர்கள் அனைவரையும் உள்ளடக்குகின்றது.

காணாமல் போன நபர்களுடைய குடும்பங்கள் ஏனைய மனத்தாங்கல்களுடன் ஒப்பிட முடியாத வகையில் தொடர்ந்தும் மனவெழுச்சிசார் போராட்டத்தை எதிர்நோக்கி வருகின்றன. அவர்கள் 'சந்தேகத்துடனான இழப்பு' (Ambiguous loss)[5] என்று அறியப்படுகின்ற ஒரு தோற்றப்பாட்டினால் அவதியுறுகின்றனர். இது, உளவியல் ரீதியான மற்றும் சமூக ரீதியான மனத்தாங்கலை உள்ளடக்கியுள்ளதாகும். இது முடிவுக்கு வருதலைத் தடுத்தல், எதிர்பார்ப்பு மற்றும் பயம் என்பவற்றுக்கிடையிலான தொடர்ச்சியான தடுமாற்றத்தை ஏற்படுத்தல், காணாமல் போன சரியான சூழமைவு பற்றிய அறிவுக்கான தொடர்ச்சியான தேடலைத் தோற்றுவித்தல் மற்றும் குடும்பங்கள் தமது வாழ்க்கையை மீள ஆரம்பிக்கும் திறனைப் பாதித்தல் என்பவற்றை ஏற்படுத்துகின்றது. உலகளாவிய ரீதியில் காணாமல் போன நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களின் பிரச்சினைகள் தொடர்பில் பணியாற்றிய பல வருடகால அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு, இந்த இழப்பின் சிக்கற் தன்மையினை ஐ.சி.ஆர்.சி. அங்கீகரிக்கின்றது.

காணாமல் போன நபர்களின் குடும்பங்களுடைய தேவைகள் அவர்களுடைய துன்பங்களைப் போன்று, மிக விசேடமானவையாகும். எனவே, இந்தத் தேவைகள் பற்றிய ஆழமான புரிந்துணர்வானது, பொருத்தமான பதிலொன்றை வடிவமைப்பதற்கு அதிகாரத் தரப்பினரையும் இதனுடன் தொடர்புபட்ட ஏனைய சகல பங்காளர்களையும் இயலச் செய்யும் என்ற நம்பிக்கையுடனேயே ஐ.சி.ஆர்.சி.யினால் இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டது.

இலங்கையில் 1989ஆம் ஆண்டு தமது நிரந்தர பிரசன்னத்தைத் தாபித்தது முதல் ஐ.சி.ஆர்.சி.யானது, கடந்த கால ஆயுத மோதலின் காரணமாக கைது செய்யப்பட்ட நபர்கள், பிரிந்திருக்கக் கூடிய குடும்பங்கள் மற்றும் காணாமல் போன நபர்கள் என அறிவிக்கப்பட்ட நபர்களைப் பதிவு செய்து, அவற்றுக்குத் தீர்வு கண்டு வருகின்றது. இலங்கையின் அனைத்துப் பாகங்களிலிருந்தும் பெறப்பட்ட பதிவுகளில் 5,100 இற்கும் அதிகமான இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன பாதுகாப்புப் படையினர் உட்பட 16,000 இற்கும் மேற்பட்ட காணாமல் போன நபர்களின் பதிவுகள் இன்று பதிலளிக்கப்படாமல் நிலுவையில் உள்ளன. இவ்வடிப்படையில் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் மதிப்பீடு ஒன்றை மேற்கொள்வதற்கான தீர்மானத்தை ஐ.சி.ஆர்.சி. மேற்கொண்டது.

இம்மதிப்பீட்டின் முறைமையியலானது, தரவு இயலுமானவரை சரிநுட்பமாகவும் பிரதிநிதித்துவப்படுத்தக் கூடியதாகவும் இருக்கக் கூடியவகையில், கலப்பு தரவு சேகரித்தல் முறையை உள்ளடக்கியுள்ளது. இந்த முறைமைகள், இம்மதிப்பீட்டை நிறைவேற்றுவதற்கு முன்பு மேற்கொள்ளப்பட்ட இரண்டாம்நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு (உள்ளக மற்றும் வெளியக வளங்கள் கருத்திற்கெடுக்கப்பட்டன), அனைத்து மாவட்டங்களிலுமுள்ள காணாமல் போன நபர்களுடைய குடும்பங்களுடனான பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட 395 நேர்காணல்கள் (மூடிய மற்றும் திறந்த வினாக்களின் ஒரு கலவையை உள்ளடக்கியது), 11 மாவட்டங்களில் மேற்கொள்ளப்பட்ட குழுக் கலந்துரையாடல்கள் (தனிப்பட்ட நேர்காணல்கள் மூலம் வெளிவந்த குறிப்பான கருத்தாடல்கள் மீது கவனஞ் செலுத்தவும் தமது குடும்ப உறுப்பினர்கள் பற்றி சுதந்திரமாகப் பேசுவதற்கு தனிநபர்களை அனுமதிக்கவும்) மற்றும் இறுதியாக முக்கிய தரப்பினருடனான கூட்டங்கள் (அரசாங்க முகவர்கள் மற்றும் சிவில் சமூக உறுப்பினர்கள் ஆகியோர் உள்ளடங்கலாக) என்பவற்றை உள்ளடக்கியிருந்தது.

[4] Guiding principles / Model law on the Missing, ICRC 2009, Article 2 "Definitions", www.icrc.org/eng/resources/documents/misc/model-law-missing-300908.htm.
[5] Pauline Boss – Ambiguous loss in families of the missing, P39. The LANCET Supplement, Medicine and Conflict, Vol 360, December 2002.

இம்மதிப்பீட்டின்போது இனங்காணப்பட்ட குடும்பத் தேவைப்பாடுகளைப் பின்வருமாறு பரந்த அடிப்படையில் வகைப்படுத்தலாம்: காணாமல் போனவர் எங்குள்ளார் மற்றும் அவருக்கு என்ன நடந்தது என்பது பற்றி அறிந்து கொள்வதற்கான தேவை (காணாமல் போன சூழமைவு தொடர்பான தகவல்கள்), மனவெழுச்சிசார், பொருளாதார மற்றும் சட்ட/ நிர்வாகத் தேவைகள் மற்றும் இறுதியாக, அங்கீகாரத்துக்கும் நீதிக்குமான தேவை. காணாமல் போன நபர்களின் குடும்பங்களில் நேர்காணலுக்குட்படுத்தப்பட்டவர்களில் பெரும்பாலானோரின் கருத்தின்படி, காணாமல் போனவர்கள் தொடர்பாக அறிந்து கொள்வதற்கான தேவை மற்றும் அதனைத் தொடர்ந்து பொருளாதார உதவிகளுக்கான தேவைகள் என்பனவே மிக முக்கியமான தேவைகளாக அடையாளப்படுத்தப்பட்டன. தமது காணாமல் போன உறவினர்(களுக்கு) என்ன நடந்தது என்பது பற்றி போதிய பதிலினைப் பெற்றுக் கொள்ள முடியாமை மற்றும் அழுத்தம்மிகு பொருளாதாரக் கரிசனை ஆகிய இரண்டும் அடுத்த மிக முக்கியமான தேவையான உளவியல் / சமூக – உளவியல் பிரச்சினைகளை உருவாக்குகின்றன. அதிகாரத் தரப்பினருடைய செயற்பாடுகளைப் பொறுத்தவரை, பெரும்பாலான குடும்பங்கள் நம்பும் விடயம் என்னவெனில், தமது உறவினர்(களுக்கு) என்ன நடந்தது என்பதற்கான பதிலைப் பெற்றுக் கொள்வதும் அதனைத் தொடர்ந்து பொருளாதார உதவிகளைப் பெறுதலும் தமது பிரச்சினைகளைத் தீர்க்கக் கூடும் என்பதாகும்.

தமது காணாமல் போன உறவினருக்கு என்ன நடந்தது என்பது பற்றிய அவர்களுடைய நம்பிக்கைகள் தொடர்பில் வினவியபோது, நேர்காணலுக்குட்படுத்தப்பட்ட அனைத்துக் குடும்பங்களிலுமிருந்து 36% ஆனவர்கள் தமது அன்பிற்குரியவர்கள் இறந்துவிட்டார்கள் எனவும் 31% ஆனவர்கள் அவர்கள் இன்னும் உயிருடன் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள் எனவும் 33% ஆனவர்கள் நிச்சயமற்ற தன்மையினையும் வெளிப்படுத்தினார்கள். அவர்களுடைய நம்பிக்கைகள் எவ்வாறு இருந்தபோதிலும், தமது உறவினர்கள் இறந்துவிட்டார்கள் எனத் தெரிவித்தவர்கள் சில வேளைகளில் தமது உறவினர்கள் உயிரோடு இருக்கலாம் எனவும் உயிரோடு இருக்கின்றனர் என நம்புகின்றவர்கள் சில வேளைகளில் தமது உறவினர்கள் இறந்திருக்கலாம் எனவும் நம்புகின்ற அனைத்துக் குடும்பத்தினர் மத்தியிலும் எதிர்பார்ப்பு மற்றும் பயம் என்பனவற்றுக்கிடையில் தொடர்ச்சியான நிச்சயமற்ற தன்மையொன்று இருக்கின்றமை பதிவு செய்யப்பட்டது. தமது உறவினர்கள் இறந்திருக்கலாம் என நம்புபவர்களும் சரி அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பது குறித்து நிச்சயமற்றவர்களாக இருப்பவர்களும் சரி, அது, தமது காணாமல் போன உறவினர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பது பற்றி அதிகாரத் தரப்பினரிடமிருந்து மேலதிக விரிவான தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் தேவையினை வெளிப்படுத்துவதிலிருந்து அவர்களைத் தடுக்கவில்லை. நேர்காணலுக்குட்பட்ட குடும்பங்களில் மூன்றில் இரண்டு பங்கினர் இத்தகைய தேவைகளை வெளிப்படுத்தினர். நேர்காணலுக்குட்படுத்தப்பட்டவர்களில் எழுபத்தி ஒன்பது வீதமானவர்கள் யாதாயினும் ஓரிடத்தில் புதைக்கப்பட்ட மனித எச்சங்கள் உள்ள இடங்கள் பற்றிய தகவல்களை மற்றும்/ அல்லது தமது உறவினர்களின் அடையாளப்படுத்தப்பட்ட மனித எச்சங்களைப் பெற்றுக் கொள்ளுதல் என்பவற்றுக்கான தேவையைத் தெரிவித்தனர். முழுமையாகப் பார்க்குமிடத்து, தமது காணாமல் போன உறவினர் உயிருடன் இருப்பதாக நம்பும் அனைவரும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பதை அறிந்து கொள்ள விரும்பமுடையவர்களாகவுள்ளனர்.

தமது காணாமல் போன உறவினருக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பது பற்றிய நிச்சயமற்ற தன்மையின் காரணமாக ஏற்படுகின்ற சந்தேகத்துடனான இழப்பானது, காணாமல் போன நபர்களின் குடும்பங்களின் வாழ்க்கை ஸ்தம்பிதம் அடைதல், இயல்பாக மனத்தாங்கலுக்குட்படும் செயன்முறை ஸ்தம்பித்தல், விரக்தி மற்றும் உதவிக்கரம் அற்ற நிலை போன்ற உணர்வுகளை அதிகரிக்கச் செய்தல் ஆகிய தொடர்ச்சியான மன வேதனையை அளிக்கின்றது. சமூக மட்டத்தைப் பொறுத்தவரை, இவ்வேதனை சமூகத்தில் தனித்துவிடப்படல், தமது நண்பர்கள் அல்லது உறவினர்களால் தமது பிரச்சினைகளை விளங்கிக் கொள்ள முடியவில்லை என்ற ஓர் உணர்வு, சமூகத்திலிருந்து தாம் புறத்தொதுக்கப்பட்டுவிட்டதாகவும் இகழ்ச்சிக்குட்பட்டுவிட்டதாகவும் கருதுதல் ஆகியவற்றை நோக்கி இட்டுச் செல்கின்றது. இவ்வேதனை பொருளாதார, நிர்வாக மற்றும் ஏனைய அழுத்தங்களைத் தரக்கூடிய காரணிகளோடு ஒன்றிணைக்கப்படுகின்றபோது, மனக்கவலை, மனச்சோர்வு உள்ளடங்கலாக பாரதூரமான உடல் நலம் சம்பந்தமான பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளது என்பது நிரூபணமாகிறது. சந்தேகத்துடனான இழப்பிலிருந்து தோன்றும் இப்பிரச்சினைகள் சமூக மற்றும் உறவுநிலைசார் பிரச்சினைகளை அடையாளப்படுத்துகின்றன. அவை, மனக் கவலையையும் சந்தேகத்தையும் ஏற்படுத்தும் வெளியகக் காரணிகளிலிருந்து தோன்றுகின்றன. இந்த நேர்காணலுக்குட்படுத்தப்பட்ட குடும்பங்கள் மனநிலை பாதிக்கப்பட்டோர் என்பதை எதிர்வுகூறக் கூடிய எந்தவிதமான உளவளத்துணைச் சேவைகளையும் பெற்றுக் கொள்வதற்கு விரும்பவில்லை. நேர்காணப்பட்ட 395 குடும்பங்களில் இரண்டு சதவீதமானவர்கள் மாத்திரமே உளவளத்துணைச் சேவைகள் பயனுடையவையாக இருக்கும் என சிபாரிசு செய்தனர். 70% ஆனவர்கள், தமது காணாமல் போன உறவினர்கள் பற்றிய தமது பேச்சைப் புரிந்துணர்வுடன் கேட்கக்கூடிய ஒருவருடன் தம்முடைய வேதனைகளைப் பகிர்ந்து கொள்ள விரும்புவதுடன், 75% ஆனவர்கள் காணாமல் போன தமது உறவினர்கள் தொடர்பான குழு சார்ந்த ஞாபகார்த்த நிகழ்வுகளில் பங்குபற்ற விரும்புகின்றனர். மனநிலைப் பிரச்சினைகளைக் கையாளுவதில் குடும்பங்களுக்கு உதவுவதற்கு இலங்கையின் பல பாகங்களிலும் இத்தகைய சேவைகள் கிடைக்கக் கூடியதாக இருக்கின்றபோதிலும், இவை பொதுவாக மனநிலை பாதிக்கப்பட்டவர்களுக்கான சேவைகளாக சமூகத்தினரால் கருதப்படுகின்ற மனோதத்துவ நலன் மற்றும் ஆலோசனை வழங்கும் உளவளத்துணை என்பவற்றுடன் தொடர்புபட்டனவாகவே உள்ளன. இச்சேவைகள் சந்தேகத்துடனான இழப்பினால் வேதனையுறும் குடும்பங்களுக்குப் பொருத்தமானதும் போதுமானதுமான நலனாகக் கருதப்பட முடியாது.

இம்மதிப்பீட்டின்போது, காணாமல் போன நபர்களுடைய குடும்பங்கள் எதிர்நோக்குகின்ற சந்தேகத்துடனான இழப்பு, பொருளாதாரப் பிரச்சினைகள் மற்றும் மனநலம் சார்ந்த பிரச்சினைகள் என்பனவற்றுக்கிடையிலே இடைத்தொடர்பு உள்ளது என்பதை புள்ளிவிபரங்கள் எடுத்துக் காட்டுகின்றன. உதாரணமாக, பொருளாதாரப் பிரச்சினைகளை வெளிப்படுத்திய 56% ஆன குடும்பங்களுள் 86% ஆன குடும்பங்கள் பதகளிப்பு அல்லது மனச்சோர்வு ஆகியவற்றுக்கான அறிகுறிகள் இருப்பதைக் காட்டின.

பொருளாதாரப் பிரச்சினைகளை வெளிப்படுத்திய காணாமல் போன நபர்களுடைய குடும்பங்கள் பல காரணிகளின் மீது அவர்களுடைய பிரச்சினைகள் உள்ளன எனக் குறிப்பிட்டன. அவை வருமானமீட்டுபவரின் இழப்பு, சொத்துக்கள் அழிக்கப்பட்டமை, மோதலின் காரணமாக வியாபாரத்தில் ஏற்பட்ட பாதகமான தாக்கங்கள் மற்றும் காணாமல் போன நபர்களைத் தேடுவதற்கான பணச் செலவு என்பனவாகும். இத்தகைய காரணிகள் மேலதிகக் கடன் சுமை, பிள்ளைகளின் கல்வி பாதிப்பு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்தலில் பல இன்னல்களைத் தோற்றுவித்தல் போன்ற நிதி நெருக்கடிகளை தோற்றுவிக்கின்றன என்பது இம்மதிப்பீட்டின் மூலம் தெரிய வருகின்றது. நேர்காணலில் ஈடுபட்ட அனைத்துக் குடும்பங்களையும் எடுத்துப் பார்க்கின்றபோது, உயரிய வேலையற்ற வீதம் (56%) பதிவு செய்யப்பட்டுள்ளது. நேர்காணலில் ஈடுபட்ட குடும்பங்களில் 93% ஆனவர்களின் காணாமல் போன உறவினர் ஆணாவார். இதன் மூலம் விளங்கிக் கொள்வது யாதெனில், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பெண்கள் குடும்பத்திற்கு வருமானமீட்டித் தருபவரின் வகிபங்கினை ஏற்றுக் கொள்ள பலவந்தப்படுத்தப்படுகிறார் அல்லது ஏனைய ஆண் உறவினர்களின் ஒத்துழைப்பை நாட வேண்டியுள்ளது என்பதாகும். இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன படையினரின் குடும்பங்கள் அரசாங்கத்தினால் அனுசரணை அளிக்கப்பட்ட நட்டஈட்டுத் திட்டங்களில் உதவி பெறுவதற்குத் தகுதியுடையவர்களாக இருக்கின்ற காரணத்தினால், அவர்கள் இத்தகைய தாக்கத்துக்கு அதிகம் உட்படாத நிலை தோன்றுகின்றது.

நேர்காணப்பட்ட குடும்பங்களில் பெரும்பாலானவை அறிக்கைப்படுத்திய விடயம் யாதெனில், தமது காணாமல் போன உறவினர்களின் பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ள குடும்பச் சொத்துக்களை நிர்வாகஞ் செய்வதில் பாரதூரமான நிர்வாகச் சிக்கல்களுக்கு முகம் கொடுக்க நேர்ந்துள்ளது என்பதாகும். ஏனெனில், இலங்கைச் சட்டம் “காணாமல் போன” நபருக்கு சட்ட அந்தஸ்தை வழங்கவில்லை. இதன் காரணமாக, இக்குடும்பங்கள் தமது அடிப்படை நிர்வாகத் தேவைகளை (உதாரணமாக, காணாமல் போன நபரின் வங்கிக் கணக்கை அணுகுதல்/ முடிவுறுத்தல், வேலை தருநரால் வைப்பிலிடப்பட்ட காணாமல் போன நபருடைய மாதாந்த சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளுதல் அல்லது காணாமல் போன நபருடைய சொந்தக் காணியை மீளக் கோருதல்) நிறைவேற்றிக் கொள்ள மரணச் சான்றிதழைப் பெற்றுக் கொள்ள வேண்டிய கடப்பாடு உள்ளது. இச்சூழமைவுக்கு எதிரிடையாக, நேர்காணப்பட்ட குடும்பங்களுள் 66% ஆனவர்கள், காணாமல் போன நபருடைய இறப்பு உறுதி செய்யப்படும் வரை அவருக்கான

மரணச் சான்றிதழைப் பெற்றுக் கொள்வதற்கு மறுப்புத் தெரிவிக்கின்றனர். நேர்காணப்பட்ட குடும்பங்களில் மூன்றில் ஒரு பகுதியினர், மரணச் சான்றிதழை ஏற்றுக் கொண்டுள்ளனர். இதில் அரைவாசிக்கும் மேற்பட்டவர்கள் மரணச் சான்றிதழுக்குப் பதிலாக 'காணப்படாமைக்கான சான்றிதழ்' என்ற ஒன்று இருக்குமாயின், அதனைப் பெற்றுக் கொள்ள விரும்புகின்றனர். இக்குடும்பங்கள் யார், எந்த நலத் திட்டத்துக்குத் தகுதியுடையவர் என்பது பற்றிய தெளிவான தகவல் கிடைக்காமை, விண்ணப்பங்களுக்கான பதில்களைப் பெற்றுக் கொள்ள முடியாமை, தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்க இயலாமை போன்ற நலத்திட்டங்களை அணுகுவதில் ஏனைய நிர்வாகப் பிரச்சினைகளை எதிர்கொள்வதாகத் தெரிவித்தன. இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன படையினரின் குடும்பங்கள் மற்றும் ஏனைய காணாமல் போன நபர்களின் குடும்பங்கள் தொடர்பாக இருக்கக் கூடிய நலத் திட்டங்களுக்கு இடையில் ஒவ்வாமை காணப்படுவது இம்மதிப்பீட்டின் மூலம் தெரியவந்துள்ளது.

ஆயுத மோதலினால் பாதிக்கப்பட்ட ஏனையவர்களுக்கு இருக்கக் கூடிய தேவைகளில் பல காணாமல் போன நபர்களின் குடும்பங்களுக்கும் இருக்கின்றன. எனினும், அவற்றுள் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான தேவை, ஏனைய தேவைகளைவிட முன்னுரிமை பெறுகிறது.[6] தமது காணாமல் போன உறவினர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பது பற்றி அறிந்து கொள்வதற்கான தேவையானது, தமது உறவினர் காணாமல் போனமைக்குப் பொறுப்புக் கூற வேண்டியவர்கள் யார் என்பது பற்றி அறிந்து கொள்வதற்கான தேவை உள்ளடங்கலாக மேலும் பல தேவைகளை உருவாக்குகின்றது. இந்த மதிப்பீட்டின்போது, ஐ.சி.ஆர்.சி. நீதி மற்றும் பொறுப்புக்கூறல் தொடர்பான விசேட வினாக்களைக் கேட்கவில்லை. எனினும், இந்த நேர்காணலின்போது, நேர்காணப்பட்ட குடும்பங்களினால் இந்த விடயங்கள் எதேச்சையாக முன்கொணரப்பட்டன. முப்பத்து நான்கு சதவீதமானவர்கள் நீதிக்கான தேவை பற்றித் தெரிவித்தனர். இவற்றுள் பெரும்பான்மையானோர் (17%) சீர்படுத்தல் நீதியைக் (Reparative Justice) கோரிய அதேவேளை, 11% ஆனோர் பழிதீர்க்கும் நீதியையும் (Retributive Justice) 6% ஆனோர் இரண்டையும் கோரினர். சீர்படுத்தல் நீதியின் அதிக வேண்டுதலுக்குட்படும் வடிவம் நிதியுதவியாகும். இது வெறுமனே தமது அன்புக்குரியவர்களின் வாழ்க்கைக்காக வழங்கப்படுகின்ற சாதாரண நிதியியல் சார்ந்த ந்'டஈடாகவன்றி, அதிகாரத் தரப்பினரால் தமது வேதனை மற்றும் க்'டங்களுக்கான அங்கீகாரமாக வழங்கப்படுவதாக இருத்தல் வேண்டும் என இக்குடும்பங்கள் விரும்புகின்றன. இருபத்து மூன்று சதவீதமான குடும்பங்கள், தமது இழப்பினை அதிகாரத் தரப்பினர் ஒன்றில் அடையாள ரீதியாகவோ (நினைவுச் சின்னம், வீதிக்குப் பெயரிடல் போன்ற வடிவங்களில்), வைபவ ரீதியாகவோ அல்லது வேறு ஏதேனும் வகையிலோ (உதாரணமாக, காணாமல் போனோருக்கான ஒரு தினத்தைப் பிரகடனப்படுத்தல், பொது அங்கீகாரம், மதிப்பு/சிறப்புரிமைகள் என்பவற்றை அங்கீகரித்தல்) அங்கீகரிக்க வேண்டும் என்று விரும்புகின்றன.

இறுதியாக, இக்குடும்பங்களின் முதன்மைத் தேவைப்பாடாக இம்மதிப்பீடு வெளிப்படுத்தும் விடயம் என்னவெனில், காணாமல் போனமையுடன் தொடர்புபட்ட சூழமைவு பற்றிய தகவல்கள் உள்ளடங்கலாக தமது காணாமல் போன உறவினர்(களுக்கு) என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பதை அறிந்து கொள்வதேயாகும். தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பது பற்றிய தகவல்கள் கிடைக்காமையானது, உணர்வு ரீதியாக இக்குடும்பங்களைப் பாதிப்பதுடன், பொருளாதார ரீதியாக நிலைத்தகு வாழ்வைக் கொண்டு செல்வதற்கான அவர்களது இயலுமை உள்ளடங்கலாக அவர்களது நாளாந்த நடவடிக்கைகளில் கடுமையான தாக்கம் செலுத்துகின்றது.

எனவே, தமது காணாமல் போன உறவினர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பது பற்றிய தெளிவுபடுத்தல்களுக்காகக் காத்திருக்கும் அதேவேளை, அத்தகைய குடும்பங்களின் பொருளாதார மற்றும் மனவெழுச்சிசார் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதுமான சேவைகளும் திட்டங்களும் உள்ளனவா என்பதை உறுதிப்படுத்துவது மிகவும் முக்கியமானதாகும். அரச சேவைகள் மூலம் பயனடைந்த குடும்பங்கள் சந்தேகத்துடனான இழப்பின் மூலம் பாதிக்கப்பட்ட நிலைமையைச் சிறப்பாக சமாளிக்கக் கூடியவர்களாக இருந்தமை இதன் மூலம் அவதானிக்கப்பட்டது. மேலும், காணாமல் போன உறவினர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பது பற்றிய பதிலொன்றுக்காகக் காத்திருக்கும் அதேவேளை, சந்தேகத்துடனான இழப்புடன் வாழ்ந்து வருகின்ற இக்குடும்பங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கேற்ற வகையில் சட்ட மற்றும் நிர்வாக ரீதியான தேவைகளும் பூர்த்தி செய்யப்பட வேண்டும். எந்தவித ஆதாரமுமின்றி காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது என்பதை 'தீர்மானிப்பதற்கு' இக்குடும்பங்களை பலவந்தப்படுத்துவதற்கு மாறாக, தமது காணாமல் போன உறவினரின் அந்தஸ்தை சட்ட ரீதியாக அங்கீகரிக்கின்ற வகையில் காணப்படாமைக்கான சான்றிதழ் வழங்கும் முறையைத் தழுவிக் கொள்வதானது, இக்குடும்பங்கள் எதிர்நோக்குகின்ற நிர்வாக மற்றும் சட்ட ரீதியான பிரச்சினைகளை இலகுபடுத்துவதற்கு முக்கியமானதொரு படிமுறையாக அமையும். இறுதியாக, இக்குடும்பங்களின் இழப்பு மற்றும் வேதனை என்பன அதிகாரத் தரப்பினரால் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்படுதல் மற்றும் தமது உறவினர்கள் காணாமல் போனமைக்கான பொறுப்புக் கூறுதலை உறுதிப்படுத்துவதற்குப் பொருத்தமான வழிமுறையை முன்னெடுத்தல் என்பன காணாமல் போன நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களுக்கும் முழுச் சமூகத்துக்குமென நீடித்து நிலைக்கக்கூடிய சமாதானத்தை அடைந்து கொள்வதற்கு முக்கியமான படிமுறைகளாக அமையும்.

இக்குடும்பங்களின் பன்முகப்பட்ட தேவைப்பாடுகளை எவ்வாறு சிறப்பாகப் பூர்த்தி செய்வது என்பது தொடர்பான ஐ.சி.ஆர்.சி.யின் பரிந்துரைகள் உள்ளடக்கிய விரிவான பட்டியல் இவ்வறிக்கையின் 6ஆவது பகுதியில் தரப்பட்டுள்ளது.

[6] ICRC Report: The Missing and their Families - Summary of the Conclusions arising from Events held prior to the International Conference of Governmental and Non-Governmental Experts (19-21 February 2003), p. 83, https://www.icrc.org/eng/assets/files/other/icrc_themissing_012003_en_10.pdf.



Tuan Zaharan/ICRC

# 1. அறிமுகம்

ஆயுத மோதல்கள் மற்றும் ஏனைய வன்முறைச் சம்பவங்களின் நேரடி விளைவினால் அல்லது அதனுடன் தொடர்புபட்ட வகையில் நபர்கள் காணாமல் போகின்றமை துரதிட்டவசமாக, உலகளாவிய ரீதியில் காணப்படும் பொதுவான ஒரு தோற்றப்பாடாக இருந்து வருகின்றது. காணாமல் போன நபர்களுடைய குடும்பங்கள் எதிர்நோக்குகின்ற தொடர்ச்சியான மனவெழுச்சிசார் போராட்டமானது, ஒப்பிட்டுப் பார்க்க முடியாத ஒரு வேதனையாகும்.

உலகம் பூராகவும் பல நாடுகளில் காணாமல் போன நபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களின் பிரச்சினைகள் தொடர்பாக பணியாற்றி வருகின்ற ஐ.சி.ஆர்.சி.யின் அனுபவத்தின்படி, தமது காணாமல் போன உறவினர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பது பற்றிய நம்பத்தகுந்த பதில்கள் கிடைக்காமையானது, அக்குடும்பங்களை காணாமல் போன சூழமைவு பற்றிய போதிய தகவல்களையும் அர்த்தத்தையும் தொடர்ச்சியாகத் தேடச் செய்கின்றது.

இக்குடும்பங்கள் தமது நாளாந்த வாழ்க்கையைக் கொண்டு நடத்துவதும் அதேநேரம், தமது அன்புக்குரியவர் இல்லாமையைக் கையாளுகின்றதுமான இரண்டு விதமான சவால்களை எதிர்நோக்குகின்றன. மேலும், தமது உறவினருக்கு என்ன நடந்தது என்பது பற்றிய ஒரு நிச்சயமற்ற தன்மை காரணமாக, அவர்கள் எதிர்பார்ப்பு மற்றும் பயம் என்பவற்றுக்கு இடையில் போராடி வருகின்றனர்.

மோதலின் காரணமாக, காணாமல் போனவர்கள் தொடர்பாக இருக்கக் கூடிய வினாக்களுக்குத் தீர்வு கிடைக்காமை தொடர்ந்தும் முழுச் சமூகத்திற்கும் யுத்தத்தை ஞாபகப்படுத்தி வருகின்றது.[7] இலங்கையில் 2011ஆம் ஆண்டு வெளிவந்த கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கை "காணாமல் போன நபர்கள் தொடர்பான பிரச்சினைக்குப் பதிலிறுக்கும் விரிவான அணுகுமுறையொன்றை அவசரத் தேவையாக கண்டறிய வேண்டும். இன்றேல், இது நல்லிணக்கத்துக்கான உள்ளீர்ப்பு மற்றும் நீண்டகால செயன்முறைக்கு பாரியதொரு தடையாக அமையும்" என பரிந்துரை செய்துள்ளது.[8]

ஆயுத மோதலின் விளைவாக, காணாமல் போனவர்களாக அறிவிக்கப்பட்ட நபர்களைக் கண்டுபிடிப்பதற்குச் சாத்தியமான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதும் அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களுக்கு அது தொடர்பான தகவல்களை வழங்குதலும் சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் (IHL) கீழ் அரசுகளுக்கு விதிக்கப்பட்டுள்ள சட்டக் கடப்பாடாகும்.[9]

காணாமல் போன நபர்களின் குடும்பங்கள் ஆயுத மோதலினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களின் ஓர் உப குழுவாக உள்ளடக்கப்படுவதுடன், பொதுவான விதிப்படி, அவர்களுக்கு இருக்கக் கூடிய தேவைகள் ஏனைய பாதிக்கப்பட்டவர்களில் சிலர் அல்லது அனைவரும் எதிர்கொள்வனவாகும். எவ்வாறாயினும், காணாமல் போனவர்களுடைய குடும்பங்கள் தமது காணாமல் போன உறவினர்(களுக்கு) என்ன நடந்தது என்பது தொடர்பான ஒரு பதிலைப் பெற்றுக் கொள்வதற்காகக் காத்திருக்கக் கூடிய ஒரு விசேட யதார்த்தத்தை எதிர்கொண்டுள்ளமையால், இது மேலும் அவர்களுக்கான குறிப்பான தேவைகளை உருவாக்குகின்றது.[10] எனவே, காணாமல் போன நபர்களுக்கு அல்லது அவர்களது குடும்பங்களுக்குச் சாதகமான ஏதேனும் நடவடிக்கை ஒன்றை எடுப்பதற்கு முன்னர் காணாமல் போன நபர்களுடைய குடும்பங்களின் தேவைகளை மதிப்பீடு செய்தல் அத்தியாவசியமானதாகும்.

இலங்கையில் கடந்த காலங்களில் ஏற்பட்ட ஆயுத மோதலில் காணாமல் போன குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பங்களிப்புச் செய்யும் வகையில், காணாமல் போன நபர்களின் குடும்பங்கள் தொடர்ச்சியாக எதிர்கொண்டு வரும் பன்முகப்பட்ட தேவைகளை விளங்கிக் கொள்வதற்கும் அத்தகைய தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு இருக்கக் கூடிய வளங்களைப் பகுப்பாய்வு செய்வதற்கும் இனங்காணப்பட்ட தேவைகள் மற்றும் இருக்கக் கூடிய வளங்களுக்கிடையிலான இடைவெளியை எவ்வாறு நீக்குவது என்பது தொடர்பான பரிந்துரைகளை வழங்குவதற்கும் விரிவான மதிப்பீடொன்றை மேற்கொள்வதற்கான தமது விருப்பத்தை 2014ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஐ.சி.ஆர்.சி. இலங்கை அரசாங்கத்திடம் தெரிவித்தது.

இம்மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கான எழுத்து மூலமான அனுமதியை ஐ.சி.ஆர்.சி. 2014ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் அரசாங்கத் தரப்பினரிடமிருந்து பெற்றுக் கொண்டது. அதே மாதத்தில் ஐ.சி.ஆர்.சி காணாமல் போன நபர்களுடைய குடும்பங்களுடன் ஆழமான நேர்காணல்கள் மற்றும் குழுக் கலந்துரையாடல்கள் என்பவற்றின் மூலம் தரவுகளைத் திரட்ட ஆரம்பித்ததுடன், ஐ.சி.ஆர்.சியினால் ஏற்கெனவே நடத்தப்பட்ட ஆய்வுகள் உள்ளடங்கலாக இந்நாட்டில் ஏற்பட்ட மோதலின் இயல்பு மற்றும் அதனுடைய விளைவுகள் தொடர்பான அறிக்கைகள் மற்றும் நூல்கள் பற்றிய ஓர் இரண்டாம்நிலை ஆய்வையும் மேற்கொண்டது. இலங்கையில் இருக்கக் கூடிய இத்தகைய குடும்பங்களின் தேவைகளை முழுமையாகவும் சரியாகவும் விளங்கிக் கொள்வதற்கு தரவுகளை முழுமையாகச் சேகரிக்கவும் இந்தத் தலைப்புடன் தொடர்புபட்ட முக்கியமான பல வகிபங்குதாரர்களைச் சந்திக்கவும் கூடிய வகையில் ஐ.சி.ஆர்.சி. தனது அணுகுமுறையை வடிவமைத்துக் கொண்டது. தரவு சேகரித்தலானது, 2015ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பூர்த்தியாக்கப்பட்டதுடன், 2015ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில் அனைத்துத் தகவல்களும் ஒருங்கிணைக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டன.

திரட்டப்பட்ட தகவல்களின் பகுப்பாய்வு மூலம் ஐ.சி.ஆர்.சி.யானது, இலங்கையில் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு தற்போது இருக்கக் கூடிய தேவைப்பாடுகள், தற்போது இருக்கக் கூடிய வளங்கள் (வளப் பற்றாக்குறை) மற்றும் இதுவரையில் பயன்படுத்தப்பட்ட சமாளித்தற் பொறிமுறைகள் என்பன தொடர்பான குறிப்பிடத்தக்களவு அறிவினை ஒருங்கு சேர்த்துக் கொண்டது.

இந்த ஆவணம், காணாமல் போன நபர்களுடைய குடும்பங்களின் தேவைகள் தொடர்பான பிரதான கண்டறிதல்களை சித்திரித்தல் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கான வழிவகைகளை நிறைபொலிவாகப் பரிந்துரைத்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டதாகும். இக்குடும்பங்களுடைய பன்முகப்பட்ட தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்வதற்கு முழுமையான பதிலிறுப்பொன்றும் இதனுடன் சம்பந்தப்பட்ட சகல வகிபங்குதாரர்களுக்குமிடையிலான ஒருங்கிணைந்த அணுகுமுறையொன்றும் தேவைப்படுகின்றது.

[7] ICRC Report: The Missing and their Families - Summary of the Conclusions arising from Events held prior to the International Conference of Governmental and Nongovernmental Experts (19 - 21 February 2003), paragraph 104, page 90/155, https://www.icrc.org/eng/assets/files/other/icrc_themissing_012003_en_10.pdf.

[8] Chapter 5 - Human Rights, Paragraph 5.37, page 163, http://slembassyusa.org/downloads/LLRC-REPORT.pdf.

[9] Customary International Humanitarian Law, Rule 117, https://www.icrc.org/customary-ihl/eng/docs/v1_rul.

[10] ICRC Report: The Missing and their Families - Summary of the Conclusions arising from Events held prior to the International Conference of Governmental and Nongovernmental Experts (19 - 21 February 2003), paragraph 104, page 90/155, https://www.icrc.org/eng/assets/files/other/icrc_themissing_012003_en_10.pdf.



Tuan Zaharan/ICRC

# 2. பின்னணித் தகவல்

இலங்கை இராணுவம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகள் ஆகியோருக்கிடையிலான ஆயுத மோதல், நாடு பூராகவும் ஆயிரக்கணக்கானவர்கள் தமது காணாமல் போன உறவினர்களைத் தேடி அலையும் ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் 1989ஆம் ஆண்டு ஐ.சி.ஆர்.சி.யின் நிரந்தர பிரசன்னம் தாபிக்கப்பட்டது முதல், அது, ஆயுத மோதலின் காரணமாக தமது உறவினர்களின் தொடர்பினை இழந்தவர்களைக் காணாமல் போனவர்களாகப் பதிவு செய்து வருகின்றது.


தேடப்படுபவர்களுக்கும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கிடையில் தொடர்பினை மீளத் தாபிக்கும் நோக்கில், ஐ.சி.ஆர்.சி.யானது, அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளிலும் தடுப்புக் காவலிடங்களிலும் மக்களைத் தேடி வந்ததுடன், அது தேடி வருபவர்களின் பெயர்ப் பட்டியல்களை மோதற் தரப்பினருக்கு வழங்கியும் வந்துள்ளது. ஐ.சி.ஆர்.சி.யானது, காயமுற்றவர்களை யுத்தப் பிரதேசத்திலிருந்து வெளியேற்றுவது தொடர்பில் மோதற் தரப்பினருடன் தொடச்சியான பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வந்ததுடன், இறந்த மனித உடலங்களைப் பரிமாற்றுவதில் நடுநிலையான ஓர் இடைத்தரகராகவும் செயற்பட்டுள்ளது. இத்தகைய முயற்சிகள் பிரிந்த குடும்ப உறுப்பினர்கள் பலருக்கிடையில் தொடர்புகளை மீளத் தாபிக்க ஐ.சி.ஆர்.சி.யை இயலச் செய்துள்ளது.

எவ்வாறாயினும், ஆயுத மோதலின் ஏதோவொரு கட்டத்தில் காணாமல் போயிருக்கக் கூடுமென அவர்களுடைய குடும்ப உறுப்பினர்களால் கருதப்பட்டு, 1989ஆம் ஆண்டு முதல் ஐ.சி.ஆர்.சி.க்கு அறிவிக்கப்பட்ட 34,000 இற்கும் அதிகமானோரில், 16,000[11] இற்கும் மேற்பட்டவர்களை இன்னும் காணவில்லை என அவர்களுடைய குடும்பத்தினர் கருதுகின்றனர்.[12] சர்வதேச அல்லது உள்நாட்டு ஆயுத மோதல், உள்நாட்டு வன்முறை அல்லது குழப்பச் சூழ்நிலை ஒன்றுடன் தொடர்புபட்ட வகையில், கிடைக்கக் கூடிய நம்பத்தகுந்த தகவல்களின் அடிப்படையில் காணாமல் போனவராக அறிவிக்கப்பட்ட நபர் எங்குள்ளார் என்பது பற்றி அவர்களது உறவினருக்குத் தெரியாமலிருக்கும் வரை அவரை ஐ.சி.ஆர்.சி. காணாமல் போன நபராக வரைவிலக்கணப்படுத்துகிறது.[13] இந்த விரிவான வரைவிலக்கணம் குறித்த நபர்கள் பலவந்தமாக காணாமல் போகச் செய்யப்பட்டவர்களா, இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன படையினரா அல்லது அவர்களது குடும்பத்தினருடனான தொடர்புகளை இழந்தமையினால் காணாமல் போயிருப்பவர்களா என்ற வேறுபாடின்றி ஆயுத மோதலுடன் தொடர்புபட்ட வகையில் காணாமல் போன சகலரையும் உள்ளடக்குவதற்கு அனுமதிக்கின்றது.

## 2.1 காணாமல் போனவர்களின் மக்கள் தொகைசார் குறிப்பு

ஐ.சி.ஆர்.சி.யுடன் பதிவு செய்யப்பட்டு இன்று வரையில் காணாமல் போனவர்களாகக் கருதப்படுகின்ற நபர்களின் மொத்த எண்ணிக்கையில்,[14] காணாமல் போகும்போது 12% ஆனோர் சிறுபராயத்தினராக (வயது 0 - 17) இருந்த அதேவேளை, பெரும்பாலானோர் விடலைப் பருவத்தினராவர். காணாமல் போனவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் அவர்கள் காணாமல் போகும்போது, 18 இற்கும் 29 வயதுக்கும் இடைப்பட்டவர்களாவர்.

**வரைபு 1: காணாமல் போகும்போது அவர்களின் வயது**




[11] இவ்வறிக்கையைத் தயாரிக்கும்போது, ஐ.சி.ஆர்.சி.யுடன் பதிவு செய்துள்ள காணாமல் போன நபர்களின் பட்டியல் 15,688 குடும்பங்களால் தேடப்படுகின்ற 16,075 நபர்களைச் சரியாகக் கொண்டிருந்தது (18 நவம்பர் 2015).


[12] ஐ.சி.ஆர்.சி.யினால் பதிவு செய்யப்பட்டுள்ள காணாமல் போன நபர்களின் பட்டியல் பூரணமானதோ புள்ளிவிபரவியல் ரீதியானதோ அல்ல. ஐ.சி.ஆர்.சி.யானது, காணாமல் போன நபர்களின் குடும்பங்கள் மற்றும் அதிகாரத் தரப்பினர் ஆகியோரினால் வழங்கப்படும் தகவல்களை அடிப்படையாகக் கொண்டே தனது பட்டியலை இற்றைப்படுத்துகின்றது.

[13] Guiding principles / Model law on the Missing, ICRC 2009, Article 2 “Definitions”, www.icrc.org/eng/resources/documents/misc/model-law-missing-300908.htm.

[14] உள்ளடக்கத்தில் அல்லது அடிக்குறிப்புக்களில் குறிக்கப்பட்டால் ஒழிய, இப்பகுதியில் தரப்பட்டுள்ள தரவுகள் ஐ.சி.ஆர்.சி.யுடன் பதிவு செய்யப்பட்டுள்ள காணாமல் போன நபர்களின் மொத்த எண்ணிக்கையுடன் தொடர்புடையவையாகும்.


காணாமல் போனவர்களில் பெரும்பாலானவர்கள் (91%) ஆண்களாவர் (இவர்களுள் 93% ஆனவர்கள் விடலைப் பருவத்தினரும் 76% ஆனவர்கள் சிறுபராயத்தினருமாவர்). காணாமல் போயிருக்கக் கூடிய விடலைப் பருவத்தினரின் மொத்த எண்ணிக்கையில் 7% ஆனவர்கள் பெண்களாகவிருக்கும் அதேவேளை, அவர்களுள் ஏறத்தாழ கால் பங்கினர் (24%) சிறுமியராவர்.

**வரைபு 2: காணாமல் போனவர்களின் வயது மற்றும் பால் அடிப்படையிலான வீதம்**





ஐ.சி.ஆர்.சி.யுடன் பதிவு செய்யப்பட்டு இன்று வரை காணாமல் போயுள்ளவர்களுடைய மொத்த எண்ணிக்கையின் புள்ளிவிபரவியல் ரீதியான விளக்கம் எடுத்துக்காட்டும் விடயம் என்னவெனில், சுமார் 60% ஆன காணாமல் போன நபர்கள் ஒன்றில் யுத்தத்தின் ஆரம்பத்தில் அல்லது இறுதிக் கட்டத்தின்போது காணாமல் போய் இன்றும் அவர்களுடைய குடும்பத்தினரால் தேடப்படுபவர்களாகவுள்ளனர் என்பதாகும் (இது முறையே 35% மற்றும் 24%).

**வரைபு 3: காணாமல் போன வருடம்**



**உரு 1: காணாமல் போன நபர்களின் மாவட்டங்கள்**




ஐ.சி.ஆர்.சி.யிடம் இருக்கக் கூடிய தரவுகள் வெளிப்படுத்தும் விடயம் யாதெனில், காணாமல் போன நபர்கள் இலங்கையின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்தவர்கள் என்பதாகும். இது இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன படையினர் மற்றும் ஏனைய காணாமல் போன நபர்கள் ஆகிய இரு பகுதியினருக்கும் பொருந்தும்.

இம்மதிப்பீட்டின் மாதிரியை தெரிவு செய்யும்போது, ஐ.சி.ஆர்.சி.யுடன் பதிவு செய்துள்ள காணாமல் போன நபர்களின் மக்கள் தொகைசார் குறிப்பினுடைய இயல்பு கருத்திற் கொள்ளப்பட்டது.

காணாமல் போனமை காரணமாக முழு நாடும் பாதிக்கப்பட்டுள்ளமையால் நாடு பூராகவும் இம்மதிப்பீட்டை மேற்கொள்வதற்கும் அனைத்து மாவட்டங்களிலுமுள்ள குடும்பங்களைச் சந்திக்கவும் ஐ.சி.ஆர்.சி. தீர்மானித்தது.



Tuan Zaharan/ICRC

# 3. மதிப்பீட்டின் நோக்கங்கள்

கடுமையான மோதல்கள் மற்றும் இராணுவ நடவடிக்கைகள் முடிவடைந்து நீண்ட காலப்பகுதியின் பின்னரும்கூட தடுத்து வைக்கப்பட்டிருந்த அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ள, காயமுற்ற அல்லது சுகவீனமுற்ற, காணாமல் போன, இறந்த அல்லது இடம்பெயர்ந்த, ஆயுத மோதலினால் பாதிக்கப்பட்ட பெண்கள் மற்றும் சிறுவர்கள் ஆகிய சில வகையான நபர்கள், சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழ் பாதுகாப்பினை அனுபவிக்க உரித்துடையவர்களாவர்.[15] இவ்வகையில் காணாமல் போன நபர்களுடைய குடும்பங்களும் ஆயுத மோதலினால் பாதிக்கப்பட்டவர்கள் என்பதுடன், அவர்களும் இத்தகைய பாதுகாப்பு மற்றும் உதவியைப் பெற்றுக் கொள்ள உரித்துடையவர்களாவர்.

காணாமல் போன நபர்களுடைய குடும்பங்கள் ஆயுத மோதலினால் பாதிக்கப்பட்ட நபர்களுள் ஓர் உப குழுவாக உள்ளடக்கப்படுவதுடன், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவர்களுடைய தேவைகளில் சில அல்லது அனைத்தும் ஏனைய பாதிக்கப்பட்டவர்களுடைய தேவைகளை ஒத்ததாக இருக்கின்றன. எனினும், காணாமல் போன தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய போதிய பதில் கிடைக்காமையினால் ஏற்படும் நிச்சயமற்ற தன்மையானது, இக்குடும்பங்களை ஏனைய பாதிக்கப்பட்டவர்களுடன் ஒப்பிடும்போது, விசேட பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கச் செய்கின்றது.

இன்று, இலங்கையிலுள்ள காணாமல் போன நபர்களுடைய குடும்பங்கள் முகங் கொடுக்கும் விசேட பிரச்சினைகள், தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகள், இருக்கக் கூடிய வளங்கள், உள்நாட்டு நியம ரீதியான வரைவுச் சட்டகங்கள், வழிவகைகள் மற்றும் சமாளித்தற் பொறிமுறைகள் என்பன இத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதுமானவையா மற்றும் கண்டறிதல்களை அடிப்படையாகக் கொண்டு, இனங்காணப்பட்ட தேவைகளைச் சிறப்பாகப் பூர்த்தி செய்வதற்கு எவ்வாறு பரிந்துரைகளை மேற்கொள்ளுவது என்பன பற்றி கற்பதே இக்குடும்பத் தேவைகள் மதிப்பீட்டின் நோக்கமாகும். இது, காணாமல் போனவர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்களுக்குச் சார்பாக இலங்கை அரசாங்கமும் ஏனைய வகிபங்குதாரர்களும் அவர்களுடைய நடவடிக்கைகளை எவ்வாறு வடிவமைப்பது என்பதற்கான பெறுமதியான அடிப்படையொன்றை வழங்கும் பொருட்டு – இக்குடும்பங்களினுடைய தேவைகள் என்ன என்ற முன்கூட்டியே உணரப்பட்ட கருத்துக்களைக் கருத்திற் கொள்ளாது – சுயாதீனமான தோற்றப்பாட்டிலிருந்து மேற்கொள்ளப்பட்டதாகும்.

இந்த மதிப்பீடு மிகக் குறிப்பாக பின்வரும் இலக்குகளைக் கொண்டுள்ளது:

1. தமது காணாமல் போன உறவினர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பதற்கான விடை கிடைக்காமல் இருப்பதன் காரணமாக ஏற்பட்டுள்ள உறுதியான பிரச்சினைகள் மற்றும் விசேட தேவைகள் என்பனவற்றை இனங்காணுதல்.

   இலங்கையிலுள்ள காணாமல் போன நபர்களுடைய குடும்பங்கள், சூழ்நிலை யாதாயினும் குறிப்பார்ந்த தன்மைகளைத் தாங்கியுள்ளதா என்பதை அடையாளப்படுத்துவதை இலக்காகக் கொண்ட இந்த மதிப்பீடானது, தமது காணாமல் போன உறவினர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பது பற்றித் தெரியாமையால் ஏற்பட்ட நிச்சயமற்ற தன்மை காரணமாக, காணாமல் போன நபர்களுடைய குடும்பங்கள் விசேட பிரச்சினைகளைக் கொண்டுள்ளார்கள் என்பதைக் கருத்திற் கொள்கிறது. மேலும், இக்குறிப்பான பிரச்சினைகளின் காரணங்கள் மற்றும் விளைவுகள் என்பனவற்றை விளங்கிக் கொள்வதையும் அவற்றை இக்குடும்பங்களின் சமூக, கலாசார மற்றும் அரசியல் சூழமைவுகளின் தோற்றப்பாடுகளிலிருந்து பகுப்பாய்வு செய்வதையும் இலக்காகக் கொண்டுள்ளது.

2. இருக்கக் கூடிய வளங்களை இனங்காணுதல்[16]
   இந்த மதிப்பீடானது, இருக்கக் கூடிய சேவைகளின் தரம் மற்றும் வினைத்திறன் உள்ளடங்கலாக காணாமல் போன நபர்களுடைய குடும்பங்களின் இனங்காணப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இருக்கக் கூடிய வளங்களின் செயற்பாட்டு இயலளவை மதிப்பீடு செய்கின்றது.

3. இந்த மதிப்பீட்டில் இனங்காணப்பட்ட காணாமல் போன நபர்களுடைய குடும்பத்தினரின் தேவைகளுக்குப் பொருத்தமான பதிலிறுப்பை வடிவமைப்பதற்கு ஏற்ற வகையில், இலங்கை அரசாங்கம் மற்றும் ஏனைய பொருத்தமான வகிபங்குதாரர்களுக்கு பரிந்துரைகளை மேற்கொள்ளுதல்.

[15] Customary International Humanitarian Law Rules 109 – 111, 112 – 116, 117, 118 – 128, 129 – 133 and 134 – 135, https://www.icrc.org/customary-ihl/eng/docs/v1_rul.
[16] உள்ளக நியம ரீதியான சட்டகம் உள்ளடங்கலாக.



Tuan Zaharan/ICRC

# 4. மதிப்பீட்டின் முறைமையியல்

## 4.1 தரவு சேகரிப்பு

சேகரிக்கப்பட்ட தரவுகளின் பரப்பெல்லையையும் அளவையும் அதிகரிப்பதற்கு உதவும் முகமாக, இம்மதிப்பீட்டில் தகவல் சேகரிப்புக்கான கலப்பு முறை பயன்படுத்தப்பட்டுள்ளது.

### இரண்டாம்நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு

காணாமல் போன குடும்பங்களின் தேவைகளை நாட்டின் அரசியல், சமூகப் பொருளாதார, சமூகக் கலாசார இயங்குநிலைகளைப் புறக்கணித்து, ஓர் வெற்றிடத்தில் பகுப்பாய்வுக்குட்படுத்த முடியாது என்பதன் காரணமாக, இலங்கையில் நடைபெற்ற மோதலின் இயல்பு மற்றும் விளைவுகள் என்பன பற்றிய நூல்கள் மற்றும் அறிக்கைகள் தொடர்பான இரண்டாம்நிலைத் தரவுகளை அடிப்படையாகக் கொண்ட ஓர் ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது.

### காணாமல் போன நபர்களின் குடும்பங்களுடனான நேர்காணல்கள்

2003ஆம் ஆண்டு ஐ.சி.ஆர்.சி.யினால் ஒழுங்கு செய்யப்பட்ட அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிபுணர்களின் சர்வதேச மாநாட்டில் காணாமல் போன நபர்களுடைய குடும்பங்களின் பின்வரும் விசேட தேவைகள் அங்கீகரிக்கப்பட்டன.[17]

- காணாமல் போன நபருக்கு என்ன நடந்தது மற்றும் அவர் எங்குள்ளார் என்பது பற்றிய தகவல்களைப் பெறுவதற்கான தேவை (குறிப்பிட்ட நபர் இறந்திருப்பின், இறந்த திகதி, இறந்த இடம், மரணம் சம்பவித்த சூழமைவு மற்றும் மனித எச்சம் இருக்கக் கூடிய இடம் என்பவற்றை அறிந்து கொள்வதற்கான தேவை)
- மரணச் சடங்குகள்/ ஞாபகார்த்த சடங்குகள் என்பவற்றை தொடர்ந்து செல்வதற்கான தேவை
- சட்ட மற்றும் நிர்வாக ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கான தேவை (அவர்களின் உரிமைகள் மற்றும் நடபடி முறைகள் பற்றிய தகவல்கள்)
- பொருளாதார மற்றும் நிதி ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கான தேவை
- உளவியல்/ சமூக–உளவியல் ஆதரவைப் பெற்றுக் கொள்வதற்கான தேவை
- பாதுகாப்பு அச்சுறுத்தல்களுக்கு எதிராக பாதுகாப்பு பெறுவதற்கான தேவை
- அவர்களால் முகம் கொடுக்கப்பட்ட துன்பங்களை அங்கீகரித்தல் மற்றும் அவற்றுக்கான நீதியை அணுகுதலுக்கான தேவை.

இலங்கையில் காணாமல் போன நபர்களின் குடும்பங்களின் நாளாந்த வாழ்க்கையில் இக்காணாமல் போதல்கள் ஏற்படுத்திய பல்வேறு விளைவுகளை ஆவணப்படுத்தும் நோக்கில், நாட்டின் அனைத்து மாவட்டங்களிலுமிருந்து காணாமல் போனவர்களின் குடும்ப உறுப்பினர்கள் 395[18] பேருடன் பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட நேர்காணல்கள் மேற்கொள்ளப்பட்டன.[19]

உளவியல், சமூக – உளவியல், பொருளாதாரம், நிர்வாகம் மற்றும் சட்டச் சிக்கல்கள் மற்றும் அவர்களது துயரங்களுக்கான அங்கீகாரம் மற்றும் நீதிக்கான அவர்களது தேவை என்பன தொடர்பில் அவர்கள் முகங் கொடுத்த சவால்கள் உள்ளடங்கலாக காணாமல் போதலுடன் தொடர்புபட்ட குடும்பங்கள் எதிர்கொண்ட பிரச்சினைகள் தொடர்பிலான மூடிய மற்றும் திறந்த வினாக்களை உள்ளடக்கிய பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட ஒரு படிவத்தை ஐ.சி.ஆர்.சி. மதிப்பீட்டாளர்கள் பயன்படுத்தினர்.

அங்கீகாரத்துக்கும் நீதிக்குமானத் தேவைகள் தொடர்பாக விசேட வினாக்கள் எதுவும் இம்மதிப்பீட்டில் கேட்கப்படவில்லை. எனினும், நேர்காணல்களின்போது இக்குடும்பங்களுக்கு இருக்கக் கூடிய முக்கியமான/ அழுத்தம்மிக்க பிரச்சினைகள்[20] தொடர்பில் அவர்களிடம் கேட்கப்பட்டபோது, இந்தக் குறிப்பிட்ட தேவைகள் தன்னிச்சையாக/ எதிர்பாராத விதமாக அவர்களால் குறிப்பிடப்பட்டன.

இம்மதிப்பீட்டுப் படிவமானது, நெகிழ்ச்சித் தன்மையுடன் கூடிய கட்டமைப்பை இணைத்த வகையில், இக்குடும்பங்களுடனான கலந்துரையாடல்களை வழிப்படுத்திய ஒரு வரைவுச் சட்டகம் என்ற அடிப்படையில், இந்த நேர்காணல்களுக்கான ஒரு ‘பிரதியாக’ப் பயன்படுத்தப்பட்டது. காணாமல் போன நபர்களின் குடும்பங்களுடனான நேரடியான நேர்காணல்கள், இக்குடும்பங்களின் இன்னல்கள் மற்றும் அவர்களின் பிரச்சினைகளை அளவுமயப்படுத்தல் என்பன தொடர்பான மேலதிகத் தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இக்குடும்பங்களின் தனிப்பட்ட அனுபவங்களுக்குப் போதுமானளவு நேரத்தை வழங்கின.

### குழுக் கலந்துரையாடல்

குழுக் கலந்துரையாடல்கள்[21] தரவுக்கான ஓர் துணை மூலமாகப் பயன்படுத்தப்பட்டது. காணாமல் போன நபர்களின் குடும்பங்களுடைய குறிப்பான தேவைகள் பற்றி ஆழமானதோர் அறிவைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன், காணாமல் போன நபர்களின் குடும்பங்களைச் சேர்ந்த குறித்த உறுப்பினர்களை (பெற்றோர்கள், மனைவிமார் போன்ற) ஒன்றிணைத்து 11 மாவட்டங்களில்[22] 17 குழுக் கலந்துரையாடல்கள் ஒழுங்கு செய்யப்பட்டன.

இக்குழுக் கலந்துரையாடல்களில் ஒவ்வொரு பங்குபற்றுநருக்கும் தமது குடும்ப உறுப்பினர் காணாமல் போனமையின் விளைவாக, தமது உறவுமுறை மற்றும் குடும்ப வகிபங்குகளில் அவர்கள் எதிர்நோக்குகின்ற மிக முக்கியமான பிரச்சினைகள் தொடர்பில் குழுவுக்குள்ளான கலந்துரையாடல்களின் இயங்குநிலைகளுக்குள் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்குச் சந்தர்ப்பம் வழங்கப்பட்டது.

தம்முடைய தேவைகளை தமது குடும்பத்தின்/வீட்டுத் துறையின் ஏனைய உறுப்பினர்கள் முன்னிலையில் வெளிப்படுத்துவதற்கு அசௌகரியமாக உணர்ந்திருக்கக் கூடிய தனிநபர்கள், குறித்த காணாமல் போன குடும்ப உறுப்பினர்களுடன் ஒன்றுகூடுவது, தமது உணர்வுகளை வெளிப்படுத்துவதற்கான மிகவும் பாதுகாப்பான சூழமைவாகக் கருதினர்.

[17] Available at: *https://www.icrc.org/eng/assets/files/other/icrc_themissing_012003_en_10.pdf.*
[18] மேலதிக விளக்கத்துக்கு மாதிரி தொடர்பான உப பிரிவைப் பார்க்க.
[19] குடும்பத் தேவைகள் மதிப்பீடு மேற்கொள்ளப்பட்ட பரப்பெல்லையைக் கீழே இணைக்கப்பட்டுள்ள படத்தில் பார்க்க.
[20] “தங்களது காணாமல் போன உறவினருக்காக எவ்வகையான நடவடிக்கை அல்லது அங்கீகாரத்தை தாங்கள் எதிர்பார்க்கின்றீர்” என்ற கேள்வி கேட்கப்பட்டது.
[21] குழுக் கலந்துரையாடல் என்பது ஒவ்வொரு பங்குபற்றுநரும் குழுவுக்குள்ளான மேலதிக இயங்குநிலையுடன் கூடிய வகையில் தமது கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படுகின்ற குழு மையப்பட்ட நேர்காணலாகும்.
[22] வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, அநுராதபுரம், கண்டி மற்றும் குருநாகல்.

ஒரு தொகுதி தேவைகளின் (பொருளாதாரத் தேவைகள், உளவியல் தேவைகள், அங்கீகாரத்திற்கான தேவைகள், சட்ட மற்றும் நிர்வாகத் தேவைகள் போன்றன) மீது கவனஞ் செலுத்தக் கூடிய கட்டமைப்பில் தமது தேவைகள் பற்றிய வெளிப்பாடுகளை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கு ஏற்கெனவே நேர்காணப்பட்ட குடும்ப உறுப்பினர்களுக்கு இக்குழுக் கலந்துரையாடல்களின் மூலம் சந்தர்ப்பமொன்று வழங்கப்பட்டது.

குடும்பத்திலுள்ள தனிநபர்களுடனான நேர்காணல்களைத் தொடர்ந்து குழுக் கலந்துரையாடல்கள் ஒழுங்கு செய்யப்பட்டன. குடும்ப நேர்காணல்கள் நிறைவுற்ற பின்பு, ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் நிரப்பப்பட்ட படிவங்களில் பொது கரிசனையாக ஏதேனும் குறிப்பான விடயங்கள் குறித்துரைக்கப்பட்டுள்ளனவா என்பதை ஐ.சி.ஆர்.சி. பகுப்பாய்வு செய்தது. உதாரணமாக, சில மாவட்டங்களில் காணாமல் போன நபர்களுடைய மனைவிமார் தமது கணவர் இல்லாமை காரணமாக, தாம் சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுதல் அல்லது பாரபட்சப்படுத்தப்படல் போன்ற பிரச்சினைகளுக்கு ஆளாகியுள்ளனர் எனத் தெரிவித்தனர். இதனைத் தொடர்ந்து, அவர்கள் தமது கரிசனைகளை மேலும் வெளிப்படுத்தவும் அவர்களுடைய சூழ்நிலைகளை ஐ.சி.ஆர்.சி. மிகச் சரியாக விளங்கிக் கொள்ளவும் கூடிய வகையில், குழுக் கலந்துரையாடல்கள் ஒழுங்குபடுத்தப்பட்டன.

மாதிரியின் அளவு மற்றும் அதன் கட்டமைப்பு என்பவற்றைத் தீர்மானிக்கின்றபோது[23] இலங்கையின் கடந்த கால மோதலுடன் தொடர்புபட்ட வகையில் காணாமல் போனவர்களாக ஐ.சி.ஆர்.சி.யில் பதிவு செய்திருந்த 325 குடும்பங்கள் வெளிநாடுகளில் வசித்து வருகின்றன. இந்த மதிப்பீட்டில் காணாமல் போன நபர்களின் எல்லா வகையான குடும்பங்களினது தேவைகளும் பிரதிநிதித்துவப்படுத்தப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு, வெளிநாட்டில் வாழக் கூடிய 06 தொடக்கம் 10 வரையான குடும்பங்களுடன் குழுக் கலந்துரையாடலொன்றை மேற்கொள்வதற்கு ஐ.சி.ஆர்.சி. திட்டமிட்டது. சுவிட்சர்லாந்து செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் சுவிட்சர்லாந்திலுள்ள பேர்ன் எனுமிடத்தில் குழுக் கலந்துரையாடலொன்றை மேற்கொள்வதற்கு காணாமல் போன நபர்களுடைய எட்டு குடும்பங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. துரதிட்டவசமாக, இக்கூட்டத்திற்கு ஒரேயொரு குடும்பம் மாத்திரமே வரக்கூடியதாக இருந்தமையால் இந்த வகையான குடும்பங்களிடமிருந்து பெற்ற தரவுகள் இம்மதிப்பீட்டில் போதுமானதாக இல்லை.

## முக்கிய வகிபங்குதாரர்கள்/ பங்குபற்றுநர்களுடனான கூட்டங்கள்

குறித்த தலைப்புகளில் ஆழமான அறிவைப் பெற்றுக் கொள்வதற்காக இம்மதிப்பீட்டின் பல்வேறுபட்ட கட்டங்களுடன் (காணாமல் போன நபர்களுக்கு என்ன நடந்தது என்பதைத் தெளிவுபடுத்தல், காணாமல் போன நபர்களுடைய குடும்பங்கள் எதிர்நோக்குகின்றன சமூக – உளவியல் பிரச்சினைகள், இக்குடும்பங்களுடைய பொருளாதார, சட்ட மற்றும் நிர்வாகச் சிக்கல்கள் மற்றும் குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பொருட்டு இருக்கக் கூடிய (இல்லாமல் இருக்கக் கூடிய) வளங்களின் விபரங்கள் பற்றிய தரவுகளைச் சேகரித்தல்) தொடர்புபட்ட விடயங்களில் விசேட அறிவைக் கொண்ட முக்கிய வகிபங்குதாரர்கள்/ பங்குபற்றுநர்கள் ஆகியோருடன் சந்திப்புக்கள் நடைபெற்றன.[24]

இவர்களுடனான கலந்துரையாடல்களில் தோன்றிய "வெளிப்படையற்ற" தகவல்களைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இக்கூட்டங்கள் முழுமையாகக் கட்டமைக்கப்படவில்லை.

இந்த முறையிலான தரவு சேகரிப்பு, குடும்பங்களில் இருந்து இனங்காணப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான வளங்களை வரைபுபடுத்த அனுமதித்தது.

# 4.2 மாதிரியின் அளவு மற்றும் கட்டமைப்பை வரையறுத்தல்

மாதிரியின் அளவு மற்றும் அதன் கட்டமைப்பை வரையறுத்த சந்தர்ப்பத்தில், இலங்கையில் கடந்த காலத்தில் ஏற்பட்ட ஆயுத மோதலில் காணாமல் போன நபர்களுடைய ஒன்றுதிரட்டப்பட்ட பட்டியல் ஒன்று காணப்படவில்லை (எதிர்காலத்தில் பூர்த்தி செய்ய வேண்டிய ஒரு பணியாகவே இது இன்னும் உள்ளது).

ஆட்கடத்தல்கள் மற்றும் காணாமல் போதல் தொடர்பான முறைப்பாடுகளை விசாரிக்கும் ஜனாதிபதி ஆணைக்குழு[25] மோதல் சூழமைவு தொடர்பில் காணாமல் போனவர்களுக்காக ஏறத்தாழ 20,000 முறைப்பாடுகளைப் பெற்றுக் கொண்டபோதிலும், ஏனைய பல மூலங்கள் இதனைவிட அதிகூடிய எண்ணிக்கையைக் காட்டுகின்றன.[26]

காணாமல் போன நபர்கள் பற்றிய ஐ.சி.ஆர்.சி. பட்டியல்[27] 15,688 குடும்பங்களிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட 16,148 காணாமல் போன நபர்களுடைய பெயர்களை உள்ளடக்கியிருந்ததுடன், இந்த எண்ணிக்கையே மாதிரி கட்டமைப்புக்கான மூலாதாரமாகப் பயன்படுத்தப்பட்டது.

இம்மதிப்பீட்டுக்கான தரவு சேகரிப்பு முறையியலானது, பண்புசார் பெறுபேறுகளின் உதவியுடன் அளவுசார் தரவுகளைப் பெற்றுக் கொள்ளும் நோக்கில், மாதிரியின் அளவைக் கணிப்பிடுவதற்கு சக்திப் பகுப்பாய்வு சூத்திரத்தைப் (Power Analysis Formula)[28,29] பயன்படுத்தியது. இதன் தவறு ஏற்படுவதற்கான எல்லை 95% நம்பிக்கை மட்டத்துடன் +/–5 என அளவிடப்பட்டது.

மேலே குறிப்பிடப்பட்ட மாறிகளைப் பயன்படுத்தி, சக்திக் கணிப்பீடானது பரிந்துரைத்தது என்னவெனில், மாதிரியின் அளவினுடைய புள்ளிவிபரவியல் பொருத்தப்பாட்டின் கட்டளைப்படிமத்தைத் திருப்திப்படுத்துவதற்கு காணாமல் போன நபர்களின் 15,688 குடும்பங்களிலிருந்து 375 குடும்பங்களை நேர்காணல்களுக்குட்படுத்த வேண்டும் என்பதாகும். இந்த மாதிரி அளவு மாதிரிக் கட்டமைப்பின் 2.39 வீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துவதனால், மாதிரியின் அடுக்கமைவில் கணிப்பீடுகளை இலகுவாக்கும் பொருட்டு, மாதிரியின் அளவு மாதிரிக் கட்டமைப்பின் 2.5 சதவீதமாக – அதாவது, காணாமல் போனவர்களின் 392 குடும்பங்கள் – அமைக்கப்பட்டது.[30]

வெறுமனே புள்ளிவிபரவியல் பொருத்தப்பாட்டினை மாத்திரமன்றி, மாறாக, ஐ.சி.ஆர்.சி.யுடன் பதிவு செய்துள்ள காணாமல் போன நபர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களின் மொத்த எண்ணிக்கையினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும் மாதிரியினைத் தெரிவு செய்யும் பொருட்டு, காணாமல் போன நபர்களின் குடும்பங்களின் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் என்பவற்றின் மீது குறிப்பாகச் செல்வாக்குச் செலுத்தக் கூடிய மூலக்கூறுகளை அடிப்படையாகக் கொண்டு, மாதிரிக் கட்டமைப்பை வரையறுப்பதற்காகப் பின்வரும் கட்டளைப்படிமம் தெரிவு செய்யப்பட்டது (மாதிரி கட்டமைப்பில் பயன்படுத்தப்பட்ட மக்கள் தொகைசார் குறிப்பு அடிப்படையிலான பகுப்பாய்வுக்கான அடிப்படை என்ற வகையில், அதன் பெறுபேறுகளைப் பயன்படுத்தி இது மேற்கொள்ளப்பட்டது):

[23] மேலதிகத் தகவல்களுக்காக பிரிவு 4.2 ஐப் பார்க்க

[24] ஐ.சி.ஆர்.சி.யானது, தேசிய மற்றும் பிராந்திய மட்டத்திலான அதிகாரத் தரப்பினர், சர்வதேச அரச சார்பற்ற நிறுவனம்/ அரச சார்பற்ற நிறுவனங்கள், கல்வியியலாளர்கள், ஆய்வாளர்கள் மற்றும் நிபுணர்களைச் சந்தித்தது.

[25] *www.pcicmp.lk, accessed in December 2015.*

[26] பாதிக்கப்பட்டோரின் சங்கங்கள், பத்திரிகைக் கட்டுரைகள் போன்றன.

[27] காணாமல் போன நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் சார்பான ஐ.சி.ஆர்.சி.ப் பணியின் பிரதான இலக்கு, காாணமல் போன நபர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பதைத் தெளிவுபடுத்தும் செயன்முறைக்கும் அக்குடும்பங்களுக்கும் ஆதரவளிப்பதோ அல்லது அதில் ஈடுபடுவதோ ஆகும்.


[28] *http://www.surveysystem.com/sscalc.htm.* இலிருந்து பெறப்பட்டது

[29] Recommended by WHO, "Mental Health and Psychosocial Situation and Needs Assessments in Major Humanitarian Crises: WHO Toolkit for Humanitarian Health Actors" – January 2010, http://mhpss.net/resource/who-toolkit-for-humanitarian-health-actors/.

[30] மாதிரியின் புள்ளிவிபரவியல் பொருத்தப்பாட்டை உறுதிப்படுத்துவதற்கு, மாதிரி அளவு மற்றும் கட்டமைப்பைப் பரீட்சித்தபோது, மொத்த மாதிரியின் அளவை 395 குடும்பங்களாக்குவதற்காக மேலும் மூன்று குடும்பங்கள் சேர்த்துக் கொள்ளப்பட தீர்மானிக்கப்பட்டது.

- புவியியல் அடிப்படை: காணாமல் போன நபர்களின் குடும்பங்கள் பற்றிய ஐ.சி.ஆர்.சியின் பட்டியலின் பகுப்பாய்வு சுட்டிக்காட்டும் விடயம் என்னவெனில், காணாமல் போன நபர்களுடைய குடும்பங்கள் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் வாழும் அதேவேளை, வெளிநாடுகளிலும் வாழ்கின்றன என்பதாகும். மாவட்டம் மற்றும் வெளிநாடு என்பவற்றுக்கேற்ப மாறுபடுகின்ற சமூகப் பொருளாதார சூழ்நிலை காரணமாக, பதில்களில் செல்வாக்குச் செலுத்தக் கூடிய மூலக்கூறாக புவியியல் பரம்பல் இருப்பதாகக் கருதப்படுவதால் இலங்கையின் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள குடும்பங்களை நேர்காணவும் வெளிநாட்டில் வாழ்பவர்களுக்காக குழுக் கலந்துரையாடலொன்றை ஒழுங்குபடுத்தவும் தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இருக்கக் கூடிய குடும்பங்களின் மொத்த எண்ணிக்கையில் 2.5 சதவீதமானது, குறித்த மாவட்டத்தின் புள்ளிவிபரவியல் ரீதியாகப் பொருத்தப்பாடுடைய மாதிரி அளவுக்கான பெறுமானமாகப் பெறப்பட்டது. வெளிநாட்டில் வாழும் குடும்பங்களின் ஒரு குழுவுடன் குழுக் கலந்துரையாடலொன்றை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டது.[31]
- காணாமல் போன நபர்களின் பால்: ஐ.சி.ஆர்.சி.யுடன் பதிவு செய்துள்ள காணாமல் போன நபர்களின் குடித்தொகைசார் குறிப்பு பற்றிய பகுப்பாய்வு வெளிப்படுத்துவதன்படி, காணாமல் போன நபர்களில் பெரும்பாலானோர் ஆண்கள் என்பதன் காரணமாக, ஓர் ஆண் அல்லது ஒரு பெண் காணாமல் போயிருக்கின்றபோது, அக்குடும்பங்களின் தேவைகள் மீது ஏற்படுத்துகின்ற தாக்கங்களில் வித்தியாசங்கள் உள்ளனவா மற்றும் அவ்வாறாயின், அந்த வேறுபாடுகள் யாவை என்பவற்றை அறிந்து கொள்வதற்காக மாதிரியைக் கட்டமைப்பதற்கு இந்தக் கட்டளைப்படிமம் பயன்படுத்தப்பட்டது.

**உரு 2: மாவட்ட அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல்களின் எண்ணிக்கை**




[31] மாதிரியின் அளவு மற்றும் கட்டமைப்பை வரையறை செய்தபோது, காணாமல் போன நபர்களின் 325 குடும்பங்கள் வெளிநாட்டில் வசித்து வந்தன. சுவிட்சர்லாந்தில் மாத்திரமே அங்கு வசித்து வருகின்ற குடும்பங்களுடன் குழுக் கலந்துரையாடலை அமைக்கக் கூடியவாறு அக்குடும்பங்கள் மிக அருகாமையில் வசித்து வந்தன. சுவிஸ் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஒத்துழைப்புடன் காணாமல் போன நபர்களின் எட்டு குடும்பங்கள் சுவிட்சர்லாந்திலுள்ள பேர்ன் நகருக்கு குழுக் கலந்துரையாடலுக்காக அழைக்கப்பட்டன. துரதிட்டவசமாக, இக்கூட்டத்திற்கு ஒரு குடும்பத்தினால் மாத்திரமே வரக்கூடியதாக இருந்தமையால் இத்தகைய குடும்பங்களிலிருந்து பெறப்பட்ட தரவுகள் இம்மதிப்பீட்டிற்குப் போதுமானதாக இருக்கவில்லை.

- இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போனவர்களும் ஏனைய காணாமல் போன நபர்களும்: காணாமல் போன நபர்களின் குடும்பங்களுடனான ஐ.சி.ஆர்.சி.யின் இடைவினைகளிலிருந்து இந்த இரண்டு வகையான உப குழுக்களின் தேவைகளுக்கிடையில் தெளிவான வேறுபாடொன்று உள்ளமை தெரிகின்றது. குடும்பங்களினுடைய தேவைகள் மதிப்பீட்டில் இந்த இரு உப குழுக்களின் தற்போதைய தேவைகள் மற்றும் அத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு இருக்கக் கூடிய சேவைகள் என்பவற்றின் சாத்தியமான மாறுபாடுகளைச் சிறப்பாக விளங்கிக் கொள்வதற்கேற்ற வகையில் இந்த வகைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. முழுப் பதிவுகளையும் பிரதிபலிக்கும் வகையில், இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன நபர்களின் குடும்பங்கள் மற்றும் ஏனைய காணாமல் போன நபர்களின் குடும்பங்கள் என்பவற்றுக்கிடையிலான விகிதத்தை[32] பேணும் வகையில் இம்மாதிரி தெரிவு செய்யப்பட்டது (முறையே 33% இலிருந்து 67%).
- காணாமல் போன நபருடைய இனத்துவம்: இனத்துவமானது, காணாமல் போன நபர்களின் குடும்பங்களின் சேமநலனுக்கு ஒத்துழைக்கக் கூடிய அல்லது தீர்மானிக்கக் கூடியதான சமூக, கலாசார மற்றும் மத நடைமுறைகளில் செல்வாக்குச் செலுத்தக் கூடியதாகும். இந்த எதிர்வுகூறலுடன், இனத்துவமானது, கருத்திற் கொள்ளப்பட வேண்டிய முக்கியமானதொரு மூலக்கூறாகப் பயன்படுத்தப்பட்டது. எனவே, இந்த மாதிரியானது, காணாமல் போன நபர்கள் மற்றும் அவர்களுடைய குடும்பங்கள் பற்றிய ஐ.சி.ஆர்.சி.யின் பட்டியலிலுள்ள தரவுகளின்படி பதிவு செய்தவர்களின் இனத்துவ வீதாசாரத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கட்டமைக்கப்பட்டது.

இந்த மட்டத்திலான அடுக்கமைவானது, காணாமல் போன திகதி போன்ற ஏனைய மூலக்கூறுகளைக் கருத்தில் எடுப்பதற்கு அனுமதிக்கவில்லை. எனினும், எழுந்தமான தெரிவின்போது, மோதல்கள் ஏற்பட்ட அனைத்துக் காலப்பகுதிகளையும் பிரதிபலிப்பதனை உறுதிப்படுத்துகின்ற வகையில் இக்கட்டுப்பாடு மேற்கொள்ளப்பட்டது.

குடும்பத்தின் இடவமைவு, காணாமல் போன நபரின் பால், குறிப்பிட்ட நபர் இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போனவரா அல்லது வேறு சந்தர்ப்பத்திலா மற்றும் காணாமல் போன நபரின் இனத்துவம் ஆகிய விடயங்களின் அடிப்படையில் மாதிரி அடுக்கமைக்கப்பட்ட பின்னர், எழுந்தமான மாதிரி தெரிவைப் பயன்படுத்தி நேர்காணலுக்கான குடும்பங்கள் எழுந்தமானமாகத் தெரிவு செய்யப்பட்டன.

இதன் விளைவாக, குடும்பத் தேவைகள் மதிப்பீட்டின்போது, அக்டோபர் 2014 மாதம் முதல் செப்டெம்பர் 2015 வரையான காலப்பகுதியில் மொத்தமாக காணாமல் போன நபர்களின் 395 குடும்பங்கள் நேர்காணலுக்குட்படுத்தப்பட்டன.


## 4.2.1 தேவைகள் மதீப்பீட்டின் மாதிரி விபரம்

இந்த மதிப்பீட்டிற்காக நேர்காணப்பட்ட 395 குடும்பங்கள் வழங்கிய தகவல்கள் மற்றும் நேர்காணப்பட்ட குடும்பங்களின் தரவுகள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு காணாமல் போன நபர்களுடன் தொடர்புடைய விபரங்களை இப்பகுதி தருகிறது.

## காணாமல் போன வருடம்

ஏற்கெனவே குறிப்பிட்டதுபோன்று, காணாமல் போன வருடத்தின் அடிப்படையில் மாதிரித் தெரிவு அடுக்கமைக்கப்படவில்லை. எனினும், மாதிரியின் மக்கள் தொகைசார் குறிப்பு பற்றிய பகுப்பாய்வு வெளிப்படுத்துகின்ற விடயம் என்னவெனில், இம்மதிப்பீட்டின் நோக்கத்திற்காக பயன்படுத்தப்படுகின்ற மாதிரியானது, மோதலின் அனைத்து காலகட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதுடன், மோதல் முடிவுற்ற பின்னரும் மோதலுடன் தொடர்புபட்ட வகையில் காணாமல் போன நபர்களையும் உள்ளடக்குகின்றது என்பதாகும்.

**வரைபு 4: காணாமல் போன வருடம்**





[32] காணாமல் போன நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் தொடர்பான ஐ.சி.ஆர்.சி.யின் பட்டியலிலிருந்து கிடைக்கக் கூடிய தகவல்களின் அடிப்படையில்.

## காணாமல் போன நபர்களின் வயது

நேர்காணப்பட்ட 395 குடும்பங்களில் 75 சதவீதமான குடும்பங்கள் தமது காணாமல் போன உறவினர் 19 இற்கும் 36 வயதுக்கும் இடைப்பட்ட வயதினர் எனக் குறிப்பிட்ட அதேவேளை, 11% ஆனவர்கள் தமது உறவினர்கள் காணாமல் போகும்போது அவர்கள் சிறுபராயத்தினராக இருந்தனர் எனக் குறிப்பிட்டன.


**வரைபு 5: காணாமல் போன சந்தர்ப்பத்தில் காணாமல் போனவர்களின் வயது**




## நேர்காணப்பட்ட குடும்பங்கள்

நேர்காணப்பட்ட அனைவரும் காணாமல் போன நபருடைய நெருங்கிய குடும்ப உறுப்பினர்களாவர். கீழே தரப்பட்ட வரைபு நேர்காணலில் ஈடுபட்ட நபருக்கும் காணாமல் போன நபருக்கும் இடையிலான உறவுமுறையின் சதவீதத்தினைக் குறிப்பிடுகின்றது. எவ்வாறாயினும், இங்கு குறிப்பிட வேண்டிய முக்கியமானதொரு விடயம் என்னவெனில், நேர்காணலின்போது ஏனைய குடும்ப உறவினர்களும் அங்கு இருந்ததுடன், இம்மதிப்பீட்டிற்கும் பங்களிப்புச் செய்திருந்தனர் என்பதாகும்.

**வரைபு 6: காணாமல் போனவருக்கும் நேர்காணப்பட்டவருக்குமிடையிலான உறவுமுறை**




அட்டவணை 1இல் தரப்பட்டவாறு, நேர்காணப்பட்டவர்களில் 16% ஆன குடும்பங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் காணாமல் போயுள்ளனர்.

நேர்காணப்பட்ட அனைத்துக் குடும்பங்களிலும் 62% ஆனவர்கள் தம்மை தமிழர்களாகப் பிரகடனப்படுத்திய அதேவேளை, 35% ஆனவர்கள் சிங்களவர்களாகவும் 3% ஆனவர்கள் முஸ்லிம்களாகவும் தம்மை பிரதிநிதித்துவப்படுத்தினர்.

**அட்வணை 1 : குடும்பத்தில் காணாமல் போன நபர்களின் எண்ணிக்கை**

| குடும்பத்தில் காணாமல் போனவர்களின் எண்ணிக்கை | நேர்காணப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை |
|---|---|
| 1 | 332 |
| 2 | 48 |
| 3 | 11 |
| 4 | 2 |
| 5 | 1 |
| 6 | 1 |


Tuan Zaharan/ICRC


# 05. மதிப்பீட்டின் கண்டறிதல்கள்

இலங்கையில் குடும்பத் தேவைகள் மதிப்பீடு நடைபெற்றபோது, காணாமல் போன நபர்களின் குடும்பங்களுக்கு இருந்த தேவைகள் தொடர்பான கண்டறிதல்களை அறிக்கையின் இப்பகுதி விபரிக்கின்றது. மேலும், இவ்வறிக்கை இனங்காணப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு கிடைக்கக் கூடிய வளங்களைப் பற்றியும் எடுத்துக்காட்டுகிறது.

தேவைகள் காலத்திற்குக் காலம் மாறுபடக் கூடியன என்பதையும் அவை பல புறக்காரணிகளினால் செல்வாக்குச் செலுத்தப்படும் என்பதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது. "தாம் வாழ்கின்ற கலாசாரம் மற்றும் சமூகச் செல்வாக்கு என்பவற்றிலும் காணாமல் போனவருடன் இருக்கக் கூடிய உறவுமுறைக்கேற்பவும் காணாமல் போன நபர்களுடைய உறவினர்கள் பாதிக்கப்படுகின்ற தன்மை தங்கியிருக்கும்."[33] வேறுவார்த்தைகளிற் கூறுவதாயின், காணாமல் போன நபர்களுடைய குடும்பத்தினரால் இன்று வெளிப்படுத்தப்படும் தேவைகள் நாளை வேறுபடலாம் என்பதுடன், காணாமல் போன நபருடனான உறவுமுறை, கலாசாரப் பின்னணி, சமூகத்தில் ஏற்படுகின்ற மாற்றங்கள் போன்ற காரணிகளினால் அவை செல்வாக்குச் செலுத்தப்படலாம்.

மனிதத் தேவைகளின் படிமுறை என்ற கோட்பாட்டில் ஆப்ரஹாம் மஸ்லோ, ஒரு மனிதன் தன்னுடைய கீழ்மட்ட, அடிப்படைத் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் சந்தர்ப்பத்தில் மாத்திரமே அவன் அடுத்த கட்ட உயர்மட்டத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் உந்தப்படுவான் என வாதிடுகின்றார்.[34] இந்த அணுகுமுறை காணாமல் போன நபர்களின் குடும்பத்தினரின் தேவைகளைப் பற்றி விளங்கிக் கொள்வதற்கு உதவும்.[35]

**உரு 3: மஸ்லோவின் தேவைகள் பற்றிய படிமுறை**




அடிப்படைத் தேவைகள் உடலியல் ரீதியானத் தேவைகள் என்பதுடன், அவை பாதுகாப்புடனும் தொடர்புபடுகின்றன. மதிப்பீட்டில் கண்டறியப்பட்டதற்கேற்பவும் ஏனைய பகுதிகளிலுள்ள ஐ.சி.ஆர்.சி.யின் அனுபவத்திற்கேற்பவும் காணாமல் போன நபர்களுடைய குடும்பங்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் தமது குடும்பத்துக்கு வருமானம் ஈட்டுபவராகவிருந்திருக்கக் கூடிய காணாமல் போனவர் தற்போது இல்லாதபோதிலும், முதலாவதாக தமக்கு உணவு மற்றும் இருப்பிடம் என்பன இருக்கின்றனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளவே முயற்சிப்பர். இந்தக் கோட்பாட்டின்படி, மனிதனொருவன் அடிப்படை உடலியல் மற்றும் பாதுகாப்புத் தேவைகளில் திருப்தியடைகின்ற சந்தர்ப்பத்தில் மாத்திரமே அவன் அங்கீகாரம் மற்றும் மதிப்பு என்பவற்றுக்கானத் தேவைகள் பற்றிச் சிந்திப்பான்.

இம்மதிப்பீட்டின்போது, காணாமல் போன நபர்களின் குடும்பங்கள் வெளிப்படுத்திய தேவைகள் பின்வருமாறு பரந்தளவில் வகைப்படுத்தப்படுகின்றன:[36]

- காணாமல் போன நபருக்கு என்ன நடந்தது மற்றும் அவர் எங்குள்ளார் என்பது பற்றியும் அவர்களது காணாமல் போதலுக்கான சூழமைவு பற்றியும் அறிந்து கொள்வதற்கான தேவை
- மனவெழுச்சிசார் தேவைகள்
- பொருளாதாரத் தேவைகள்
- சட்ட மற்றும் நிர்வாகத் தேவைகள்
- அங்கீகாரத்துக்கும் நீதிக்குமானத் தேவைகள்

ஒவ்வொரு குடும்பமும் தம்முடைய சொந்த அனுபவத்தின் அடிப்படையில் தமக்கு இருக்கக் கூடிய மிக முக்கியமான தேவையை வரையறை செய்தனர் என்பதை குறித்துரைக்க வேண்டியது முக்கியமானதாகும். ஒவ்வொரு குடும்பத்தினருக்குமான தேவை ஒரு குறிப்பிட்ட பகுதியாகவோ அல்லது எல்லாப் பகுதிகளினதும் கூட்டிணைவாகவோ அல்லது அவற்றில் சிலவாகவோ இருக்கலாம். மேலும், காணாமல் போனவர்களின் குடும்பத்தினருக்கான தேவைகள் கால மாற்றத்துக்கேற்ப மாறுபடுகின்றன. உதாரணமாக, ஒரு கட்டத்தில் மிகவும் அவசியத் தேவையாக இருப்பது என்னவெனில், காணாமல் போனவரை உயிருடன் தேடியவர்கள், கால மாற்றத்துக்கேற்ப இறந்த உடலின் மனித எச்சங்கள் எங்குள்ளன என்பதை அறிந்து கொள்வதற்கான தேவையைக் கொண்டவர்களாக மாறியிருப்பர் என்பதாகும்.

[33] ICRC Report: The Missing and their Families - Summary of the Conclusions arising from Events held prior to the International Conference of Governmental and Nongovernmental Experts (19 - 21 February 2003), paragraph 104, page 90/155, *https://www.icrc.org/eng/assets/files/other/icrc_themissing_012003_en_10.pdf.*
[34] Maslow, A.H. (1943). "Psychological Review 50 (4) 370–96 - A theory of human motivation", *http://dx.doi.org/10.1037/h0054346.*
[35] Robins, S. (2013), "Families of the Missing: A Test for Contemporary Approaches to Transitional Justice", Routledge, ISBN 978.0-415-81248-1 (hbk).
[36] இங்கு பட்டியல்படுத்தப்பட்டுள்ள தேவைகள் குடும்பங்களினால் தெரிவிக்கப்பட்ட முக்கியத்துவ ஒழுங்கினைப் பிரதிபலிப்பதாகவன்றி, மாறாக, தரவு சேகரிப்புக்காகப் பயன்படுத்தப்பட்ட பகுதியளவில் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் படிவத்தின் ஒழுங்கினையே பின்பற்றுகிறது.

இந்த மதிப்பீட்டின்போது, நேர்காணப்பட்ட குடும்பங்களிடம் அந்தச் சமயத்தில் அவர்கள் எதிர்நோக்குகின்ற பிரதான பிரச்சினைகள் யாவை எனக் கேட்கப்பட்டது. இந்த வினாவுக்கு அவர்கள் தமக்குத் தேவையானபடி பல விடயங்களையோ அல்லது சில பதில்களையோ வழங்கக் கூடியதாக இருந்தது. இந்த வினாவுக்கு விடையளிக்கும்போது, மிகக் கடினமான பொருளாதார சூழ்நிலைகளில் தாம் இருப்பதாகவும் (நேர்காணப்பட்ட குடும்பங்களில் 53 வீதமானவர்கள் குறைந்தபட்சம் தமக்கு இருக்கக் கூடிய பிரச்சினைகளில் ஒன்றாக இதனைக் குறிப்பிட்டனர்) தமது காணாமல் போன உறவினருக்கு என்ன நடந்தது என்பது பற்றிய பதில் இல்லாமையின் காரணமாக, பல அழுத்தம்மிக்க மனவெழுச்சிசார் சிக்கல்களை எதிர்கொள்வதாகவும் குறிப்பிட்டனர் (நேர்காணப்பட்டவர்களில் 36 வீதமான குடும்பங்கள் தமது விடைகளில் ஒன்றாக இதனைக் குறிப்பிட்டனர்).

தமது தேவைகளைச் சிறந்த வகையில் பூர்த்தி செய்வதற்கு அதிகாரத் தரப்பினரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகின்ற செயற்பாடு என்ன எனக் கேட்டபோது, குடும்பங்கள் வெளிப்படுத்திய முன்னுரிமைகள் வேறுபட்டன. நேர்காணப்பட்ட குடும்பங்களில் முப்பத்தாறு சதவீதமானவர்கள் குறைந்தபட்சம் ஒரு முறை தமது உறவினருக்கு என்ன நடந்தது மற்றும் அவர் எங்குள்ளார் என்பதற்கு விடை கிடைக்குமாயின், தம்முடைய தற்போதைய துரதி'டவசமான சூழ்நிலை மாறிவிடும் எனக் குறிப்பிட்ட அதேவேளை, 31% ஆனவர்கள் நிதியியல் உதவியை எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டனர்.

முடிவாக, இக்குடும்பங்கள் கடினமான பொருளாதார சூழ்நிலையை எதிர்நோக்கியபோதிலும், தமது உறவினருக்கு என்ன நடந்தது மற்றும் அவர் எங்குள்ளார் என்பது பற்றிய தகவலைப் பெற்றுக் கொள்ளுதலையே தமது முதன்மைத் தேவையாகக் குறிப்பிட்டனர்.

**"என்னுடைய காணாமல் போன மகன் தொடர்பாக தெளிவான பதிலொன்று எனக்குத் தேவை. அவர் எங்கோ ஓரிடத்தில் உயிரோடு இருப்பதாக நான் இன்னும் எதிர்பார்க்கிறேன். அவர் விரைவில் திரும்பி வருவார். அரசாங்கமே காணாமல் போன நபர்களுடைய குடும்பங்களுக்கு ஆதரவாக இருக்க வேண்டும். அவர்களே எமக்கு பதிலளிப்பதற்குப் பொறுப்பானவர்களாவர்"**


**- காணாமல் போன நபர் ஒருவரின் தாயார் -**

## 5.1 காணாமல் போன தமது உறவினர்கள் எங்குள்ளார்கள் மற்றும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பவற்றை அறிந்து கொள்வதற்கான குடும்பங்களின் தேவை

காணாமல் போன உறவினர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார் என்பது தொடர்பான நிச்சயமற்ற தன்மை, அவர்களது குடும்பங்களுக்கு காணாமல் போனவர் பௌதீக ரீதியாக இல்லாவிட்டாலும், உளவியல் ரீதியாக இருக்கின்றார் என்பதையே உருவாக்குகிறது.[37]

இம்மதிப்பீட்டின்போது, காணாமல் போன நபர்களுடைய குடும்பங்களிடம் தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றி இருக்கின்ற உள்ளார்ந்த நம்பிக்கையை வெளிப்படுத்துமாறு கேட்கப்பட்டது. தமது அன்புக்குரியவர்கள் இறந்துவிட்டதாகக் கருதுகின்ற நேர்காணப்பட்ட குடும்பங்கள் (36%) விசேட சூழமைவுகள் ("சில நேரம் அவர்கள் உயிரோடு இருக்கலாம்") தொடர்பில் நீண்டகால நம்பிக்கையைக் கொண்டுள்ள அதேவேளை, தமது அன்புக்குரியவர்கள் உயிரோடு இருக்கின்றார்கள் எனத் தம்மை சமாதானப்படுத்திக் கொண்டவர்கள் (31%) துரதி'ட சூழமைவுக்கான சாத்தியம் மற்றும் சந்தேகம் (சில வேளைகளில் உறவினர் இறந்திருக்கலாம்) என்பவற்றுடன் வாழ்ந்து வருகின்றன. தமது காணாமல் போன உறவினருக்கு என்ன நடந்தது, அவர்கள் எங்குள்ளார்கள் மற்றும் அவர்கள் காணாமல் போன சூழ்நிலைகள் என்பன பற்றிய நம்பகரமான தகவல்கள் கிடைக்கும் வரையில் இக்குடும்பத்தினர் தொடர்ந்தும் நிச்சயமற்ற தன்மையுடனேயே வாழ்ந்து வருவர்.

**வரைபு 7: தமது காணாமல் போன உறவினர்களுக்கு என்ன நடந்திருக்கலாம் என்பது தொடர்பான குடும்பங்களின் உளப்பாங்கு**




குடும்பங்களுடைய தோற்றம் மற்றும் பின்னணி எதுவாகவிருப்பினும், தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பதை அறிந்து கொள்வதே வழமையாக காணாமல் போனவர்களின் குடும்பங்களின் மிக முக்கியத் தேவைகளில் ஒன்றாகவிருக்கும். மோதலின்போது காணாமல் போனவர் எந்த அரசியல் இணைவைக் கொண்டிருந்தாலும், மனைவி ஒருவருக்கு அவரது கணவருக்கு என்ன நடந்தது என்பதை அறிந்து கொள்ளாமையால் ஏற்படுகின்ற வலியானது பொதுவானதாகவே இருக்கும்.

**"போர் முடிந்துவிட்டமையாலும் அவர் வீட்டிற்குத் திரும்பி வராமையாலும் மாத்திரம் எனது கணவர் உயிருடன் இல்லை என்பதை என்னால் நம்ப முடியாது. நான் அவருடைய இறந்த உடலை பார்க்கவில்லை. அவர் எங்கேயாவது உயிரோடு இருப்பதாகவே நான் நம்புகிறேன். அவர் காணாமல் போய் 8 வருடங்கள் ஆகின்றமையால், அவர் உயிரோடு இருந்திருந்தால் எப்படியாவது திரும்பி வந்திருப்பார் என சில வேளைகளில் நினைப்பதுண்டு. அவர் உயிரோடு இருக்கிறாரா அல்லது இறந்துவிட்டரா என்பது பற்றி எனக்கு நிச்சயமாகத் தெரியாது"**

**- காணாமல் போன ஒருவரின் மனைவி -**

காணாமல் போன தமது உறவினருக்கு என்ன நடந்தது என்பது பற்றி அனைத்து குடும்பங்களும் ஒரே மாதிரியான உள்ளார்ந்த நம்பிக்கையைக் கொண்டிருப்பதில்லை. காணாமல் போய் எவ்வளவு காலம் கடந்துவிட்டது, கிடைக்கப் பெற்ற தகவல் (அல்லது கிடைக்கப் பெறாத தகவல்), தனிப்பட்ட மனவெழுச்சிசார் சமாளித்தற் பொறிமுறைகள் போன்ற பல்வேறு மாறிகள் இக்குடும்பங்களின் உள்ளார்ந்த நம்பிக்கையைத் தீர்மானிக்கின்றன.

இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன படையினரின் குடும்பங்கள் மற்றும் ஏனைய காணாமல் போன நபர்களுடைய குடும்பங்கள் என்பவற்றுக்கிடையில் காணாமல் போனவருக்கு என்ன நடந்தது என்பது பற்றி இருக்கக் கூடிய உள்ளார்ந்த நம்பிக்கையில் தெளிவான வேறுபாடுகள் காணப்படுகின்றமையை இம்மதிப்பீடு கண்டறிந்துள்ளது. இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன படையினரின் குடும்பத்தினரில் 9% ஆனவர்கள் மாத்திரமே தமது அன்புக்குரியவர் உயிரோடு இருப்பதாக நம்புகின்ற அதேவேளை, இந்த சதவீதம் ஏனைய காணாமல் போனவர்களின் குடும்பங்களைப் பொறுத்தவரை 43% ஆக மாற்றமடைகின்றது.

[37] Pauline Boss – Ambiguous loss in families of the missing, P39. The LANCET Supplement, Medicine and Conflict, Vol 360, December 2002.

தமது காணாமல் போன உறவினர்கள் பற்றி வேறு வகையாக சிந்திப்பதற்கு போதுமான நம்பத்தகுந்த தகவல்கள் இல்லாத காரணத்தினால், தமது உறவினர்கள் இன்னும் உயிரோடு இருக்கின்றார்கள் எனத் தாம் நம்புவதாக இக்குடும்பங்கள் விபரித்தன. சில குடும்பங்கள், தமது காணாமல் போன உறவினர்களின் இறந்த உடலைக் காணாத காரணத்தினால் அவர்கள் உயிருடன் இருப்பதாகக் கருதுகின்ற அதேவேளை, சிலர் ஆரூடம் கூறுபவர்கள் அவர்களுடைய அன்புக்குரியவர்கள் இன்னும் உயிரோடு இருக்கிறார்கள் எனக் குறிப்பிட்ட காரணத்தினால் அவ்வாறு நம்புகின்றனர். சில குடும்பங்களில் காணாமல் போன உறவினர்கள் இன்னும் உயிரோடு இருக்கின்றார்கள் என்ற நம்பிக்கையை அவர்களது மதமானது மேலும் வலுப்படுத்தியும் ஊட்டியும் வருகின்றது. தமது அன்புக்குரியவர்கள் யுத்தத்தின்போது எதிர்த் தரப்பிடம் சரணடைந்தனர் அல்லது அவர்களால் கைப்பற்றப்பட்டனர் எனக் குறிப்பிடுகின்ற பல குடும்பங்கள், தமது அன்புக்குரியவர்கள் இரகசிய தடுப்புக் காவலிடங்களில் வைக்கப்பட்டிருப்பதால் அவர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என இன்னும் நம்புகின்றனர்.

**"என்னுடைய கணவர் இன்னும் உயிரோடு இருக்கிறார் என நான் உறுதியாக நம்புகிறேன். பலர் அவர் இராணுவத்திடம் சரணடைவதைக் கண்டுள்ளதுடன், விடுதலைப் புலி உறுப்பினர்களை அடையாளம் காட்டுவதற்காக இராணுவத்தினால் கூட்டிச் செல்லப்பட்டதாகக் கிராமத்தவர்கள் என்னிடம் குறிப்பிட்டனர். இராணுவத்திடம் சரணடைந்தவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டிருப்பதனால் அவரும் இரகசிய தடுப்புக் காவலில் எங்கேனும் உயிருடன் இருக்க வேண்டும். இதைவிட, அவர் கச்சேரிக்கு முன்பாக நிற்கின்ற அவருடைய புகைப்படம் ஒன்று பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அவர் உயிரோடு இருக்கின்றார் என்பது எனக்கு நிச்சயம்"**

**- காணாமல் போன நபரின் மனைவி -**

**"என்னுடைய மகனின் உடலை நான் பார்க்கவில்லை. அவர் இறந்தமைக்கான சான்று இல்லை. இந்தியாவில் விடுதலைப் புலிகளால் பாதுகாப்புப் படையினர் பலர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருப்பதான வதந்திகளை நானும் கேட்டுள்ளேன். என்னுடைய மகனும் அங்குதான் இருக்க வேண்டும். அவர் உயிரோடு இருக்கின்றார்"**

**- காணாமல் போன நபருடைய தாயார் -**

இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன படையினரின் குடும்பத்தினரிடம் சம்பந்தப்பட்ட ஆயுத படைகளின் (இராணுவம், கடற்படை மற்றும் விமானப்படை) பிரதிநிதியொருவர் விஜயம் செய்து, அவர்களது உறவினர்(கள்) காணாமல் போனமை பற்றிய செய்தியைத் தெரிவித்துள்ளனர். அவர்களுக்கு (காணாமல் போனமை இராணுவச் செயற்பாட்டிலா, தாக்குதலின்போதா அல்லது சண்டையின்போதா என்பது தொடர்பான) மேலதிகத் தகவல்களும் வழங்கப்பட்டுள்ளதுடன், சில சம்பவங்களில் காணாமல் போன சூழமைவை வழங்கக் கூடியதான சம்பவங்களை நேரில் கண்ட சாட்சியங்களும் தெரிவிக்கப்பட்டன. நேர்காணப்பட்ட இராணுவச் செயற்பாட்டில் காணாமல் போனவர்களின் குடும்பங்களில் ஐம்பத்தி ஏழு சதவீதமானவர்கள், ஆயுதப் படையினரின் இந்த நடைமுறை காரணமாக, தமது காணாமல் போன உறவினர் இறந்திருக்கலாம் என நம்புவதாகத் தெரிவித்தனர். இக்குடும்பங்களை அணுகியபோது, அவர்களைச் சந்தித்த பிரதிநிதியினால் மேலதிக விசாரணைகள் நடத்தப்படும் என உத்தரவாதப்படுத்தப்பட்டது. எவ்வாறாயினும், இந்த பதிலுடன் அனைத்துக் குடும்பங்களும் முழுமையாகத் திருப்தியடைந்தன என்று அர்த்தப்படாது. மாறாக, இது தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பதை ஏற்றுக் கொள்வதனை வசதிப்படுத்தக் கூடிய தகவல் வழங்கப்பட்டமையின் மூலம் சிலர் ஆறுதலடைந்தமையை அடையாளப்படுத்தியது.

இதற்கு மாறாக, நேர்காணப்பட்ட ஏனைய காணாமல் போன நபர்களின் குடும்பங்களில் 25% ஆனவர்கள் மாத்திரமே தமது அன்புக்குரியவர்கள் இறந்திருக்கலாம் என நம்புகின்றனர்.

**"போர் முடிவடைந்துவிட்டதுடன், அவர் காணாமல் போய் பல வருடங்களாகிவிட்டதால், அவர் உயிரோடு இருப்பராயின், திரும்பி வந்திருப்பார். ஆனால், என்னுடைய மகனின் உடலை நான் காணவில்லை. தந்தை என்ற வகையில், என்னுடைய மகன் இறந்துவிட்டார் என்பதை நம்புவதற்கு கடினமாக உள்ளது. சில இராணுவ அதிகாரிகள் நாட்டைவிட்டு தப்பியிருக்கலாம் என்ற வதந்திகளைக் கேட்டுள்ளேன். என்னுடைய மகனும் அவ்வாறு தப்பிச் சென்றிருக்கலாம்"**

**- காணாமல் போன நபரின் தந்தை -**

தமது காணாமல் போன உறவினர்கள் இறந்திருக்கலாம் அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது என்பது நிச்சயமில்லை எனக் கருதுகின்ற நேர்காணப்பட்ட மொத்தக் குடும்பங்களில் அறுபத்து எட்டு சதவீதமானவர்கள், தமது அன்புக்குரியவர்கள் தொடர்பாக விபரமான தகவல்களை அதிகாரத் தரப்பினர் வழங்க வேண்டும் என்ற எதிர்பார்ப்புடன் இன்னும் உள்ளனர். தமது காணாமல் போன உறவினர்கள் இறந்துவிட்டார்களா அல்லது உயிருடன் இருக்கின்றார்களா (19%) என்பதை அறிந்து கொள்வது இந்தத் தகவல்களில் உள்ளடங்குகின்றபோதிலும், அதை மாத்திரம் மட்டுப்படுத்தியதல்ல. மாறாக, காணாமல் போன உறவினர்கள் உயிருடன் இருப்பார்களாயின், அவர்கள் எங்குள்ளார்கள் என்பது பற்றி அறிந்து கொள்ள அவர்களது குடும்பத்தினர் விரும்புகின்றனர். காணாமல் போனவர் இறந்திருப்பாராயின், அவர்கள் காணாமல் போன சூழ்நிலைகள் பற்றி அறிந்து கொள்ள குடும்பங்கள் ஆவலாக உள்ளன. முப்பத்து எட்டு சதவீதமானவர்கள் காணாமல் போன சூழ்நிலைகளை உள்ளடக்கிய உத்தியோகபூர்வ ஆவணம் ஒன்றைப் பெற விரும்புவதுடன், 24% ஆனவர்கள் நேரில் கண்ட சாட்சிகளின் சாட்சியங்களைப் பெற்றுக் கொள்ள விரும்புகின்றனர்.

எழுபத்து ஒன்பது சதவீதமான குடும்பங்கள் தமது உறவினர்களின் இறந்த மனித எச்சங்கள் பற்றிய தகவல்களைப் பெற வேண்டும் என எதிர்பார்க்கின்றன. சில குடும்பங்கள், இறந்த மனித எச்சங்களை மீண்டும் பெற விரும்புகின்ற அதேவேளை, சிலர் புதைக்கப்பட்ட இடங்கள் பற்றி அறிய விரும்புகின்றனர்.

மனித எச்சங்களைக் கையாளுதல் மற்றும் அதன் முகாமைத்துவம் என்பன தொடர்பான எதிர்பார்ப்புக்கள் குடும்பங்களுடைய சமய மற்றும் கலாசார பின்னணியுடன் தொடர்புபட்டனவாகும். சில குடும்பங்களுடைய கருத்தின்படி, குறித்த நபர் இறந்திருப்பாராயின், இறப்பின் பின்னர் அவரைக் குழப்புவது தமது சமய நடைமுறைகளுக்கு எதிரானதாக இருப்பதால், தமது உறவினர்கள் எங்குள்ளார்கள் என்பது பற்றி தெரிந்து கொண்டால் மாத்திரம் போதுமானது எனக் குறிப்பிட்ட அதேவேளை, இன்னும் பல குடும்பங்கள், தமது உறவினர்களின் இறந்த உடல் இல்லாது சமய மற்றும் கலாசார சடங்குகளை நிறைவேற்ற முடியாது என்பதால், தமது உறவினர்களின் மனித எச்சங்கள் தமக்கு வேண்டுமென வலியுறுத்துகின்றன. உண்மையில், பெரும்பாலான குடும்பங்கள் தமது உறவினர்களின் இறந்த உடல் அல்லது அது பற்றிய தகவல்கள் இன்றி, இறுதி மரியாதை செலுத்தவோ அல்லது சமயச் சடங்குகளை நடத்தவோ முடியாத நிலையில் இருக்கின்றன.

இலங்கையில் இடம்பெற்ற கடந்த கால ஆயுத மோதலில் காணாமல் போனவர்களுடைய ஆயிரக்கணக்கான குடும்ப உறுப்பினர்களில் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையினர்[38] மாத்திரமே காணாமல் போனவருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பாக திருப்திகரமான பதில்களைப் பெற்றுக் கொண்டுள்ளன. காணாமல் போன நபருக்கு என்ன நடந்தது என்பது பற்றிய பதிலைத் தேடிக் கொள்ள முடியாமையால் குடும்பங்களின் வேதனைகள் அதிகரித்துள்ளன. யுத்தம் முடிவுற்று பல வருடங்களின் பின்னரும் இந்தக் குடும்பங்கள் இதுவரை தமது உறவினர்கள் பற்றிய செய்திகளுக்காகக் காத்திருக்கின்றன.

[38] ஐ.சி.ஆர்.சி.யின் காணாமல் போன நபர்களின் பட்டியலிலிருந்து அதற்குக் கிடைக்கப் பெறும் தரவுகளின் அடிப்படையில், 2009 ஜுன் 01 ஆம் திகதி முதல் கடந்த கால மோதல் தொடர்பில் தேடப்படுகின்ற, பிரிந்த அல்லது தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டப்படுகின்ற 764 நபர்களின் குடும்பங்கள் தமது உறவினர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பது தொடர்பான பதில்களைப் பெற்றுக் கொண்டன.

# 5.2 சமூக உளவியல் தேவைகள்

குடும்பங்களின் தேவை மதிப்பீட்டின்போது, அவர்களால் தெரிவிக்கப்பட்ட பொருளாதாரப் பிரச்சினைக்குப் பின்னரான இரண்டாவது மிகப் பெரிய தேவையாக மனவெழுச்சிசார் பிரச்சினையுள்ளது.

நபரொருவரின் உளவியல் ரீதியான வேதனையானது அவர் எவ்வாறு சமூகத்தோடு தொடர்பு கொள்கின்றார் என்பதிலும், சமூகம் எவ்வாறு அவர்களது உளவியல் நிலைமைகளில் செல்வாக்குச் செலுத்துகிறது என்பதிலும் தாக்கஞ் செலுத்த முடியும்.

உண்மையில், எமது அனுபவங்களின் (எமது சிந்தனைகள், மனவெழுச்சிகள் மற்றும் நடத்தை) உளவியல் தோற்றப்பாடுகளுக்கும் நாம் வாழும் சமூகத்தில் (எமது உறவுகள், பாரம்பரியம், மற்றும் கலாசாரம்)[39] எமது பரந்த சமூக அனுபவங்களுக்குமிடையில் நெருங்கிய தொடர்பொன்று உள்ளது.

எனவே, சமூக உளவியல் தேவைகளானவை, உளவியல் தோற்றப்பாடுகள் மற்றும் ஒவ்வொன்றும் தமக்கிடையே தொடர்புள்ளதும் பரஸ்பரம் தங்கியிருக்கக் கூடியதுமான சமூக, கலாசார, சமய மற்றும் பொருளாதார விடயங்களுடனான அவற்றின் இடைத்தொடர்புகள் ஆகியவற்றை உள்ளடக்கிய சகல விதமான தேவைகளையும் குறிக்கிறது.

**“எனது மகன் காணாமல் போன பின்னர் எவ்வாறு புன்னகைப்பது என்பதை நான் மறந்துவிட்டேன்”**

**- காணாமல் போன நபருடைய தாயார் -**

அன்புக்குரிய ஒருவரைக் காணவில்லை என்பதால் ஏற்படுகின்ற வேதனையானது தனித்துவமானது என்பதுடன், அது ஏனைய இழப்புக்களிலிருந்து வேறுபட்டதாகும். இழப்பானது தெளிவாக இருக்கக் கூடிய இறப்பினூடாகத் தனது அன்புக்குரிய ஒருவரை இழக்கின்ற குடும்பங்களைப் போலன்றி, நபரொருவர் காணாமல் போனமையால் ஏற்படுகின்ற இழப்பானது சந்தேகத்துக்குரிய இழப்பாகும். காணாமல் போன நபர்களுடைய குடும்பங்கள் எதிர்பார்ப்புக்கும் நிச்சயமற்ற தன்மைக்கும் இடையிலும் தமது காணாமல் போன அன்புக்குரியவரின் சேமநலன் தொடர்பான கவலையுடனும் வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்றன. குடும்பத்தின் எந்தவொரு தீர்மானம் மேற்கொள்ளும் செயன்முறையிலும் காணாமல் போன நபர் முக்கிய இடத்தைப் பெறுவார். காணாமல் போனவர்களின் குடும்பங்களின் வாழ்க்கை ஸ்தம்பிதமடைந்துள்ளது. தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பன தெரியாமையானது, முடிவில்லாத வேதனை நிலைக்கு அவர்களை இட்டுச் செல்கின்றது.

தமது காணாமல் போன உறவினர்கள் உயிருடன் இருக்கிறார்கள் என்ற சிந்தனைக்கும் பின்னர் அவர்கள் இறந்துவிட்டார்கள் என்ற சிந்தனைக்குமிடையிலும் தொடர்ச்சியாக மாறிக் கொண்டிருக்கக் கூடிய சந்தேகமான சூழ்நிலைக்கு இக்குடும்பங்கள் முகங் கொடுப்பதால் சமாளித்தற் செயன்முறைகள் வலிதற்றதாக்கப்பட்டுள்ளன. காணாமல் போன நபர்கள் தொடர்பாக தகவல்களைத் திரட்டுவதற்கான நடவடிக்கைகள் நிலுவையில் இருப்பதனால் இக்குடும்பங்கள் விரக்திக்குள்ளாகியிருப்பதுடன், உதவியற்றவர்களாகவுமுள்ளனர். இக்குடும்பங்கள் பல சுமைகளுக்கு ஆளாகியுள்ளதுடன், அவர்களது நாளாந்த வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. கலாசார மற்றும் சமய சடங்காசாரங்கள் வழமையாக மரணித்தவர்களுக்காக அர்ப்பணிக்கப்பட்டுள்ளமையால் இக்குடும்பங்கள் சடங்காசாரங்களை ஒழுங்குபடுத்தவோ காணாமல் போனவர்களுக்கான அங்கீகாரத்தைப் பெறவோ முடியாதவர்களாக அவர்களது மனத்தாங்கல் செயன்முறை உறைந்து போயுள்ளது. இக்குடும்பங்கள் மரணத்துக்கான உத்தியோகபூர்வ உறுதிப்படுத்தல் ஒன்று இல்லாமையால் காணாமல் போனமை தொடர்பான விடயத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க முடியாமலும் ஆதரவுக்கான சடங்காசாரங்கள் இல்லாமையால் மனத்தாங்கலுக்கான எந்தவொரு தீர்வும் கிடைக்காமலும் இருக்கின்றன.[40]

இலங்கையில் இறப்புடன் தொடர்புபட்ட இரங்கல் மற்றும் மனத்தாங்கல் என்பன நாளாந்த வாழ்க்கையில் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டிருப்பதுடன், அவற்றுள் பல சடங்குகளினால் நினைவு கூரப்படுகின்றன. இந்த சம்பிரதாயங்கள் வாழ்வுக்குத் தடங்கல் செய்யாமல், இறந்தவர் அமைதியாக தன்னுடைய ஆன்மீக வாழ்க்கைக்கு அல்லது மறுபிறப்புக்குச் (சமய நம்பிக்கைகளைப் பொறுத்து) செல்வதை நோக்காகக் கொண்டவையாகும். தமது காணமல் போன உறவினர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளர்கள் என்பது பற்றிய நிச்சயமற்ற தன்மை காரணமாக, சடங்காசாரங்களை மேற்கொள்ள முடியாதவர்களாக, காணாமல் போனவர்களுடைய குடும்பங்கள் நீண்டகால மன அழுத்தத்துடன் போராடி வருகின்றன. இவர்கள் மனித எச்சங்கள் அல்லது இறந்த திகதி மற்றும் நேரம் என்பன பற்றி சரியான தகவல்கள் இன்றி தமது கலாசாரம் மற்றும் மதத்தினால் வேண்டப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்ற முடியாமல் உள்ளனர். இந்த விடயம் அவர்களை உதவியற்ற ஒரு நிலைக்கு ஆளாக்குவதுடன், மேலும் அவர்களது குணமாகுதல் செயன்முறைக்கும் தடையாக இருக்கின்றது.

சமூக ரீதியாக தனிமைப்படுத்தப்படுதலானது, குணமாகுதல் செயன்முறையை மேலும் தீவிரமடையச் செய்துள்ளது. நாற்பத்து ஆறு சதவீதமான குடும்பங்கள், தமது பிரச்சினைகள் பற்றி நண்பர்களிடமோ, உறவினர்களிடமோ அல்லது அயலவர்களிடமோ தாம் பேசுவதில்லை அல்லது மிகவும் அருமையான சந்தர்ப்பங்களில் மாத்திரம் பேசுவதாகக் குறிப்பிட்டன. தமது வலியை ஏனையவர்கள் சரியாகப் புரிந்து கொள்வதில்லை என அவர்கள் உணர்கின்றனர். இக்குடும்பங்கள் தம்மை நலன்விரும்பிகள் இந்நிலைமையிலிருந்து மீண்டு செல்லுமாறு ஆலோசனை வழங்குவதுடன், தமது காணாமல் போன உறவினர்கள் இறந்துவிட்டார்கள் என்பதால் அவர்கள் மீள வரமாட்டார்கள் என நம்புவதற்கு ஊக்குவிப்பதாகவும் குறிப்பிடுகின்றன. இந்தக் காரணங்களுக்காக, இக்குடும்பங்கள் தம்மைத் தமது சமூகத்திலிருந்து விலக்கி வைத்துக் கொண்டுள்ளன.

**“நான் ஒரு விதவை எனக் கூறி, அயலவர்கள் தற்போது என்னை ஒதுக்குகின்றனர். நான் துரதிட்டத்தை கொண்டு வருவேன் என அவர்கள் நினைப்பதால் என்னுடைய முகத்தைப் பார்க்க அவர்கள் விரும்புகிறார்களில்லை”**

**- காணாமல் போன நபருடைய மனைவி -**

சில சமயங்களில் கலாசார பழக்கவழக்கங்கள்கூட இவர்களது தனிமைப்படுத்தலை அதிகரிக்கச் செய்கின்றன. இலங்கை பூராகவும் தமது சமூகத்தினரால் விதவைகளாகப் பொதுவாகக் கருதப்படுகின்ற காணாமல் போன நபர்களுடைய மனைவிமார், அவர்கள் அபசகுணமானவர்கள் அல்லது துரதிட்டத்தைக் கொண்டு வருபவர்கள் எனப் பார்க்கப்படுவதால் கலாசார மற்றும் சமய ரீதியான சுபகாரியங்களில் பங்குபற்ற முடியாதபடியான கலாசார தடைகளுக்கு முகங் கொடுத்து வருகின்றனர். இது பொதுவாக நாட்டின் கிராமப்புறங்களில் நடைமுறையில் இருக்கின்ற ஒரு நடைமுறையாகும். மேலும், சமூகத்தில் அவர்களுடைய பண்பியல்புகள்[41] பற்றி சந்தேகம் எழுப்பப்படுவதுடன், அவர்களின் கௌரவத்தைப் பாதிக்கும் வகையிலான வதந்திகள் பரப்பப்படுகின்றன என்றும் அம்மனைவிமார் பொதுவாகத் தெரிவித்தனர்.[42] பதினைந்து சதவீதமான குடும்பங்கள் தமது அன்புக்குரியவர்கள் காணாமல் போன பின்பு சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுவதுடன், பாரபட்சத்திற்கும் ஆளாக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்துள்ளனர்.

[39] Psychosocial Working Group, 2003; P1.

[40] Boss, P. (1999). Ambiguous loss: learning to live with unresolved grief. Cambridge: Harvard University. Paperback reprint in 2000.

[41] இங்கு பண்பியல்புகள் என்ற சொல் நபர் ஒருவருடைய மனநிலை மற்றும் ஒழுக்கப் பண்புகளைக் குறிக்கின்றது.

[42] காணாமல் போன நபர்களின் சில மனைவிமாருடைய கருத்தின்படி, அவர்கள் தமது சமூகத்தினால் ஒழுக்கமற்றவர்களாக அல்லது “எல்லோருடனும் பழகக்கூடியவர்களாக” மற்றும் அதன் விளைவாக, பாலியல் ரீதியாக “விருப்பமுடையவராகவும் தயாராக இருப்பவர்களாகவும்” கருதப்படுகின்றனர்.

**"நான் திருமண வீடுகளுக்குச் செல்வதில்லை. ஏனெனில், நான் நன்றாக உடுத்திக் கொண்டு சென்றால் என்னுடைய கணவருடைய காணாமல் போதலினால் நான் பாதிக்கப்படவில்லை எனவும் நான் சந்தோ'மாக இருப்பதாகவும் ஆட்கள் குறிப்பிடுகின்றனர்"**

**- காணாமல் போனவரின் மனைவி -**

நாளாந்தம் அவர்கள் முகங் கொடுக்கும் மன அழுத்தங்களால் இவையனைத்தும் மேலும் தீவிரமடைகின்றன. குடும்பத்தில் வருமானமீட்டுபவர்கள் காணாமல் போனமையினால் அவர்கள் முகங் கொடுக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள், அவர்களது அன்புக்குரியவர்கள் தற்போது இருந்திருந்தால் தமது வாழ்க்கை எவ்வாறு அமைந்திருக்கும் எனச் சிந்திக்க அவர்களை நிர்ப்பந்திக்கிறது.[43] காணாமல் போன நபர்களுக்கான தெளிவான சட்ட அந்தஸ்தொன்று[44] இல்லாமையால் அவர்கள் முகங் கொடுக்கின்ற நிர்வாக ரீதியான சவால்கள், தமது அன்புக்குரியவர்களைக் காட்டிக்கொடுப்பதாகக் கருதப்படுகின்ற மரணச் சான்றிதழுக்கு விண்ணப்பித்தாலேயொழிய, அவர்களது வாழ்க்கை ஸ்தம்பித நிலைக்குத் தள்ளப்படுகிறது. காணாமல் போனவரின்றி தவிக்கின்ற மற்றும் அவரது பிரசன்னம் தேவைப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் தமது பிள்ளைகளிடம் அவர்களது தந்தை ஒரு நாள் மீண்டும் வருவார் எனக் கூறி அவர்களை வளர்ப்பதானது, பெண்களை அவர்களது கண்ணீரை மௌனமாக விழுங்கச் செய்கிறது.

**"என்னுடைய கணவர் காணாமல் போகும்போது நான் மூன்று மாத கர்ப்பிணியாக இருந்தேன். எனது மகனுடன் எனது கணவரும் நானும் ஒன்றாக நிற்பதுபோல் தொழில்நுட்ப ரீதியாக வடிவமைக்கப்பட்ட புகைப்படமொன்று என்னிடம் உள்ளது. அதனை எனது மகன் பாடசாலைக்கு 'தனது குடும்பப் படம்' எனக் கொண்டு செல்ல முடியும். எனினும், உண்மை என்னவெனில், என்னுடைய பிள்ளை அவனுடைய தந்தையைக் காணவும் இல்லை. அதேபோன்று தந்தை பிள்ளையைக் காணவும் இல்லை"**

**- காணாமல் போன நபரின் மனைவி -**


சந்தேகத்துடன் கூடிய இழப்பு[45] குறித்து நூல்களில் விபரிக்கப்பட்டதற்கேற்ப, அதன் மனநல வெளிப்பாடுகளாக துஃபிரயோகம், வன்முறை மற்றும் தற்கொலை என்பவற்றுக்கு ஒருவரைத் தூண்டக் கூடிய பதகளிப்பு, மனச் சோர்வு, மெய்ப்பாடு என்பவற்றைக் குறிப்பிடலாம். இந்த மனநல வெளிப்பாடுகள், ஏனைய நெருக்கடிச் சம்பவங்களுக்குப் பின்னரான வெளிப்பாடுகளைப் போன்றே மோதலுக்குப் பின்னரான அமைப்பிலும் பொதுவாகக் காணக்கூடிய மனநலப் பிரச்சினைகளாகும். இம்மதிப்பீடு இந்த அனைத்து வெளியீடுகளையும் மதிப்பிடாததுடன், பதகளிப்பு மற்றும் மனச்சோர்வு ஆகிய பொதுவான இரு மனநலப் பிரச்சினைகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

காணாமல் போன நபர்களின் நேர்காணப்பட்ட குடும்பங்கள் மத்தியில் நெருக்கடிக்குப் பின்னரான மனவடு பற்றிய தெரிவொன்று மேற்கொள்ளப்பட்டது. மாதிரியில் 51% ஆனவர்கள் முக்கிய பதகளிப்பு அறிகுறிகளினாலும் 58% ஆனவர்கள் மனச் சோர்வு அறிகுறிகளினாலும் 15% ஆனவர்கள் நெருக்கடிக்குப் பின்னரான மனவடு அறிகுறிகளினாலும் வேதனையுறுவதை இது எடுத்துக்காட்டியது. ஏனைய குடும்பங்களுடன் ஒப்பிடும்போது, இந்த அறிகுறிகள் இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன படையினரின் குடும்பங்களிடம் மிகக் குறைந்தளவிலேயே இருக்கின்றன.

இது பல்வேறு காரணிகளினால் விபரிக்கப்படலாம். இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன படையினரின் குடும்பங்கள், தாம் நம்பத்தகுந்த தகவல் எனக் கருதுகின்ற சம்பந்தப்பட்ட அதிகாரத் தரப்பினரிடமிருந்து தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய பதிலொன்றைப் பெற்றுக் கொண்டுள்ளன. மேலும், இவர்களில் பெரும்பாலானோர் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் என்பவற்றைப் பெறுவதனால் நாளாந்த பொருளாதாரப் பிரச்சினைகளுக்காகப் போராட வேண்டிய அவசியமில்லை. இவர்கள் பொதுவாக வீரர்களின் குடும்பத்தினர் என அவர்களது சமூகத்தினரால் மதிக்கப்படுகின்றனர்.

ஏனைய காணாமல் போன நபர்களுடைய குடும்பங்கள் இத்தகைய பதில்களை அவர்கள் நம்பகரமானதாகக் கருதுகின்ற மூலகங்களில் இருந்து பெற்றுக் கொள்ளாமை, அவர்களது சமூகத்தினால் ஆதரிக்கப்படாமை மற்றும் நாளாந்த பொருளாதாரப் பிரச்சினைகளுக்கு முகங் கொடுத்தல் என்பவற்றை எதிர்கொண்டு வருகின்றன.

**வரைபு 8: அறிகுறியியல்: இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன படையினரின் குடும்பங்கள் மற்றும் ஏனைய காணாமல் போன நபர்களின் குடும்பங்களுக்கிடையேயான ஒப்பீடு**





**"உன்னுடைய கணவர் இல்லாமல் நீ வாழ்வதானது, ஓநாய்க் கூட்டத்தில் ஓர் ஆடு வாழ்வது போன்றாகும்"**

**- காணாமல் போன நபருடைய மனைவி -**

[43] குடும்பங்களின் பொருளாதாரத் தேவை என்ற பிரிவைப் பார்க்க.
[44] குடும்பங்களின் சட்ட மற்றும் நிர்வாகத் தேவைகள் என்ற பிரிவைப் பார்க்க.
[45] Boss, P. (2006). Loss, Trauma and Resilience: Therapeutic work with Ambiguous Loss, W.W. Norton Company, INC, ISBN: 978-0-393-70449-5.

கடந்த கால உலகளாவிய ஆய்வுகளின் பிரகாரம், பதகளிப்பு மற்றும் மனச் சோர்வு போன்ற பொதுவான மனநலப் பிரச்சினைகளுக்கான முக்கிய இடர் காரணங்களாக வறுமையும் பொருளாதார அழுத்தமும் அறியப்பட்டன.[46] மனநலப் பிரச்சினைகளுக்கு ஆளாகியவர்கள், தமது மனவெழுச்சிசார் அழுத்தங்களுக்கான மிக முக்கிய காரணிகளுள் ஒன்றாக வறுமை மற்றும் சமூகப் பொருளாதார பிரச்சினைகளை விபரித்தனர்.[47,48] இம்மதிப்பீட்டின்போது நேர்காணப்பட்ட குடும்பங்களில் 56% ஆனவர்கள் தமக்குப் பொருளாதாரப் பிரச்சினை உள்ளது எனக் குறிப்பிட்டனர். இவர்களுள் 86% ஆனவர்கள் பொதுவான மனநலப் பிரச்சினைகளின் (ஒன்றில் பதகளிப்பு அல்லது மனச் சோர்வு) அறிகுறிகள் உயர்வாக இருப்பதைக் காட்டினர். இதன்மூலம் இலங்கையில் காணாமல் போன நபர்களுடைய குடும்பங்களின் சனத்தொகையைப் பொறுத்தவரை, பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் மனநலப் பிரச்சினைகளுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பொன்றுள்ளமையை இது காட்டுகின்றது.

**வரைபு 9: பொருளாதாரப் பிரச்சினைகளுக்கும் மனநலப் பிரச்சினைகளுக்கும் இடையிலான தொடர்பு**




மேலும், காணாமல் போன நபர்களுடைய மனைவிமார் அநாமதேய தொலைபேசி அழைப்புக்கள் மற்றும் பாதுகாப்புப் படையினர் எனத் தம்மை அடையாளப்படுத்துகின்ற ஆண்கள் அல்லது தமது சமூகத்தைச் சேர்ந்த ஆண் உறுப்பினர்கள் முன்னறிவித்தலின்றி கிரமமற்ற நேரங்களில் விஜயம் செய்கின்றமை என்பன குறித்த கரிசனைகளையும் வெளிப்படுத்தினர். தமது குடும்பத்தில் வயது வந்த ஆண் ஒருவர் இல்லாமையினால் பெண்கள் இவ்வாறு நலிவுற்றவர்களாக விடப்படுவதாக அவர்கள் குறிப்பிடுகின்றனர். விசேடமாக, விடுதலைப் புலிகளுடன் தொடர்பினைக் கொண்டிருந்தவர்களென சந்தேகிக்கப்பட்ட குடும்பங்கள் தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தப்படுவது, அவர்கள் தமது பாதுகாப்பு பற்றி அச்சங் கொள்வதற்கான மேலதிக மூலக்கூறாகவுள்ளது.[49]

மனநலம் சார்ந்த பிரச்சினைகள் இருக்கலாம் என்றபோதிலும், இந்த வெளிப்பாடுகள் மனோதத்துவப் பிரச்சினைகள் என்பதைவிட சமூக மற்றும் உறவு சார்ந்த பிரச்சினைகளாகப் பார்க்கப்பட வேண்டும் என சந்தேகத்துடன் கூடிய இழப்பு சம்பந்தமான நூல்கள் வலியுறுத்துகின்றமை குறிப்பிடத்தக்கது. இவை உள்ளத்திலுள்ள பிரச்சினைகளிலிருந்து ஏற்படுவனவல்ல. மாறாக, மன அழுத்தம் மற்றும் சந்தேக நிலை என்பவற்றை ஏற்படுத்தக் கூடிய புறக் காரணிகளினால் தோன்றுவனவாகும்.[50]

**"நான் உளவளத்துணை ஆலோசனைக்குச் சென்றால் நான் மனநோயாளி என அயலவர்கள் குறிப்பிடுவார்கள்"**
**- காணாமல் போன நபருடைய மனைவி -**

**"நான் மனநோயாளி அல்ல. நான் என்னுடைய மகனை இழந்துள்ளேன்"**
**- காணாமல் போன நபருடைய தந்தை -**

நாடளாவிய ரீதியில் உளநலச் சேவைகளுக்கு உதவுவதற்காக சுகாதார அமைச்சு மருத்துவ அலுவலர்களையும் மனோதத்துவ மருத்துவர்களையும் கொண்டுள்ளது. பெரும்பாலான மாவட்டங்களில் உள்ள பொது வைத்தியசாலைகளில் மனநலப் பிரிவு ஒன்று செயற்பட்டு வருவதுடன், எல்லைப்புற சுகாதார சேவைகளில் கிரமமான சிகிச்சை நிலையங்களும் செயற்பட்டு வருகின்றன. நாடளாவிய ரீதியில் மாவட்ட அல்லது பிரதேச செயலாளர் அலுவலகங்களினூடாகப் பணியாற்றும் சுமார் 200 உளவளத்துணை அலுவலர்களை சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு கொண்டுள்ளது. இன்னும் 150 வெற்றிடங்கள் நிரப்பப்படுவதற்கு உள்ளன. நாடளாவிய ரீதியில் மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்தில் பணிக்கமர்த்தப்பட்டுள்ள 200 இற்கும் மேற்பட்ட உளவளத்துணை உதவியாளர்களை மகளிர் விவகார அமைச்சு கொண்டுள்ளது.

இதனைத் தவிர, பல அரச சார்பற்ற அமைப்புகளும் சமூக உளவியல் தலையீடுகளை மேற்கொண்டு வருகின்றன. அவர்களுடைய சேவைகள் குறித்த சில பிரதேச செயலகங்களுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. எனினும், இவர்களுடைய சேவைகள் குறித்த இடங்களில் சமூகத்தினரை சென்றடைவதுடன், வடக்கு மற்றும் கிழக்கில் அதிக ஏற்புடைமையைக் கொண்டுள்ளன.

எவ்வாறெனினும், வடக்கு மற்றும் கிழக்கில் மனித வளங்களின் மிகப் பாரியதோர் இடைவெளியொன்றுள்ளது. உதாரணமாக, சமூக வலுவூட்டல் மற்றும் நலனோம்புகை அமைச்சு ஏறக்குறைய 177,000 சனத்தொகையைக் கொண்ட வவுனியா மாவட்டத்திற்கு ஒரு உளவளத்துணை அலுவலரையும் 103,000 சனத்தொகையைக் கொண்ட மன்னார் மாவட்டத்திற்கு ஒருவரையும் கொண்டுள்ளது. இது அவர்களை தமது அலுவலக வேலையிலும் அறிக்கைப்படுத்தலிலும் கவனத்தைச் செலுத்த மட்டுப்படுத்துவதால் சமூக மட்டத்தில் மக்களுக்குரிய சேவைகளை ஆற்றுவதிலும் பணியாற்றுவதிலும் பாரிய இடைவெளியை உருவாக்கியுள்ளது.

பொதுவாக, கேட்டல் மற்றும் ஆலோசனை வழங்கல் ஆகியவற்றை உள்ளடக்கிய தனிப்பட்ட ரீதியான உளவளத்துணையே தலையீட்டு அணுகுமுறையாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த தனிநபர்மயப்படுத்தப்பட்ட அணுகுமுறையானது, அதிகளவிலான எண்ணிக்கையினருக்கு சேவை வழங்குவதில் பாரிய இடைவெளியை உருவாக்கியுள்ளது. சமூக உளவியல் நலனோம்புகை மற்றும் மனநலம் என்பவற்றை மேம்படுத்தல் மற்றும் தடுத்தல் ஆகியவற்றை இலக்காகக் கொண்ட தலையீடுகளுக்கு போதுமான முக்கியத்துவம் வழங்கப்படவில்லை.

[46] Patel V, Kleinman A. Poverty and common mental disorders in developing countries. Bulletin World Health Organisation 2003.
[47] Patel V, Pereira J, Mann A. Somatic and psychological models of common mental disorders in India. Psychological Medicine 1998; 28:135-43.
[48] Aidoo M, Harpham T. The exploratory models of mental health amongst low-income women and health care practitioners in Lusaka, Zambia. Health Policy and Planning 2001; 16:206-13.
[49] மேலதிக விளக்கத்திற்கு, பகுதி 5.7 ஐப் பார்க்க.
[50] Boss, P. (1999). Ambiguous loss: learning to live with unresolved grief. Cambridge: Harvard University. Paperback reprint in 2000; Boss, P. (2006). Loss, Trauma and Resilience: Therapeutic work with Ambiguous Loss, W.W. Norton Company, INC, ISBN: 978-0-393-70449-5.

**"அவர்களால் என்னை விளங்கிக் கொள்ள முடியவில்லை. இவ்வளவு காலத்திற்கு எனது கணவர் இறந்திருப்பார் எனவும் நான் இன்னும் இளமையாக இருப்பதால் இன்னுமொரு முறை திருமணம் செய்ய வேண்டும் எனவும் குறிப்பிடுகின்றனர்"**

**- காணாமல் போன ஒருவரின் மனைவி -**

தொழில்நுட்ப தோற்றப்பாடுகளைப் பொறுத்தவரை, சேவையில் ஈடுபடுகின்ற நபர்களுக்கு தமது தொழிலுக்கு முன்னர் கிடைக்கின்ற பயிற்சியானது, பொதுவாக செய்முறைத் திறன்களை உள்ளடக்குவதில்லை. இவர்களுக்குத் தேவையான பயிற்சி மற்றும் தொழில்நுட்ப ரீதியான மேற்பார்வை என்பன வரையறுக்கப்பட்டோ அல்லது பல சந்தர்ப்பங்களில் இல்லாமலே இருக்கின்றன. சிக்கலான விடயங்களைக் கையாளுவதற்குத் தேவையான திறன்கள் மற்றும் ஒத்துழைப்புகளிலுள்ள இடைவெளியானது, இச்சேவையில் உள்ளவர்களை சுமைக்கு உட்படுத்தல் மற்றும் ஊக்குவிக்காமை என்பவற்றை ஏற்படுத்துவதுடன், சேவைகளின் தரத்தையும் பாதிக்கிறது. பெரும்பாலான சேவை வழங்குநர்கள், தமது தொழில்வாண்மை செயன்முறைப்படுத்துவதற்கு இலக்காகக் கொண்டுள்ள வாடிக்கையாளரை நோக்கிய உளவளத்துணை அணுகுமுறையை நடைமுறைப்படுத்துவதைவிட, இலகுவான தீர்வாக அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தேவையான அறிவுரைகளை மாத்திரமே வழங்கத் தலைப்படுகின்றனர். அவர்கள் அடிப்படை மனநலப் பிரச்சினைகளை நோக்கிச் செயற்படுகின்றபோதிலும், பொதுவாக காணாமல் போனவர்களின் குடும்பங்கள் எதிர்நோக்குகின்ற சந்தேகத்துடனான இழப்பு தொடர்பான போதிய அறிவுடையவர்களாக இல்லை. தமது உறவினருக்கு என்ன நடந்தது என்பது பற்றி தெளிவான பதிலொன்று இல்லாதபோது, காணாமல் போனவர்களுடைய இறப்பை ஏற்றுக்கொள்வதன் மூலம் அக்குடும்பங்களின் வாழ்க்கையை முன்நகர்த்திச் செல்லுமாறு ஆலோசனை வழங்குதலானது, தொழில்நுட்ப ரீதியாக தவறானது மாத்திரமன்றி, ஒழுக்கத்திற்கு முரணான ஒரு விடயமுமாகும்.

இலங்கையிலுள்ள காணாமல் போன நபர்களின் குடும்பங்கள் உளவளத்துணைச் சேவைகளை பெற்றுக்கொள்ள விரும்பவில்லை. சமூகத்தினர் மத்தியில் உளவளத்துணை என்பது மனநோய்க்கு சிகிச்சை அளிப்பதாகக் கருதப்படுவதுடன், இக்குடும்பங்கள் தம்மை மனநோயாளிகள் என அடையாளப்படுத்துவதை விரும்பாத அதேவேளை, அவர்கள் தமது வேதனைகள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என விரும்புகின்றனர். நேர்காணப்பட்ட 395 குடும்பங்களில் இரண்டு நபர்கள் மாத்திரமே உளவளத்துணை தமக்குப் பிரயோசமானது எனக் குறிப்பிட்டனர். எழுபது சதவீதமான குடும்பங்கள் தமது காணாமல் போன உறவினர் பற்றி அத்தகைய பிரச்சினைகளை விளங்கிக் கொள்ளக் கூடிய ஒரு நபருடன் பேச விரும்புவதாகவும் 75% ஆன குடும்பங்கள் காணாமல் போன தமது உறவினர்கள் தொடர்பாக ஒழுங்கு செய்யப்படுகின்ற குழு ஞாபகார்த்த நிகழ்வுகளில் பங்குபற்ற விரும்புவதாகவும் தெரிவித்தனர்.

## 5.3 பொருளாதாரத் தேவைகள்

நேர்காணப்பட்ட மொத்தக் குடும்பங்களில் 56% ஆனவர்கள் தமது மிக முக்கியமான பிரச்சினையாக, பொருளாதாரச் சிக்கலைக் குறிப்பிட்டனர்.

காணாமல் போன நபர்களின் குடும்பங்கள் தமது குடும்பத்திலுள்ள வருமானமீட்டுபவரை இழந்தமை, இடப்பெயர்வும் சொத்துக்களின் சேதமும், வியாபார நடவடிக்கைகளில் பாரிய தாக்கம்/ மூடப்பட்டமை மற்றும் காணாமல் போன நபரைத் தேடுவதற்கான தமது முயற்சிகளுக்காகச் செலவழிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க பணம் போன்ற தமது பொருளாதார நிலைமையை ஆழமாக பாதிக்கக் கூடிய மோதலின் பன்முக விளைவுகளைத் தாம் எதிர்நோக்குவதாகத் தெரிவித்தனர்.

முன்னைய அத்தியாயங்களில் குறிப்பிட்டவாறு, கருத்திற் கொள்ளப்பட்ட மாதிரியிலுள்ள காணாமல் போன நபர்களில் 93% ஆனவர்கள் ஆண்களாவர். அவர்களில் பெரும்பாலானவர்கள் காணமல் போகும்போது, 15 தொடக்கம் 30 வயதுக்குட்பட்வர்களாகவிருந்ததுடன், அவர்கள் தமது வாழ்க்கையின் மிக முக்கிய கட்டத்திலிருந்தனர். குடும்பங்களினால் அறிவிக்கப்பட்டதற்கேற்ப, 63% ஆனவர்கள் தமது குடும்பத்தின் பிரதான வருமானம் ஈட்டுபவர்களாகவிருந்துள்ளனர். பெரும்பாலான இளைஞர்கள் மீது அவர்களது குடும்பத்தினர் தமது குடும்பத்திற்கு எதிர்காலத்தில் அவர்கள் வருமானமீட்டித் தருவார்கள் என்ற எதிர்பார்ப்பைக் கொண்டிருந்தனர்.

**"என்னுடைய மகன் இருந்திருந்தால், அவர் எங்கள் அனைவரையும் கவனித்திருப்பார். என்னுடைய கணவரின் வயது 65. குடும்பத்திற்காக அவர் வேலை செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளார்"**

**- காணாமல் போன நபரின் தாயார் -**

தரவுகள் சுட்டிக்காட்டுவதன்படி, 41% ஆனவர்கள் காணாமல் போகும்போது திருமணம் முடித்தவர்களாக இருந்தனர். நேர்காணப்பட்டவர்களில் தொண்ணூற்று ஏழு வீதமான மனைவிமார், தமது கணவரே குடும்பத்தின் பிரதான வருமானம் ஈட்டுபவராகவிருந்தார் என்பதை உறுதிப்படுத்தினர். தமது கணவன் காணாமல் போன பின்னர், 49% மனைவியர் தாம் பிரதான வருமானம் ஈட்டுபவரின் வகிபங்கை எடுத்துக் கொண்டதாகக் குறிப்பிட்டனர். இராணுவச் சேவையிலிருந்து காணாமல் போனவர்களின் மனைவிமாரை மாத்திரம் கருத்திற் கொண்டால், இந்த விகிதாசாரம் 4.5% இற்கு குறைவடையும். இதற்குப் பிரதான காரணம், இராணுவச் சேவையிலிருந்து காணாமல் போன நபர்களின் மனைவிமார் தமது கணவனின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் என்பவற்றை மாதாந்த அடிப்படையில் பெற்று வருகின்றனர் என்பதாகும். எனவே, வருமானமீட்டுபவர் இல்லாத சந்தர்ப்பத்திலும் இக்குடும்பங்கள் மாதாந்த வருமானத்தைப் பெற்று வருகின்றன.

இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன படையினரின் மனைவிமாரைப் போலன்றி, ஏனைய காணாமல் போன நபர்களின் மனைவிமார், தமது கணவரினால் முன்பு தோள்களில் சுமந்த பொறுப்புக்கள் அனைத்துடனும் போராடி வருகின்றனர். தமது கணவன் அல்லது மகன்மாரில் தங்கியிருந்த குடும்பங்கள் இந்தக் காணாமல் போதல்களினால் தனியே போராடி வருகின்றன. பொதுவாக இந்தக் குடும்பங்கள் – குறிப்பாக, பெண்கள் எதிர்கொள்கின்ற பொருள்நிலைப் பிரச்சினைகள் பன்முகப்பட்டவை. உதாரணமாக, நிதியியல் பிரச்சினைகள், தமது பிள்ளைகளை வளர்த்தெடுத்தல் அல்லது பிள்ளைகளுக்கு கல்வியை வழங்குதல் என்பவற்றில் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் (கோட்பாட்டு ரீதியாக, இலங்கையில் கல்வி இலவசமாக வழங்கப்படுகின்றபோதிலும், பாடசாலை வசதிக் கட்டணம், பிரத்தியேக வகுப்புகளுக்கான கட்டணம் மற்றும் புத்தகங்கள் போன்ற வெளியே தெரியாத பல செலவுகள் காணப்படுகின்றன), வீட்டைக் கொண்டு நடத்துதல் மற்றும் பிள்ளைகள் இல்லாத வயோதிபர்கள் நிதியியல் ரீதியாகவும் மனவெழுச்சி சார்ந்த வகையிலும் தம்மைப் பார்த்துக் கொள்ள எவருமின்றி எதிர்கொள்ளும் பிரச்சினைகள் என்பவற்றைக் கூறலாம்.

நேர்காணப்பட்ட குடும்பங்களின் கருத்தின்படி, சமூகத்தினுள்ளும் குடும்பத்தினுள்ளும் பாரம்பரியமாக உதவும் பொறிமுறைகள் மோதலினால் பாதிக்கப்பட்டுள்ளன. தமது குடும்பத்திலிருந்து தாம் ஒதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக முறைப்படுகின்ற காணாமல் போன நபர்களின் மனைவிமார் பலர் குறித்து ஐ.சி.ஆர்.சி. அறிந்துள்ளது. இவர்களுள் பெரும்பாலானவர்கள் போதிய கல்வியையோ அல்லது முறைசார்ந்த பயிற்சியையோ பெறாததினால் பயிற்சி பெறாத வேலைகளைப் பெறுவதுடன், இலாபமீட்டக் கூடிய வேலையைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாகவுள்ளனர். இதன் விளைவாக, தமது குடும்பத்தை நடத்துவதற்குத் தமது நாளாந்த வருமானத்தில் தங்கியிருக்கக் கூடிய கூலித் தொழில்களில் பணியாற்றி வருகின்றனர்.

**"என்னுடைய கணவர் காணாமல் போன பின், அவரைத் தேடிக் கண்டுபிடிப்பதற்காக நான் பெருமளவு பணத்தைச் செலவழித்துள்ளேன். என்னுடைய குடும்பத்தில் சம்பாதிப்பதற்கு யாருமே இல்லை. என்னால் என் குடும்பத்துக்கு நிதியியல் ரீதியாக உதவ முடியவில்லை. பொருளாதார சூழ்நிலை மிகவும் மோசமாக உள்ளமையால் என்னுடைய பிள்ளைகள் கல்வியைத் தொடர பாடசாலைக்கு அனுப்ப முடியாமலுள்ளது"**

**- காணாமல் போனவரின் மனைவி -**


இராணுவச் செயற்பாட்டில் காணாமல் போன படையினர்கள் அல்லாத ஏனைய காணாமல் போன நபர்களின் குடும்பங்கள் சில தாம் ந்‘டஈட்டைப் பெற்று வருவதாகக் குறிப்பிட்டுள்ளன. அவ்வாறு அவர்கள் பெற்றபோது, அந்தத் தொகை அவர்கள் ந்‘டஈட்டைக் கோரியபோது நடைமுறையிலிருந்த கொள்கைகளின் அடிப்படையில் இலங்கை ரூபாய் 25,000 இலிருந்து 100,000 வரையானதாக இருந்தது. இங்கு முக்கியமாகச் சுட்டிக்காட்ட வேண்டிய விடயம் என்னவெனில், இத்தகைய ந்‘டஈட்டு திட்டங்களில் நன்மை பெறுவதற்கு மரணச் சான்றிதழைச் சமா்ப்பிப்பது அவசியமானது என்பதாகும். இக்குடும்பங்கள் தமது பொருளாதாரப் பிரச்சினைகள் காரணமாக, தமது காணாமல் போன உறவினர் இறந்துவிட்டார் என்பதை நம்பாதபோதும், ந்‘டஈட்டைக் கோருவதற்காக மரணச் சான்றிதழை ஏற்றுக்கொண்டதாக விபரிக்கின்றன.

மேலும், “ந்‘டஈடு” என்ற சொல் காணாமல் போனவரின் பெயரில் ந்‘டஈட்டினைப் பெறுவதை நிராகரிக்கின்ற அளவுக்கு பல குடும்பங்களை அசௌகரியத்திற்கு ஆளாக்கியுள்ளது. சில குடும்பங்கள் தாம் அதிகாரத் தரப்பினரால் வழங்கப்படுகின்ற ந்‘டஈட்டை ஏற்றுக்கொண்டால் தமது காணாமல் போன உறவினர் பற்றிய விசாரணை மூடப்படும் என்ற அர்த்தத்தைத் தரும் என்றும் அவர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பதற்கான பதிலைத் தேடும் செயன்முறைக்கு அது தடை விதிக்கும் என்றும் அச்சம் வெளியிட்டுள்ளன. சில குடும்பங்கள் இவை தமது காணாமல் போன உறவினர் பற்றிய விசாரணைகளை மூடுவதில் எவ்விதத் தாக்கத்தையும் ஏற்படுத்தாது என்றும் தமது வேதனையை அங்கீகரிப்பதை வெளிப்படுத்துவதாக அமைகிறது என்றும் கருதி தமது பொருளாதார சவால்களைப் பூர்த்தி செய்யக் கூடிய உதவிகள் மற்றும் நன்கொடைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராகவுள்ளன.

ந்‘டஈட்டுக்கு அப்பால், காணாமல் போன நபரின் பெயரில் உத்தியோகபூர்வமாகப் பதிவு செய்யப்பட்டுள்ள குடும்பச் சொத்துக்களின் (காணி, வங்கிக் கணக்குகள், காப்புறுதி கோரிக்கைகள் போன்றன) நிர்வாகம் குறித்த பிரச்சினை வருகின்றபோது, அவர்கள் பிரச்சினைகளின் மேலதிக சுமைகளுடன் போராட வேண்டியுள்ளதாக இக்குடும்பங்கள் தெரிவித்தன.

ஏறத்தாழ மூன்று நேர்காணல்களில் ஒன்று தற்போதைய சமூக நலத்திட்டங்கள் குடும்பங்களின் – விசேடமாக, நபரொருவருக்கு மாதாந்தம் இலங்கை ரூபாய் 3,838 எனக் கருதப்படுகின்ற இலங்கையின் தேசிய வறுமைக் கோட்டிற்குக் கீழ் தமது வீட்டுத்துறையின் அடிப்படைச் செலவினம் ஏற்படுகின்ற குடும்பங்களின் – நிதியியல் தேவைகளைப் பூர்த்தி செய்ய போதுமானதாக இல்லை என்பதை இம்மதிப்பீடு எடுத்துக்காட்டியுள்ளது.[51]

**வரைபு 10: ஒரு நபருக்குரிய சராசரி தலா மாத வருமானம்**




மாதாந்த “சமுர்த்தி”க் கொடுப்பனவு, கோட்பாட்டு ரீதியாக, அரசாங்கத்தின் வழமையான நிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில், முக்கிய உதவிகளை தேவையுள்ள குடும்பங்கள் பெற்றுக் கொள்வதாக உள்ளபோதிலும், அத்தகைய கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஒருவர் நீண்ட செயன்முறைகளினூடாகச் செல்ல வேண்டியுள்ளது. மேலும், சிறியதொரு தொகையைக் கொண்ட மாதாந்தக் கொடுப்பனவானது (அதிகபட்சம் இலங்கை ரூபாய் 3,000), குடும்பங்கள் மாதாந்தம் தாம் பெற்றுக் கொள்வதாகக் குறிப்பிட்ட 250 ரூபாய்க்கும் 750 ரூபாய்க்குமிடைப்பட்ட வயோதிபர்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் ஆகியோருக்கான சிறிய ஒதுக்கீட்டினால் குறைநிரப்பப்படுகின்றபோதிலும், அது ஒரு குடும்பத்தைக் கொண்டு நடத்துவதற்குப் போதுமானதாக இல்லை.

கடந்த சில வருடங்களாக அரசாங்கம் மற்றும் அரச சார்பற்ற சேவைகள் வடக்கு மற்றும் கிழக்கில் உள்ள போரினால் பாதிக்கப்பட்ட மற்றும் மிகவும் நலிவுற்ற மக்களுக்கான பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. தற்போது இருக்கக் கூடிய நிகழ்ச்சித் திட்டங்கள் ஏனையோர் மத்தியிலுள்ள மாற்றுத் திறனாளிகள், புனர்வாழ்வு பெற்றோர், பெண் தலைமைக் குடும்பங்கள் மற்றும் இடம்பெயர்ந்தோர் ஆகியோரை பொதுவாக இலக்காகக் கொண்டவையாகும். மேலே பட்டியல்படுத்தப்பட்ட வகைப்பாடுகளின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களிலிருந்து காணாமல் போன நபர்களின் சில குடும்பங்கள் நன்மைகளைப் பெற்றுள்ளபோதிலும், காணாமல் போன நபர்களின் குடும்பங்கள் என்ற வகையில் இவை வழங்கப்படவில்லை. மேலும், தாம் பெறுவதற்கு தகுதியுடைய நலத்திட்டங்கள் பற்றியும் இந்தச் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அவர்கள் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் குறித்தும் போதியளவு தகவல்களை அறியாதவர்களாகவே இக்குடும்பங்கள் உள்ளன.

நேர்காணப்பட்ட காணாமல் போன நபர்களின் குடும்பங்கள் பல தாம் கடன் சுமைகளுடனுள்ளதாகக் (60%) குறிப்பிட்டன. வீடு கட்டுவதற்காக, வீட்டுத் திட்டங்களுக்கு[52] தமது பங்களிப்பினைச் செலுத்துவதற்காக அல்லது தமது பிள்ளைகளின் மேலதிகப் படிப்புச் செலவுகளுக்காக[53] சிலர் கடன் பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளனர். ஏனையோர் தமது நாளாந்த செலவினங்களை ஈடு செய்வதற்கு குடும்ப வருமானம் போதுமானதாக இல்லாத காரணத்தால் தாம் தொடர்ச்சியாக கடனுடன் வாழ்ந்து வருவதாகக் குறிப்பிட்டனர். மேலும், இக்குடும்பங்கள் தமது காணாமல் போன உறவினர்கள் பற்றிய தகவல்களைக் கண்டறியும் எதிர்பார்ப்புடன் ஆரூடம் கூறுபவர்களிடம் பெருமளவு பணத்தைச் செலவிட்டுள்ளன. காணாமல் போனவரைப் பற்றிய தகவல்களைக் கொண்டுள்ளவர்கள் என ஊகிக்கப்படும் நபர்கள் காணாமல் போனவரைப் பற்றிய தகவல்களை வெளியிடுவதற்காக சிலசமயங்களில் பணம் கேட்கின்றபோது, இக்குடும்பங்கள் மிரட்டி பணம் பறித்தலினால் பாதிப்புக்குட்படுபவர்களாகவும் உள்ளன. இந்தக் காரணங்களில் பல அவர்களுடைய தற்போதைய பொருளாதார சூழ்நிலை மிகவும் மோசமான நிலைக்குச் செல்வதற்குப் பங்களித்துள்ளன. நிலையான வருமானமின்மை மற்றும்/ அல்லது தொழில் பாதுகாப்பின்மை என்பன இக்குடும்பங்களின் கடன் துயரங்களுக்கு மேலதிகமாகச் சேர்ந்துள்ளவையாகும். இம்மதிப்பீட்டின்போது, இக்குடும்பங்களில் 12% ஆனவர்கள் மாத்திரமே நிலையான மாத வருமானத்தைக் (அதாவது, இலங்கை ரூபாய் 15,000 இற்கு மேற்பட்ட) கொண்ட முறைசார் தொழிலினை ஆற்றிய அதேவேளை, 56% ஆனவர்கள் தொழில் வாய்ப்பற்றிருந்தனர்.

ஏனைய பலரைப் போன்றே, காணாமல் போன நபர்களின் குடும்பங்களும் கடன் பொறிக்குள் தம்மை இட்டுச் செல்லக் கூடிய குறுங்கால மற்றும் நீண்ட கால விளைவுகளை அறியாமல் உயர் வட்டி அடிப்படையில் கடன்களைப் பெறுக்கொண்டுள்ளன என்பது இம்மதிப்பீட்டில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இக்குடும்பங்கள் தம்மால் மீளச் செலுத்த முடியாத நீண்டகாலக் கடனுக்குள் மூழ்கியுள்ளமையானது, அவர்களை முழுமையான வங்குரோத்து நிலைக்கு இட்டுச் செல்கிறது. மேலும், இக்குடும்பங்கள் தமது மோசமான நிலைமையிலிருந்து மீள்வதற்காக ஒன்றில் மேலதிகக் கடன்களைப் (17%) பெற்றோ அல்லது தமது சொத்துக்களை விற்றோ (7%) வருவதாகக் குறிப்பிட்டனர்.

[51] மூலம்: குடித்தொகை மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், இலங்கை, ஜுன் 2015.

[52] குடும்பங்கள் வீட்டுத் திட்டத்துடன் தொடர்புபட்ட கடன்களுக்கு ஆளாவதற்கு பல காரணிகள் பங்களிப்புச் செய்துள்ளன. உதாரணமாக, பெரிய வீட்டுக்கான அவர்களது தனிப்பட்ட முன்னுரிமைகள்/ அபிலா‘கள், நிதி விடயம் சார்ந்த அறிவின்மை, கடனை முறையாக முகாமைத்துவம் செய்யாமை, கட்டடப் பொருட்களின் விலை ஏற்றத்தினால் ஏற்பட்ட தாக்கம் மற்றும் வேலையாட்களுக்கான செலவில் ஏற்பட்ட அதிகரிப்பு.


[53] இலங்கையில் கல்வி இலவசமாக வழங்கப்படுவதனால் இங்கு குறிப்பிட்ட செலவுகள் மேலதிக வகுப்பு, மேலதிக சீருடைகள் போன்றவற்றுடன் சம்பந்தப்பட்டது.

**“நான் என்னுடைய வீட்டைக் கட்டுவதற்காகக் கடன் எடுத்தேன். ஒவ்வொரு வாரமும் இலங்கை ரூபாய் 1,050 செலுத்த வேண்டும். எனக்கு நிலையான வருமானம் எதுவும் இல்லாததால் இதனை நிர்வகிப்பது மிகவும் சிரமமாகவுள்ளது. நான் கடனைத் திரும்பிச் செலுத்தாவிட்டால், வங்கி என்னுடைய வீட்டைக் கைப்பற்றிவிடும். சிலவேளைகளில் என்னுடைய மகளுக்கு உணவு வழங்கக்கூட என்னிடம் பணம் இல்லை. அடுத்த வேளை சாப்பாடு எங்கிருந்து வரும் என்று எனக்குத் தெரியாது. ஒவ்வொரு வேளை சாப்பாட்டிற்காகவும் நான் அவதிப்படுகின்றேன்”**

**- காணாமல் போனவரின் மனைவி -**

இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன படையினரின் குடும்பங்கள் நஷ்டஈட்டுக்குப் புறம்பாக, காணாமல் போன உறவினரின் சம்பளங்கள்/ ஓய்வூதியங்கள் மற்றும் வீடமைப்பு, தொழிற்சார் பயிற்சி, மாணவர்களுக்குப் புலமைப்பரிசில் மற்றும் சட்ட உதவி போன்ற குறிப்பிடத்தக்களவிலான மேலதிக பயன்களைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவர். ஏனைய காணாமல் போன நபர்களின் குடும்பங்களோடு ஒப்பிடுகின்றபோது, இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன படையினரின் குடும்பங்கள் பெறுகின்ற பல்வேறுபட்ட நலன்களை கீழேயுள்ள வரைபு காட்டுகின்றது.

**வரைபு 11: காணாமல் போன நபர்களின் குடும்பங்களுக்குக் கிடைக்கும் அரச நிதியுதவிகள்**




இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன படையினரின் குடும்பங்கள் தமக்குரிய அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதில் எவ்வித சிரமங்களையும் எதிர்கொள்ளவில்லை என்பதுடன், விசேடமாக, காணாமல் போன நபரின் சம்பளம் மற்றும் ஓய்வூதியம் என்பவற்றைப் பெற்றுக்கொள்வதில் அதிகாரத் தரப்பினரிடமிருந்து இவர்களுக்கு ஒத்துழைப்பு கிடைத்தமை பெரும் ஆதரவாகவிருந்தது. இத்தகைய உதவிகள், இக்குடும்பங்கள் தம்மை பொருளாதார ரீதியாகக் கையாள பெரிதும் உதவுகின்றபோதிலும், இராணுவச் சேவையிலிருந்து காணாமல் போன திருமணமானவர்களின் பெற்றோர் குறிப்பாக எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து ஐ.சி.ஆர்.சி.க்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. காணாமல் போனவர் திருமணம் முடிக்காதவராயின், அவருடைய சம்பளம் மற்றும் ஓய்வூதியம் அல்லது ஏனைய நஷ்டஈடு அல்லது காணாமல் போனவர் தொடர்பான அனுகூலங்கள் என்பன அந்த நபரின் பெற்றோருக்குக் கிடைக்கும். எனினும், காணாமல் போனவர் திருமணம் முடித்தவராயின், குறிப்பாக, அவரது வயோதிபப் பெற்றோருக்கு ஏனைய பிள்ளைகள் இல்லையாயின், அவர்கள் பொருளாதார ரீதியாக மிகவும் நலிவுற்றவர்களாக இருக்கத்தக்க வகையில், அவருடைய மனைவியே பெரும்பாலான அனுகூலங்களை இயல்பாகப் பெற்றுக் கொள்வார்.

இம்மதிப்பீட்டின்போது இக்குடும்பங்களால் தெரிவிக்கப்பட்ட விடயங்களின்படி, அத்தகைய பெற்றோர் “ரணவிரு மாப்பிய” கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள விண்ணப்பிக்க முடியும். எனினும், இராணுவச் செயற்பாட்டின்போது சேவையிலிருந்து காணாமல் போனவர்களின் பெற்றோர், தாம் பெற்றுக்கொள்ளும் தொகை மிகவும் குறைவாக இருப்பதன் (மாதாந்தம் ஒரு பெற்றோருக்கு ரூபாய் 750) காரணமாக, இது தமது நிதித் தேவைகளைப் பூர்த்தி செய்வதாக இல்லை எனக் குறிப்பிட்டனர். மேலும், “ரணவிரு மாப்பிய” கொடுப்பனவு உரிய நேரத்தில் வைப்பிலிடப்படுவதில்லை என இக்குடும்பங்கள் குறிப்பிட்ட அதேவேளை, சில குடும்பங்கள் படிப்பறிவு குறைந்த குடும்பங்களுக்கு இருக்கக் கூடிய முக்கிய பிரச்சினைகளான விண்ணப்பச் செயன்முறை குழப்பகரமானதாகவும் நீண்டதாகவும் சிக்கலானதாகவும் உள்ளன என்பதைத் தெரியப்படுத்தின.

**“அதிகாரத் தரப்பினரால் வழங்கப்படும் அனைத்து நலன்களும் என்னுடைய மருமகளுக்கே கிடைக்கின்றன. நானும் எனது மனைவியும் “ரணவிரு மாப்பிய” எனும் நலத்திட்டத்தின் கீழ் மாதாந்தம் ரூபாய் 750 ஐப் பெறுகின்றோம். இது நாம் வாழ்வதற்கு போதுமானதாக இல்லை”**

**- இராணுவச் செயற்பாட்டின்போது சேவையிலிருந்து காணாமல் போன ஒருவரின் தந்தை -**

## 5.4 சட்ட மற்றும் நிர்வாகத் தேவைகள்

காணாமல் போன நபர்களின் குடும்பங்களுக்கான நிர்வாக ரீதியான சிக்கல்களுக்கு மாத்திரமன்றி, மாறாக, அவர்களது உளவியல் சங்கடங்களுக்கும் காரணமான பிரதான பிரச்சினைகளில் ஒன்றாக இம்மதிப்பீட்டின்போது மிகவும் தெளிவாக வெளிப்பட்ட விடயம் என்னவெனில், இலங்கைச் சட்டம் காணாமல் போன நபருடைய அந்தஸ்தை வெளிப்படையாக அங்கீகரிக்கவில்லை என்பதாகும். சட்டத்தின்படி, நபர் ஒருவர் இறந்திருக்கலாம் அல்லது உயிரோடு இருக்கலாம்.[54] எனவே, தமது உறவினர் காணாமல் போன குடும்பத்தினால் எதிர்பார்க்கப்படும் ஏதேனும் நிவாரணமானது, அவருடைய இருப்பு நிரூபிக்கப்பட முடியாத காரணத்தால் அவர் இறந்துவிட்டதாக உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்துவதிலேயே தங்கியுள்ளது.

**“நாங்கள் பிறந்தமைக்கான உத்தியோகபூர்வ ஆவணம் உள்ளது. நாம் இறக்கின்றபோது, அதற்கும் சான்றிதழ் உள்ளது. என்னுடைய கணவர் காணாமல் போயுள்ளார். பிறப்பு மற்றும் இறப்பு ஆகிய இரு சான்றிதழ்களிலிருந்து மாத்திரம் நான் ஒன்றை தெரிவுசெய்யக் கூடியதாகவன்றி, அவர் காணாமல் போய்விட்டார் என்பதைப் பிரகடனப்படுத்தக் கூடிய சட்ட ரீதியான ஆவணம் ஒன்றும் இருத்தல் வேண்டும்”**

**- காணாமல் போன ஒருவரின் மனைவி -**

[54] சட்டத்தில் சொல்லப்பட்ட காரணங்களுக்காக காணாமல் போனவராக அறிவிக்கப்பட்ட நபர்களை இறந்தவர்களாகப் பதிவு செய்வதற்காக 2010ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க இறப்புக்களைப் பதிவு செய்கின்ற (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டம் இயற்றப்பட்டது. ஐ.சி.ஆர்.சி. அறிந்த வகையில், இச்சட்டத்தின் செயற்பாடு 2013ஆம் ஆண்டு ஆகஸ்ட் 21ஆம் திகதி 1824/3ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2015ஆம் ஆண்டு டிசம்பர் 09ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டிருந்தது.

இக்குடும்பங்கள் மரணச் சான்றிதழ் ஒன்றினைப் பெற்றுக் கொள்வதில் தங்கியிருப்பதன் காரணமாக, தமது நாளாந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குப் பின்வரும் சட்ட மற்றும்/அல்லது நிர்வாகப் பிரச்சினைகளை எதிர்கொள்வதாகக் குறிப்பிட்டன:

- காணாமல் போன நபரின் வங்கிக் கணக்கை அணுகுதல்/ முடிவுறுத்தல்
- காணாமல் போன நபரினால் மேற்கொள்ளப்பட்ட காப்புறுதிக் கோரிக்கைகளைப் பெற்றுக் கொள்ளுதல்
- காணாமல் போன நபரினால் அடகு வைக்கப்பட்ட ஆதனத்தை விடுவித்தல்
- பாடசாலைகளுக்குப் பிள்ளைகளைச் சேர்ப்பதிலுள்ள பிரச்சினைகள்
- தொழில் தருநரால் வைப்பிலிடப்பட்ட காணாமல் போன நபருடைய மாதாந்த சம்பளத்தைக் கோருவதிலுள்ள சிக்கல்கள்
- காணாமல் போன நபருக்குச் சொந்தமான காணியை பிழையாக உரிமை கொள்ளும் நபரிடமிருந்து மீளக் கோருவதிலுள்ள சிக்கல்கள்
- காணாமல் போனவருக்குச் சொந்தமான அசையும் மற்றும் அசையா ஆதனங்கள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதிலுள்ள இயலாமை/ பிரச்சினைகள்

எனவே, சில உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கும் குறித்த சில உரிமைகளை செயற்படுத்துவதற்கும் இக்குடும்பங்களுக்கு காணாமல் போன தமது உறவினர் இறந்துவிட்டார் என உத்தியோகபூர்வமாக பிரகடனப்படுத்துவதைவிட வேறு வழிமுறைகள் கிடையாது. காணாமல் போன நபர்களின் குடும்பங்களில் பெரும்பாலானவை (66%) தமது உறவினரின் மரணம் நிரூபிக்கப்படும் வரை மரணச் சான்றிதழொன்றுக்கு விண்ணப்பிப்பதற்கு தயார் நிலையில் இல்லாமலிருப்பதால், அது அவர்கள் தமது நாளாந்த வாழ்க்கையைத் தொடர்வதற்கு அவசியமான சேவைகளையும் நலன்களையும் பெற்றுக் கொள்வதிலிருந்து அவர்களைத் தடுக்கிறது.

**“அவர்கள் இறுந்துவிட்டார்கள் என்பதற்கு என்ன சாட்சியம் எங்களிடம் உள்ளது? குடும்ப அட்டையில் ஒரு நபருடைய பெயரைச் சேர்ப்பதற்குகூட நாம் பல்வேறு ஆவணங்களைக் காட்ட வேண்டியுள்ளது. ஆகவே, எந்தவொரு சாட்சியமோ அல்லது ஆவணமோ இன்றி நாம் மரணச் சான்றிதழினைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என எவரேனும் ஒருவர் எவ்வாறு எதிர்பார்க்க முடியும்”**

**- காணாமல் போனவருடைய தாய் -**

மரணச் சான்றிதழுக்கு விண்ணப்பித்த பெரும்பாலான குடும்பங்கள் தமது பொருளாதார[55] / நிர்வாகத் தேவைகளின் காரணமாகவே இதனைச் செய்தன என்பது இம்மதிப்பீட்டிலிருந்து தெளிவுபடுகின்றது. மரணச் சான்றிதழைப் பெற்ற[56] நாற்பத்து ஏழு சதவீதமான குடும்பங்கள், அவர்களுக்கு தெரிவொன்று இருந்திருப்பின், தமது உறவினர் ‘காணாமல் போயிருக்கின்றார்’ என்பதை அங்கீகரிப்பதற்கான அம்மாற்றீட்டினைப் பெற்றிருப்போம் எனக் குறிப்பிட்டன.

இந்த மதிப்பீட்டின்போது உரையாடிய காணாமல் போன நபர்களின் குடும்பங்கள் எதிர்நோக்கும் தொடர்ச்சியான பிரச்சினை என்னவெனில், அவர்களுக்கு எத்தகைய சேவைகளும் சமூக நலத்திட்டங்களும் நடைமுறையிலுள்ளன என்பதை விளங்கிக் கொள்வதில் பிரச்சினைகள் உள்ளன என்பதாகும்.

இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன படையினரின் குடும்பங்களினால் தெரிவிக்கப்பட்ட சில பிரச்சினைகள் பின்வருமாறு பட்டியல்படுத்தப்பட்டுள்ளன:

- இக்குடும்பங்களிடம் யார் நட்டஈட்டைப் பெற்றுக் கொள்வதற்கு தகுதி வாய்ந்தவர், பெற்றுக் கொள்ள வேண்டிய நட்டஈட்டின் தொகை, பொறுப்புடைய அதிகாரத் தரப்பினர் உள்ளடங்கலாக நட்டஈட்டைப் பெற்றுக் கொள்வதற்குப் பின்பற்றக்கூடிய நடைமுறை என்பன தொடர்பான தெளிவான கருத்தின்மை
- காணி ஒதுக்கீடு தொடர்பாக விசாரிக்கின்றபோது, தமது விண்ணப்பம் தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரத் தரப்பினரிடமிருந்து இக்குடும்பங்கள் எந்தவிதமான பதிலையும் பெற்றுக் கொள்ளாமை
- பெரும்பாலான சந்தர்ப்பங்களில் அவ்வாறில்லாதபோதும், காணாமல் போகின்றபோது காணாமல் போன நபர் திருமணம் முடித்திருப்பின், காணாமல் போனவரின் வாழ்க்கைத் துணைக்கே நட்டஈடுகளும் உதவிகளும் வழங்கப்படும். இது காணாமல் போனவரில் தங்கியிருந்த அவரது பெற்றோரை சிறிதளவு உதவியுடன் மாத்திரம் வாழச் செய்கின்றது.[57]
- “ரணவிரு மாப்பிய” கொடுப்பனவைப் பெற்றுக் கொள்ளும் குடும்பங்கள் இக்கொடுப்பனவைக் கிரமமாகப் பெற்றக் கொள்ளாமை அல்லது தாபிக்கப்பட்ட விதிமுறைகளின் பிரகாரம் பெற்றுக் கொள்ளாமை அல்லது குறிப்பிட்ட காலப்பகுதிக்குப் பின்னர் இக்கொடுப்பனவு நிறுத்தப்பட்டமை போன்ற பிரச்சினைகளை எதிர்கொள்கின்றன.

சமூக நலத்திட்டங்களைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் மேலே குறிப்பிட்ட கரிசனைகளில் பெரும்பாலானவை ஏனைய காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கும் பொருந்துகின்ற அதேவேளை, இம்மதிப்பீட்டின்போது குறிப்பாக ஏனைய காணாமல் போன நபர்களுடைய குடும்பங்களினால் தெரிவிக்கப்பட்ட சட்ட/நிர்வாக ரீதியான கரிசனைகள் பின்வருமாறு சாராம்சப்படுத்தப்படுகின்றன:

- தமக்குரியவற்றைப் பெற்றுக் கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறை மற்றும் எந்த அதிகாரத் தரப்பினரை அணுகுவது என்பது பற்றிய தெளிவான விளக்கம் இக்குடும்பங்களுக்கு இல்லை. உதாரணமாக, மரணச் சான்றிதழைப் பெறுக் கொள்ளல், சமுர்த்தியைக் கோருதல், நட்டஈட்டைப் பெற்றுக் கொள்ளல் போன்றவற்றைக் கூறலாம்.
- செயன்முறையை நிர்வகிக்கின்ற பொறுப்பதிகாரிகளுடன் காணப்படுகின்ற பிரச்சினைகள்
  - ஆவண வேலைகளைச் செயன்முறைப்படுத்துவதிலுள்ள தேவையற்ற தாமதம் (ஒன்றில் மரணச் சான்றிதழை வழங்குதல் அல்லது மரணச் சான்றிதழை அப்படிடையாகக் கொண்ட நட்டஈட்டுக்கான கோரிக்கையை செயன்முறைப்படுத்தல்) அதாவது, விண்ணப்பத்தைச் செயன்முறைப்படுத்துவதற்கு முறையற்ற/விளக்கமளிக்க முடியாத அளவு காலம் எடுத்தல், அரசியல் பக்கச்சார்பு தொடர்பான முறைப்பாடுகள், செயன்முறை தொடர்பாக அதிகாரத் தரப்பினரினால் தவறாக வழிநடத்தப்படுதல்.
  - மரணச் சான்றிதழுக்கான/நட்டஈட்டுக்கான விண்ணப்பம் ஒன்றை செயன்முறைப்படுத்துவதற்குப் பின்பற்ற வேண்டிய நடபடிமுறைகள் பற்றி தெரியாமை
  - நட்டஈட்டுக்கான தகுதியைத் தடுக்கின்ற வகையில், மரணச் சான்றிதழுக்கான விண்ணப்பத்தைச் செயன்முறைப்படுத்துவதற்கு விரும்பாமை/ நிராகரிக்கின்றமை
  - உரிய மாவட்டத்தில்[58] நிரப்பப்படாதபோது விண்ணப்பங்களை செயன்முறைப்படுத்துவதற்கு மறுத்தல் (யுத்தத்தின் போதோ அல்லது யுத்தத்திற்குப் பின்னரோ குடும்பமானது, இடம்பெயர்ந்திருக்கும் சந்தர்ப்பத்தில்)

[55] மேலதிகத் தகவல்களுக்காக, குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகள் என்ற பிரிவைப் பார்க்க.
[56] இது இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போனதாகக் கருதப்படுகின்ற நபர்களின் குடும்பங்கள் மரணச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்காது அதனைப் பெற்றுக் கொண்டதைக் குறிக்கிறது.
[57] மேலதிகத் தகவல்களுக்காக, குடும்பத்தின் பொருளாதாரத் தேவைகள் என்ற பிரிவைப் பார்க்க.
[58] காணாமல் போன நபர், காணாமல் போன சந்தர்ப்பத்தில் வசித்த முகவரி.

- இக்குடும்பங்களினால் மரணச் சான்றிதழ் அல்லது நட்டஈட்டுக்கு விண்ணப்பிப்பதற்குத் தேவையான ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியாமை. உதாரணம்: அடையாள ஆவணங்கள், மரணச் சான்றிதழ் போன்றன.
- தமது பங்களிப்பைச் (ஏதோவொரு வகையான) செலுத்த முடியாமையின் காரணமாக, இக்குடும்பங்கள் வீடமைப்பு அல்லது ஏனைய சமூகநலத் திட்டங்களில் நன்மை பெறத் தகுதியற்றவர்களாதல். உதாரணமாக, மிகவும் நலிவுற்றவர்களாகவிருப்பதால் இப்பிரச்சினை ஏற்படலாம்.
- அரச அலுவலர்களினால் வலிதற்றது எனக் கருதுகின்ற ஆவணங்களை இக்குடும்பங்கள் சமர்ப்பித்தல் (ஏனெனில், இவர்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்தபோது, அவை விடுதலைப் புலிகளினால் வழங்கப்பட்டிருத்தல்).

மேலும், ஏனைய காணாமல் போன நபர்களின் குடும்பங்களுக்குக் கிடைக்கின்ற நட்டஈட்டுத் திட்டங்களுக்கும் இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன படையினரின் குடும்பங்களுக்குக் கிடைக்கின்ற நலத்திட்டங்களுக்கும் இடையில் மாறுபட்ட நிலைகளுள்ளமையை ஐ.சி.ஆர்.சி. அவதானித்துள்ளது.

## 5.5 நீதிக்கும் அங்கீகாரத்துக்குமான தேவை

ஆயுத மோதலினால் பாதிக்கப்பட்ட ஏனைய நபர்களுக்கு இருக்கின்ற அதே தேவைகளில் பெரும்பாலானவை காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கும் இருக்கின்ற அதேவேளை, தகவலுக்கான தேவையைப் பொறுத்தவரை, அவர்களுக்கு தனித்துவமான முன்னுரிமையொன்றுள்ளது.[59] காணாமல் போன உறவினர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பவற்றை அறிந்து கொள்வதற்கான இக்குடும்பங்களின் தலையாய தேவையானது, தமது உறவினரின் காணாமல் போதலுக்கு யார் பொறுப்பானவர் என்பதை அறிந்து கொள்வதற்கான தேவை உள்ளடங்கலான ஏனைய பல்வேறு தேவைகளை நோக்கி விஸ்தீரணமடைகின்றது. சில குடும்பங்களைப் பொறுத்தவரை, தமது காணாமல் போன உறவினருக்கு என்ன நடந்தது மற்றும் அவர் எங்குள்ளார் என்பதை அறிந்து கொள்வதற்கான தேவைக்கும் நீதிக்கானத் தேவைக்கும் இடையில் உட்கிடையான தொடர்பொன்றுள்ளது.

பல்வேறுபட்ட நாடுகளில் ஐ.சி.ஆர்.சி. பெற்றுக்கொண்ட அனுபவங்கள் எடுத்துக்காட்டுவது யாதெனில், காணாமல் போன நபர்களின் குடும்பங்களுக்குப் பின்வரும் அங்கீகாரத்துக்கான தேவையுள்ளது என்பதாகும்:

- காணாமல் போன நபருடைய கௌரவம் மற்றும் பெறுமதி
- காணாமல் போதல் இடம்பெற்றுள்ளது என்ற உண்மை
- காணாமல் போதலுக்குப் பொறுப்பான சூத்திரதாரி மற்றும்
- காணாமல் போன சம்பவத்துக்குப் பதிலிறுப்பதற்காக எடுக்கப்பட வேண்டிய படிமுறைகளின் தேவைகள்.[60]

பொறுப்புக்கூறுதல் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு இக்குடும்பங்கள் விரும்புகின்ற பொறிமுறையைப் பொறுத்தவரை, அவை நீதித்துறை சார்ந்ததாகவோ அல்லது நீதித்துறை சாராததாகவோ இருக்க முடியும் என்பதை ஐ.சி.ஆர்.சி. அனுபவங்கள் எடுத்துக்காட்டுகின்றன. எனினும், அவை அனைத்தும் வேதனையுற்ற இழப்பின் நீதிக்கும் அங்கீகாரத்துக்குமான தேவையிலிருந்து பெறப்படுவதாக இருக்கும்.[61]

சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழ், அச்சட்டம் குறித்த பாரதூரமான மீறல்களை விசாரணை செய்வதற்கும் வழக்குத் தொடர்வதற்கும் அரசுக்கு கடப்பாடுள்ளது.[62] இதற்கு அமைவாக, எந்தவொரு நிலைமாற்றச் செயன்முறையினதும் முக்கிய மூலக்கூறாக பொறுப்புக்கூறுதல் பொறிமுறையுள்ளதென ஐ.சி.ஆர்.சி. கருதுகிறது.

### 5.5.1 நீதிக்கான தேவை

இந்த அறிக்கையின் பகுதி 4இல்[63] விபரிக்கப்பட்டதற்கேற்ப, மதிப்பீட்டின்போது ஐ.சி.ஆர்.சி.யானது, நீதி மற்றும் பொறுப்புக் கூறல் தொடர்பாக விசேட வினாக்களை வினவவில்லை. எனினும், தமது முன்னுரிமையான தேவைகள் பற்றி இக்குடும்பங்கள் பேசியபோது, இந்த விடயங்கள் தன்னிச்சையாக வெளிவந்தன. இதன்வழி, இந்த அறிக்கையின் கண்டறிதல்கள் நீதிக்கான குடும்பங்களின் தேவை பற்றிய மதிப்பீடாக வாசிக்கப்படாமல், மாறாக, இவை இந்த நேர்காணலின்போது குடும்பங்களினால் குறித்துரைக்கப்பட்ட முன்னுரிமைத் தேவைகளாகப் பார்க்கப்பட வேண்டும். இந்தத் தேவை தொடர்பான இக்குடும்பங்களின் பதிலிறுப்புக்களை வியாக்கியானப்படுத்தும்போது, காணாமல் போனவர்களின் குறிப்பார்ந்த வகைப்பாடுகள் குறித்து ஐ.சி.ஆர்.சி. கவனஞ் செலுத்தவில்லை என்பதை வலியுறுத்த வேண்டியது முக்கியமானதாகும். பல குடும்பங்கள், தமது உறவினர் காணாமல் போனமைக்கு யார் பொறுப்பேற்க வேண்டும் என்பது பற்றி எந்தவிதமான கருத்தையும் கொண்டவர்களாக இல்லாமலிருக்கும் அதேவேளை, ஆயுத மோதல் ஒன்றின் காரணமாக தமது குடும்ப உறுப்பினர் ஒருவர் காணாமல் போயிருத்தலானது, எல்லாச் சந்தர்ப்பத்திலும் மோதற் தரப்பினரால் முன்னெடுக்கப்படுகின்ற செயற்பாடுகளின் நேரடி விளைவாக இருக்க வேண்டியதில்லை என்பதை குறித்துக் கொள்ளுதல் முக்கியமானதாகும்.

தமது காணாமல் போன உறவினர் தொடர்பில் எவ்வகையான பதில் நடவடிக்கை அல்லது அங்கீகாரத்தை எதிர்பார்க்கின்றீர்கள் எனக் கேட்டபோது, ஏனையோர் மத்தியில், நேர்காணப்பட்ட குடும்பங்களில் மூன்றில் ஒரு பகுதிக்கு மேற்பட்டவர்கள் நீதிக்கான தமது தேவையை வெளிப்படுத்தினர். தமது இழப்பு மற்றும் வேதனை என்பவற்றை அங்கீகரிப்பதற்கான ஒரு வடிவமாக நீதியைக் கோரிய 34% ஆனவர்களுள், 17% ஆனவர்கள் சீர்படுத்தல் நீதியையும்[64] 11% ஆனவர்கள் தண்டனை வழங்கும் நீதியையும்[65] 6% ஆனவர்கள் இரண்டையும் எதிர்பார்க்கின்றனர்.

> **"என்னுடைய மகள் சார்பாக எனக்கு எந்தவொரு நட்டஈடும் வேண்டாம். அது என்னுடைய மகளை விற்று, அந்தப் பணத்தில் சாப்பிடுவது போன்றதாகும். ஆனால், யுத்தத்தின் காரணமாக பொருளாதாரப் பிரச்சினையை எதிர்கொள்வோருக்கு அது வழங்கப்படுமாயின், நான் அரசாங்கத்தின் உதவியை ஏற்றுக்கொள்வேன்"**
>
> **- காணாமல் போனவருடைய தாயார் -**

[59] ICRC report: The Missing and their Families - Summary of the Conclusions arising from Events held prior to the International Conference of Governmental and Non-Governmental Experts (19-21 February 2003), p. 83, https://www.icrc.org/eng/assets/files/other/icrc_themissing_012003_en_10.pdf.
[60] *Ibidem.*
[61] *Ibidem.*
[62] Customary International Humanitarian Law, Rule 156, 158 and 161, https://www.icrc.org/customary-ihl/eng/docs/v1_rul.
[63] மதிப்பீட்டின் முறைமையியல் என்ற பகுதியைப் பார்க்க.
[64] சீர்படுத்தல் அல்லது குணப்படுத்தல் நீதி என்பது குற்றத்திலிருந்து மேற்கிளம்பும் விடயங்களைத் தீர்த்தலில் பாதிக்கப்பட்டோரும் குற்றவாளிகளும் ஒன்றாக வினைத்திறனுடன் பங்குபற்றக் கூடியதும் குணப்படுத்தல் செயன்முறையைப் பயன்படுத்தக் கூடியதுமான யாதாயினும் ஒரு நிகழ்ச்சித் திட்டம், பாதிக்கப்பட்டோரினதும் குற்றவாளிகளினதும் தனிப்பட்ட மற்றும் கூட்டுத் தேவைகளையும் பொறுப்புகளையும் பூர்த்தி செய்வதை இலக்காகக் கொண்ட நட்டஈடு, மீள அளித்தல் மற்றும் சமூக சேவை போன்ற பதிலிறுப்புகளையும் நிகழ்ச்சிகளையும் உள்ளடக்கிய குணப்படுத்தல் வெளிப்பாடுகளை அடைந்து கொள்வதற்கு முயற்சித்தல் மற்றும் பாதிக்கப்பட்டவர்களினதும் குற்றவாளிகளினதும் மீள் ஒருங்கிணைப்பை அடைந்து கொள்ளுதல் என்பவற்றைக் குறிக்கின்றது, *Economic and Social Council (ECOSOC) Resolution 2002/12, Basic principles on the use of restorative justice programmes in criminal matters, http://www.un.org/en/ecosoc/docs/2002/resolution%202002-12.pdf.*
[65] பழிதீர்க்கும் நீதி என்பது குற்றவாளிகள் உள்ளார்ந்த ரீதியில்/ நோக்கத்துடன் மேற்கொண்ட தீங்கின் தார்மீக பரிமாணத்துக்கு விகிதாசாரமாகத் தண்டனை வழங்குகின்ற ஒரு முறையாகும். *K. M. Carlsmith and J. M. Darley (2008), Psychological Aspects of Retributive Justice, Advances in Experimental Social Psychology, Volume 40, page 193-236, http://www.colgate.edu/portaldata/imagegallerywww/184416d4-5863-4a3e-a73b-b2b6b86e7b60/ImageGallery/Carlsmith_Darley_2008.PDF.*

சீர்படுத்தல் நீதியை ஆதரிக்கும் குடும்பங்கள், தமது அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்தல், தமது வாழ்க்கையையும் வாழ்வாதாரத்தையும் மீளக் கட்டியெழுப்புதல், தமது குடும்பத்துக்கு உதவுதல், பிள்ளைகளுக்குக் கல்வியறிவூட்டுதல் மற்றும் நிதியியல் ரீதியாக சுயாதீனமானவர்களாக மாறுதல் என்ற அர்த்தத்தில் நிதியியல் உதவி குறித்துப் பேசின.[66] எந்தளவு தொகைப் பணமோ அல்லது சேவைகளோ தமது அன்புக்குரிய ஒருவரின் இழப்புக்கான முழுமையான ஈடாகாத அதேவேளை, குடும்பங்களைப் பொறுத்தவரை, அது தமது வேதனைகளை அங்கீகரிப்பதற்கு அதிகாரத் தரப்பிடமிருந்து வரும் சமிக்ஞையாகப் பார்க்கப்படுகிறது.


சீர்படுத்தல் பொதிகளை ஏற்றுக்கொள்வதானது, தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பது பற்றிய தகவல்களைத் தேடுவதனை முடிவுறுத்துவதற்கான குடும்பங்களின் சமிக்ஞையாக அதிகாரத் தரப்பினரால் வியாக்கியானப்படுத்தப்படலாம் என்ற தமது அச்சத்தையும் இக்குடும்பங்கள் வெளிப்படுத்தின.

## 5.5.2. அங்கீகாரத்துக்கான தேவை

நேர்காணப்பட்ட குடும்பங்களில் இருபத்து மூன்று சதவீதமானவர்கள் ஏதேனும் வடிவிலான அங்கீகாரத்தைக் கோரினர்.[67]

காணாமல் போன நபர்களது குடும்பங்கள் ஒவ்வொன்றும் அங்கீகாரம் என்பதை தனித்துவமான முறையில் அர்த்தப்படுத்தின. நேர்காணப்பட்ட சில குடும்பங்களைப் பொறுத்தவரை, பகிரங்க அங்கீகாரமானது, காணாமல் போனமை இடம்பெற்றது என்பதை ஏற்றுக்கொள்வதையும் உள்ளடக்குகிறது. இதன்வழி, சில குடும்பங்கள் காணாமல் போன நபரின் பெயரை வீதி ஒன்றுக்குச் சூட்டுதல் அல்லது அவர்களுடைய ஞாபகத்தை நினைவுகூரும் முகமாக சிலை ஒன்றை நிறுவுதல் போன்ற குறியீட்டு அங்கீகாரத்தைக் கோரின. மேலும் சில குடும்பங்கள், அரசாங்கத்தின் பகிரங்க அறிவித்தலினூடாக தமது சூழ்நிலை அங்கீகரிக்கப்பட வேண்டுமெனவும் தேசிய ரீதியாக காணாமல் போனவர்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட நாள் ஒன்றிலோ அல்லது காணாமல் போனவர்களுக்கான சர்வதேச தினத்தன்றோ மேற்கொள்ளப்படும் நினைவூட்டல் நிகழ்வுகளினூடாக வருடாந்தம் தமது வேதனைகள் மற்றும் இழப்புகள் குறிக்கப்பட வேண்டும் என்றும் கோரின. விசேடமாக, வடக்கு மற்றும் கிழக்கைச் சேர்ந்த குடும்பங்கள், காணாமல் போன நபரின் பெயரில் எந்தவிதமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவோ அல்லது குழுவாகச் சுதந்திரமாக ஒன்றுகூடவோ முடியாமையின் விரக்தியை வெளிப்படுத்தின.

**வரைபடம் 12: நேர்காணப்பட்ட காணாமல் போன நபர்களின் குடும்பங்களினால் எதிர்பார்க்கப்படுகின்ற அங்கீகாரத்தின் வகை**




**"நாம் விதிமுறைகளைப் பின்பற்றினாலும் மாவட்டத்திலுள்ள சம்பந்தப்பட்ட அனைவருக்கும் அறிவித்தாலும்கூட, காணாமல் போனவர்களுடைய குடும்பங்கள் தமது அன்புக்குரியவர்ளை ஞாபகப்படுத்துவதற்கோ ஒன்றுகூடுவதற்கோ அனுமதியைப் பெறமுடிவதில்லை."**
**- காணாமல் போன நபரின் சகோதரி -**

இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன படையினரின் நேர்காணப்பட்ட குடும்பங்களில்[68] அதிகபட்சம் 45% ஆனவர்கள் "தேசத்துக்கான சேவை" என்ற வகையில் தமது உறவினர்களாலும் குடும்பத்தினராலும் மேற்கொள்ளப்பட்ட அர்ப்பணிப்புகளின் அங்கீகாரத்துக்கான தனித்துவமானதொரு தேவையை வெளிப்படுத்தினர். இராணுவச் செயற்பாட்டின்போது கொல்லப்பட்ட சேவையாளர்களுக்காக ஒழுங்கமைக்கப்படுகின்ற வைபவங்களைப் போல, விசேடமாக, இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன சேவையாளர்களின் பெயரிலும் ஆயுதப் படையினரால் ஒழுங்கமைக்கப்படுகின்ற உத்தியோகபூர்வ வைபவம் ஒன்றின் வடிவில் அத்தகைய அங்கீகாரம் மேற்கொள்ளப்பட வேண்டும் என இந்தக் குடும்பங்கள் குறிப்பிட்டன. இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன சேவையாளர்கள் அதிகாரத் தரப்பினரின் பகிரங்க தொடர்பாடல்களில் உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் இராணுவச் செயற்பாட்டில் கொல்லப்பட்டவர்களின் பங்களிப்பு மதிக்கப்படுகின்ற அதேயளவு இராணுவச் செயற்பாட்டில் காணாமல் போன சேவையாளர்களின் பங்களிப்பும் விசேடமாக அங்கீகரிக்கப்படவும் பாராட்டப்படவும் வேண்டும் எனவும் இக்குடும்பங்கள் எதிர்பார்க்கின்றன. சில குடும்பங்கள் காணாமல் போன தமது உறவினர்களுக்கு வழங்கப்பட்ட பதக்கங்களைத் தாம் பெற விரும்புவதாகவும் தற்போது ஆயுத மற்றும் பாதுகாப்புப் படையினரிடம் இருக்கின்ற காணாமல் போன நபர்களுடைய தனிப்பட்ட பொருட்கள் தம்மிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் எனவும் கூறின. காணாமல் போன நபரின் பெயரில் ஞாபகச் சிலை ஒன்றை நிறுவுவதோ அல்லது வீதி ஒன்றுக்கு பெயரைச் சூட்டுவதோ போன்ற குறியீட்டு ரீதியான ஞாபகார்த்தங்கள்கூட ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையான அங்கீகாரம் எனச் சிலர் அபிப்பிராயம் தெரிவித்தனர்.

**"மோதற் காலத்தின்போது காணாமல் போன எனது மகன் மற்றும் அவரைப் போன்ற இன்னும் பலருக்காக இராணுவ அதிகாரியொருவரினால் வாள் ஒன்றை ஏந்தி வருவதான உரிய வைபவமொன்று நடத்தப்பட வேண்டும் என்பதுடன், அவர் இலங்கையின் தேசியக் கொடி கொண்டு கௌரவிக்கப்படுவதுடன், அதன் பின்பு அதனை மடித்து என்னிடம் தர வேண்டும் எனவும் விரும்புகின்றேன். மேலும், என்னுடைய மகனின் பெயரில் ஞாபகார்த்த சின்னம் அல்லது சிலை ஒன்றை நிறுவுமாறு கோருகின்றேன்"**
**- இராணுவச் செயற்பாட்டின்போது சேவையிலிருந்து காணாமல் போன நபரின் தாய் -**

[66] இவ்வறிக்கையின் பகுதி 5இல் விபரிக்கப்பட்டதற்கேற்ப, இது முழுமையாக தேவைகள் பற்றிய படிமுறைக்கு அமைவானதாகும். குடும்பங்கள் இயல்பாகத் தமது அடிப்படைத் தேவைகளான உணவு, உறக்கம் மற்றும் உயிர் வாழ்தல் ஆகியவற்றைப் பூர்த்தி செய்வதற்கு முன்னுரிமை வழங்குவதுடன், அவை பூர்துதி செய்ப்பட்ட பின்னரே ஏனைய தேவைகள் பற்றி சிந்திக்கத் தலைப்படுகின்றன.
[67] சில குடும்பங்களைப் பொறுத்தவரை, அங்கீகாரம் என்பது நீதி வழங்கியமைக்குச் சமமாகக் கருதப்படுகிறது.
[68] இம்மதிப்பீட்டின்போது, இராணுவச் செயற்பாட்டின்போது காணாமல் போன படையினரின் நூற்று இருபத்து ஒன்பது குடும்பங்கள் நேர்காணப்பட்டன.


Tuan Zaharan/ICRC

# 06. பரிந்துரைகள்

இவ்வறிக்கையில் விபரிக்கப்பட்ட கண்டறிதல்களின் அடிப்படையில், இலங்கையிலுள்ள காணாமல் போனவர்களினதும் அவர்களது குடும்பங்களினதும் பிரச்சினைகளுக்குப் பதிலிறுப்பதற்காக அரசாங்க மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், தேசிய மற்றும் சர்வதேச பங்குதாரர்கள் ஆகியோருக்கு உதவுவதற்கும் காணாமல் போனவர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பவற்றை தெளிவுபடுத்துவதற்கு மேலதிக முயற்சிகளை இடவும் இந்தச் செயன்முறையின்போது, அவர்களது குடும்பங்களுக்கு ஆதரவளிப்பதற்கும் ஒரு தொகுதிப் பரிந்துரைகள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளன.

## 6.1 இலங்கை அதிகாரத் தரப்பினருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட பிரதான பரிந்துரைகள்[69]

ஆயுத மோதல் ஒன்றின் காரணமாக, காணாமல் போனதாக அறிக்கையிடப்பட்ட நபர்களைக் கண்டுபிடிப்பதற்கு அனைத்து இயலுமான நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும் எனவும் அவர்களுக்கு என்ன நடந்தது என்பது பற்றிய எந்தவொரு தகவலையும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டும் என்றும் மோதலுக்குரிய ஒவ்வொரு தரப்பையும் சர்வதேச மனிதாபிமானச் சட்டம் கடமைப்படுத்துகிறது.[70] இம்மதிப்பீட்டின் கண்டறிதல்களின் அடிப்படையில், ஐ.சி.ஆர்.சி.யானது, இலங்கையில் காணாமல் போன நபர்களதும் அவர்களது குடும்பங்களதும் பிரச்சினைகளுக்குப் பதிலிறுப்பதற்கு தேசிய அதிகாரத் தரப்பினருக்கு உதவும் முகமாக தனது விபரமான பரிந்துரைகளை இலங்கை அரசாங்கத்திடம் நம்பகரமான முறையின் கீழ் கையளித்துள்ளது. இலங்கை அதிகாரத் தரப்பினருக்கான ஐ.சி.ஆர்.சி.யின் பரிந்துரைகளானவை, பின்வரும் முக்கிய விடயங்களை மையப்படுத்தியுள்ளன:

### காணாமல் போன நபருக்கு என்ன நடந்தது மற்றும் அவர் எங்குள்ளார் என்பதை அறிவதற்கான தேவையைப் பூர்த்தி செய்தல்

1.1 பின்வரும் பிரதான இலக்குகளை அடிப்படையாகக் கொண்டு, காணாமல் போன நபர்களின் குடும்பங்களின் நிச்சயமற்ற தன்மையை ஒழிக்கவும் அவர்களது அறிந்து கொள்வதற்கான தேவையைப் பூர்த்தி செய்யவும் பாராளுமன்றச் சட்டமொன்றின் மூலம் சுயாதீன பொறிமுறையொன்றை நிறுவவும்[71] அனைத்து இயலுமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளுதல்ளு

1.1.1 தமது உறவினர் காணாமல் போனதாகச் செய்யப்பட்ட முறைப்பாடுகளைத் தனிப்பட்ட ரீதியில் தீர்ப்பதனூடாக காணாமல் போன நபர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பதைத் தெளிவுபடுத்தலும் அதனை அவர்களது குடும்பங்களுக்கு அறிவித்தலும்.

1.1.2 காணாமல் போன நபர்களின் தேசிய பட்டியல் ஒன்றை ஒன்றுதிரட்டல்.

1.1.3 காணாமல் போன நபர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பவற்றைத் தெளிவுபடுத்தல், காணாமல் போவதைத் தடுத்தல் மற்றும் காணாமல் போன நபர்களின் குடும்பங்களுடைய பலதரப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்தல் (பொருளாதார, சட்ட, நிர்வாக, சமூக உளவியல் போன்றன) ஆகிய செயன்முறைகளில் ஈடுபடுகின்ற அனைத்து அரசாங்க நிறுவனங்கள் மற்றும் ஏனைய அமைப்புகளின் நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தலும் ஒழுங்கமைத்தலும்.

1.2 (அ) காணாமல் போன நபர்களின் எச்சங்களை அடையாளம் காணுதல் மற்றும் மீட்டெடுத்தல் ஆகிய நடவடிக்கைகளுக்குப் பொருத்தமான தடயவியல் சார்ந்த நிபுணத்துவ வசதிகள் விருத்தி செய்யப்பட்டுள்ளனவா என்பதையும் கிடைக்கக் கூடியவையாகவுள்ளனவா என்பதையும் (ஆ) எப்போது சாத்தியப்படுகின்றதோ, அப்போது காணாமல் போன நபர்களின் இறந்த உடலங்களைத் திருப்பிப் பெறுதல், மீட்டெடுத்தல் மற்றும் அடையாளம் காணுதல் உள்ளடலங்கலாக அவர்களது இறப்பு தொடர்பான முழு விசாரணையை ஆணையாகக் கொண்டிருக்கக் கூடிய போதுமானளவிலான சட்டக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குதல் (இ) இந்தச் சட்டக் கட்டமைப்பு, காணாமல் போன நபர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பன தொடர்பான தகவல்களை அவர்களது குடும்பத்தினருக்கு வினைத்திறனுடனும் செயற்றிறனுடனும் வழங்குவதற்கு அனைத்து சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் மத்தியிலும் அவர்களுக்கிடையில் தொடர்பாடல், ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பை மேம்படுத்துகின்றதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும்.

### சமூக உளவியல் தேவைகளைப் பூர்த்தி செய்தல்

1.3 பின்வருவனவற்றின் மூலம் காணாமல் போன நபர்களின் குடும்பங்களின் சமூக உளவியல் தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும்:

1.3.1 உளவளத்துணை சார்ந்த உளவியலில் பட்டம் பெற்றுள்ள நபர்களை, வெற்றிடமாகவுள்ள உளவளத்துணை ஆலோசகர்கள் பதவிக்கு நிரப்புதல், உளவளத்துணை ஆலோசகர்களுக்கு பயிற்சியளிக்கும் சந்தர்ப்பங்களை அதிகரித்தல் மற்றும் பல்வேறுபட்ட அமைச்சுக்களிடையேயான வேறுபட்ட உளவளத்துணை நடவடிக்கைகள் அனைத்தையும் மேற்பார்வை செய்யக் கூடிய அர்ப்பணிப்புடைய ஒருங்கிணைத்தல் அமைப்பொன்றைத் தாபித்தல்.

1.3.2 குடும்பங்களுடைய சேமநலனை முன்னேற்றுவதற்கு உள்ளூர் வளங்களும் நபர்களும் உதவக் கூடிய மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட ஆதரவு என்னும் வடிவில் குடும்பத் தேவைகளுக்கான ஒழுங்கமைக்கப்பட்டதும் ஒருங்கிணைக்கப்பட்டதுமான ஆதரவு அமைய வேண்டியிருப்பதால் சமூக உளவியல் ஆதரவின் பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றக் கூடிய அரசசார்பற்ற மற்றும் சமூகத்தை அடிப்படையாகக் கொண்ட நிறுவனங்களுக்கு அதற்கான பாரியளவான இயலுமையை வழங்குதல்.

1.4 மூன்றாம் நிலைக் கல்வி மட்டத்தில் உளவளத்துணை, சிகிச்சைசார் உளவியல் (Clinical Psychology) மற்றும் சமூக வேலை ஆகிய பாடத்திட்டங்களில் சந்தேகத்துடன் கூடிய இழப்பு பற்றிய கோட்பாடு மற்றும் அதனோடு தொடர்புடைய தலையீட்டு வழிகாட்டல்கள்[72] என்பவற்றை இணைத்தல்.

1.5 காணாமல் போன நபர்களின் குடும்பங்கள் அமைதியான முறையில் குழுக்களாக ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம் மற்றும் அவர்களது காணாமல் போன உறவினர்களை நினைவுகூரும் ஞாபகப்படுத்தல்[73] சேவைகளை ஒழுங்கமைத்தல் என்பவற்றை வழங்கக் கூடியதும் தாம் பாதுகாப்பாகவுள்ளோம் என அனைவராலும் உணரக் கூடியதுமான சுற்றுச் சூழலை விருத்தி செய்தல்.

[69] குடும்பங்களின் தேவைகள் மதிப்பீடு தொடர்பான நம்பகரமான அறிக்கை ஒன்று 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் இலங்கை அதிகாரத் தரப்பிடம் கையளிக்கப்பட்டது.
[70] Customary International Humanitarian Law Rule 117, *https://www.icrc.org/customary-ihl/eng/docs/v1_rul.*
[71] கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி அறிக்கையின் (2011) பரிந்துரைகள் 9.48 மற்றும் 9.50 என்பனவற்றைப் பார்க்க.
[72] Boss, P (2006), Loss, Trauma and Resilience: Therapeutic work with Ambiguous Loss, W.W.Norton Company, INC, ISBN:978-0-393-70449-5.
[73] Boss, P (2006), Loss, Trauma and Resilience: Therapeutic work with Ambiguous Loss, W.W.Norton Company, INC, ISBN:978-0-393-70449-5.

## பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்

1.6 காணாமல் போன நபர்களின் அனைத்துக் குடும்பங்களையும் மோதலினால் பாதிக்கப்பட்டவர்களாக அங்கீகரிப்பதுடன், அவர்களுக்குக் கிடைக்கக் கூடியதாகவுள்ள சேவைகளும் உதவிகளும் பாரபட்சமின்றியும் நிரந்தரத் தன்மையுடனும் வழங்கப்படுகின்றனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுதல்.

1.7 இன்றைய காலகட்டத்தில் காணாமல் போன நபர்களின் குடும்பங்கள் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய வகையில், விசேடமான சமூக நலத்திட்டப் பொதிகள் வடிவமைக்கப்பட வேண்டும். அத்தகைய விடயத்தை மேற்கொள்ளும்போது, அந்தப் பொதிகளுக்குப் பெயரிடுதலில் மிகவும் அவதானமாக இருக்க வேண்டியது அவசியமாகும் (அதாவது, “இழப்பீடு” என்ற சொல்லைத் தவிர்த்தல் வேண்டும் என்பதுடன், சீர்படுத்தல் பொதி என்ற வடிவில் சமூக உதவி வழங்கப்படக் கூடாது).

1.8 காணாமல் போன நபர்களின் குடும்பங்களுக்கு இருக்கக் கூடிய சமூக நலத் திட்டங்கள் மற்றும் அவற்றைப் பெற்றுக் கொள்வதற்கான நடபடி முறைகள் பற்றி சாராம்சப்படுத்துவதும் விபரிப்பதுமான தகவல்களை வழங்குதல்.

## சட்ட மற்றும் நிர்வாகத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்

1.9 “காணாமல் போன” நபரின் சட்ட ரீதியான அந்தஸ்தை அங்கீகரிப்பதுடன், இலங்கைச் சட்டத்தின் கீழ் அதற்கான இயலுமையை வழங்குகின்ற அதேவேளை, அதனை அமுல்படுத்துவதற்குத் தேவையான நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குதல். காணப்படாமைக்கான சான்றிதழின் அறிமுகமானது, அது தேவைப்படுகின்ற குடும்பங்களுக்கு காணாமல் போன நபர் இறந்துவிட்டார் எனப் பிரகடனப்படுத்தாமல் தமது அன்புக்குரியவர் இல்லாமையால் ஏற்படக் கூடிய சட்ட மற்றும் நிர்வாகப் பிரச்சினைகளைப் பூர்த்தி செய்வதற்கு அனுமதிக்கிறது.

1.10 காணாமல் போன நபர்களின் குடும்பங்கள், பொருத்தமான ஆவணங்களைப் பெறுதல் (பிறப்புச் சான்றிதழ், விவாகச் சான்றிதழ், அடையாள அட்டைகள், வாக்காளர் பதிவு போன்றன) உள்ளடங்கலாக அவர்களுக்கான சேவைகளையும் நலத்திட்டங்களையும் பெற்றுக் கொள்வதற்கு வசதிப்படுத்தும் வகையில், நடைமுறையிலுள்ள நிர்வாக விதிமுறைகளையும் நடைமுறைகளையும் மீள் பரிசீலனை செய்தலைக் கருத்திற் கொள்ளல்.

1.11 பல்வேறுபட்ட சட்ட மற்றும் நிர்வாகச் செயன்முறைகள் மற்றும் அதன் தேவைப்பாடுகள் குறித்து மும்மொழிகளிலும் பொதுமக்களுக்குத் தகவல்களை வழங்குதல்.

## நீதிக்கும் அங்கீகாரத்துக்குமானத் தேவைகளைப் பூர்த்தி செய்தல்

1.12 காணாமல் போன நபர்களின் குடும்பங்களுடனான நெருங்கிய ஒத்துழைப்புடன் காணாமல் போன நபரை நினைவுகூரும் நாளொன்றை அவர்களுக்கு அர்ப்பணஞ் செய்வது போன்ற நடவடிக்கைகளின் மூலம் தமது காணாமல் போன உறவினர்களின் ஞாபகத்தைப் பாதுகாக்கும் குடும்பங்களின் தேவைகளை அங்கீகரிப்பதற்கான வழிவகைகளைக் கருத்திற் கொள்ளல்.

1.13 பொறுப்புக்கூறல் மற்றும் நீதி என்பவற்றுக்கான காணாமல் போன நபர்களின் குடும்பங்களின் தேவைகளை போதுமானளவில் பூர்த்தி செய்வதற்கு நிறுவ வேண்டிய நிலைமாற்ற நீதிப் பொறிமுறைகளைத் தீர்மானிக்கின்ற ஆலோசனையில் காணாமல் போன நபர்களின் குடும்பங்களையும் உள்ளடக்குதல்.

# 6.2 ஏனைய பங்குதாரர்களுக்கான பரிந்துரைகள்

காணாமல் போன நபர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பவற்றைத் தெளிவுபடுத்துவதற்கும் அவர்களது குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்குமான தமது பிரதான பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அரச அதிகாரத் தரப்பினருக்கு உதவுவற்கு ஐ.சி.ஆர்.சி. ஏனைய பங்குதாரர்களுக்கு – அது தேசிய மட்டத்திலானதாயினுஞ் சரி அல்லது சர்வதேச மட்டத்திலானதாயினுஞ் சரி – அழைப்பு விடுக்கின்றது.

1.1 காணாமல் போன நபர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பதைத் தெளிவுபடுத்துவதையும் அதற்குத் தேவையான நிதியை ஒதுக்குவதையும் மேம்படுத்தல்.

1.2 முதன்மைக் கரிசனையாக, ஆயுத மோதல் தொடர்பில் காணாமல் போன அனைத்து நபர்களின் குடும்பங்களையும் உள்ளடக்குதலைக் கருத்திற் கொள்ளுதல், அவர்களின் அடையாளப்படுத்தப்பட்ட பன்முகத் தேவைகளைக் கருத்திற் கொள்கின்ற வகையில் நிகழ்ச்சித் திட்டங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் இந்தத் தேவைகளை போதுமானதாகவும் முழுமையாகவும் பூர்த்தி செய்வதற்கான போதுமான நிதியை ஒதுக்குதல்

1.3 நிலைமாற்றத்துக்கான நீதிக் கருத்தாடல்களில் காணாமல் போன நபர்களதும் அவர்களது குடும்பங்களதும் பிரச்சினைகளை உள்ளடக்குவது தெடர்பான கலந்துரையாடலைப் பின்பற்றுதலும் இந்தச் செயன்முறையில் காணாமல் போன நபர்களது குடும்பங்களை உள்ளடக்குவதை ஊக்குவித்தலும்.

1.4 மோதலினால் பாதிக்கப்பட்ட சகல தரப்பினரும் போதுமானளவு ஆதரவளிக்கப்பட்டுள்ளார்கள், முயற்சிகள் அனைத்தும் இரட்டிக்கப்படவில்லை மற்றும் சகல சாத்தியமான இடைவெளிகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன என்பவற்றைக் கவனத்திற் கொள்கின்ற வகையில், அதிகாரத் தரப்பினருடன் இணைந்து இக்குடும்பங்களது பன்முகப்பட்ட தேவைகளின் ஒத்திசைவாக்கப்பட்ட பதிலிறுப்பொன்றை உறுதிப்படுத்துகின்ற ஒருங்கிணைந்த முயற்சிகள்


Tuan Zaharan/ICRC

# 07. இலங்கையில் காணாமல் போனவர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் சார்ந்த ஐ.சி.ஆர்.சி.யின் செயற்பாடுகள்

1989ஆம் ஆண்டு இலங்கையில் தனது நிரந்தர பிரசன்னத்தை நிறுவியதிலிருந்து ஐ.சி.ஆர்.சி.யானது, கடந்த காலத்தில் ஏற்பட்ட ஆயுத மோதலின்போது காணாமல் போன நபர்கள், கைது செய்யப்பட்ட நபர்கள், பிரிந்திருக்கக்கூடிய குடும்பங்கள் ஆகியவற்றின் தகவல்களைப் பதிவு செய்தும் தீர்த்தும் வருகின்றது. இன்று, ஐ.சி.ஆர்.சியானது, இலங்கை பூராகவும் கிடைக்கப் பெற்ற இராணுவச் செயற்பாட்டில் காணாமல் போன 5,100 இற்கு மேற்பட்ட பாதுகாப்புப் படையினர் உள்ளடங்கலாக 16,000 இற்கும் மேற்பட்ட காணாமல் போன நபர்களைப் பற்றிய முறைப்பாடுகளைக் கொண்டுள்ளது.

தமது காணாமல் போன அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பன பற்றி அறிந்து கொள்வதற்கான இக்குடும்பங்களின் தேவைகளை மேம்படுத்துவதற்கு ஐ.சி.ஆர்.சி.யானது, உரிய அதிகாரத் தரப்பினருடன் நம்பகமான பேச்சுவார்த்தைகளில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றது. இது, காணாமல் போன நபருக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பதைத் தெளிவுபடுத்தவும் அவர்களது குடும்பங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் அவர்களது முயற்சிகளுக்கு ஆதரவு தேவைப்படுவதாகக் கோரப்படும்போது, அதிகாரத் தரப்பினருக்கு நிபுணத்துவ வழிகாட்டலை வழங்கவும் வழிசெய்கின்றது.

சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கீழ் கூறப்பட்டுள்ள தமது பொறுப்புகளையும் கடமைகளையும் பூர்த்தி செய்வதற்கு வகிபங்குதாரர்களை இயலச் செய்யும் பொருட்டு, கடந்த பல வருடங்களாக ஐ.சி.ஆர்.சி.யானது, மோதலினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நேரடியாக உதவியளித்தல் முதல் உள்ளூர் கட்டமைப்பு மற்றும் அதிகாரத் தரப்பினருக்கு அவர்களின் நடவடிக்கைகளுக்கு ஆதரவு வழங்குதல் வரையான பல்வேறு வகையான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது.

மரணச் சான்றிதழுக்கு மாற்றீடாக, இலங்கைச் சட்டத்தினுள் காணப்படாமைக்கான சான்றிதழ் என்னும் எண்ணக்கருவை அறிமுகப்படுத்துவதற்காக 2011ஆம் ஆண்டிலிருந்து ஐ.சி.ஆர்.சி. அதிகாரத் தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றது. ஐ.சி.ஆர்.சி.யினால் முன்மொழியப்பட்டதற்கேற்ப, காணப்படாமைக்கான சான்றிதழ் காணாமல் போன நபர்களின் சொத்துக்களையும் ஆதனங்களையும் நிர்வகிப்பதற்கான இடைக்கால ஏற்பாடுகளையும் அவர்களின் உறவினர்களினதும் தங்கியிருப்போரினதும் உடனடித் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் கூடிய வகையில், காணாமல் போனவர்களின் நலன்களைப் பாதுகாக்க முயல்கிறது.

தமது காணாமல் போன அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பன பற்றி அறிந்து கொள்வதற்கான இக்குடும்பங்களின் தேவைகளுக்கும் ஏனைய பிரச்சினைகளுக்கும் மத்தியில், இவர்களது பன்முகப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் பதலளிக்கும் பொருட்டும், ஐ.சி.ஆர்.சி.யானது, சகல அரசாங்க நிறுவனங்களினதும் செயற்பாடுகளை ஒருங்கிணைக்கவும் ஒழுங்குபடுத்தவும் கூடிய வகையில், தேசியப் பொறிமுறை ஒன்றை நிறுவ கருத்துரை வழங்கியது.

இலங்கையில் காணாமல் போன நபர்களின் குடும்பங்களின் தேவைகளைச் சிறப்பாக விளங்கிக் கொள்வதற்கு விரிவான மதிப்பீடொன்றை மேற்கொள்வதற்கும் அக்கண்டறிதல்களிலிருந்து எவ்வாறு இத்தேவைகளை சிறந்த வகையில் நிறைவேற்றலாம் என்பது பற்றிய பரிந்துரைகளை வழங்குவதற்குமான ஐ.சி.ஆர்.சி.யின் முன்மொழிவை இலங்கை அரசாங்கம் 2014ஆம் ஆண்டு ஏற்றுக்கொண்டது.

காணாமல் போன நபர்களின் குடும்பங்களுக்குச் சார்பான ஐ.சி.ஆர்.சி.யின் மனிதாபிமானப் பணியின் ஒரு பகுதியாகவும் குடும்பத் தேவைகள் மதிப்பீட்டினூடாக அடையாளப்படுத்தப்பட்ட அவர்களின் பன்முகப்பட்ட தேவைகளுக்கு பதிலிறுக்கும் முகமாகவும் ஐ.சி.ஆர்.சி.யானது, இலங்கை அரசாங்கத்தினதும் பல மாவட்டங்களில் செயற்படுகின்ற உள்ளூர் அதிகாரத் தரப்பினரதும் அனுமதியுடன் உள்ளூர் அமைப்புகளுடன் கூட்டிணைந்து, காணாமல் போன நபர்களின் குடும்பங்களுக்கான துணைநிற்கும் (Accompaniment) நிகழ்ச்சித் திட்டம் ஒன்றை அமுல்படுத்தி வருகின்றது.

துணைநிற்கும் நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான இலக்கு என்னவெனில், தமது உறவினர் காணாமல் போனமை தொடர்பில் எழக்கூடிய பிரச்சினைகளைக் கையாள்வதற்கான காணாமல் போன நபர்களின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்களின் இயலுமையைப் பலப்படுத்தலாகும். இந்த நிகழ்ச்சித் திட்டம் குறிப்பாகப் பின்வருவனவற்றுக்குப் பதிலிறுப்பதாக அமையும்:

- இக்குடும்பங்களின் மனவெழுச்சிசார் தேவைகளானவை, அவர்களின் சமூக உளவியல் அழுத்தங்களைக் குறைத்தல் மற்றும் தனிநபர், குடும்பம் மற்றும் சமூக மட்டத்தில் அவர்களின் செயற்பாடுகளை அதிகரித்தல் என்பவற்றினூடாக அவர்களின் நாளாந்தப் பிரச்சினைகளுக்கும் பொறுப்புக்களுக்கும் முகங் கொடுப்பதற்கான அவர்களின் இயலுமையை பலப்படுத்துவதை நோக்காகக் கொண்ட சமூக உளவியல் ஆதரவினூடாகப் பூர்த்தி செய்யப்படும். இது, தனிநபர்மயப்படுத்தப்பட்ட ஆதரவினூடாக மேற்கொள்ளப்படுவதுடன், அதே பிரச்சினைகளுடைய பல பேரை ஒன்றுதிரட்டிய ஆதரவுக் குழுக்களை உருவாக்குதல் மற்றும் அவற்றிற்கான வசதிப்படுத்தல்களை வழங்குதல் என்பவற்றினூடாகவும் மேற்கொள்ளப்படுகின்றது.
- மிகவும் நலிவுற்ற குடும்பங்களின் பொருளாதாரத் தேவைகளானவை, தமது குடும்பத்தின் வருமானமீட்டுபவர் அல்லது ஏனைய பொருளாதாரப் பங்களிப்பாளர் காணாமல் போனமையினால் ஏற்பட்ட தாக்கத்தினைக் குறைப்பதை நோக்காகக் கொண்ட உதவி நிகழ்ச்சித் திட்டங்களினூடாகப் பூர்த்தி செய்யப்படுகிறது.
- சட்ட மற்றும் நிர்வாகத் தேவைகளானவை, உள்ளூர் அரசாங்க மற்றும் அரசசார்பற்ற சேவை வழங்குநர்களுக்கு வழங்கப்படும் ஆற்றுப்படுத்தல்களினூடாகப் பூர்த்தி செய்யப்படுகின்றன. உதாரணமாக, சமுர்த்தி, வீட்டுக் கடன், நுண்பாகக் கடன் வசதிகள் போன்ற பல்வேறு உதவித் திட்டங்களுக்கு விண்ணப்பிப்பதற்கான நிர்வாக நடபடிமுறைகளைக் கடந்து செல்லுதலுக்கும் அவற்றைப் பெறுவதற்கும் இக்குடும்பங்களுக்கு துணைநிற்பவர்கள் (Accompaniers) ஆதரவு வழங்குவர். தேவைப்படும்பட்சத்தில், உள்ளூர் சேவைகளை அணுகுவதன் ஊடாக தமது நிர்வாகச் சிக்கல்களை நிவர்த்திப்பதற்குத் தேவையான ஆவணங்களை இக்குடும்பங்கள் பெற்றுக் கொள்ளும்: காணி உரிமையை மாற்றுதல், தமது காணாமல் போன உறவினரின் சொத்துக்களை அணுகுதல், ஓய்வூதியங்கள், காணப்படாமைக்கான சான்றிதழ் போன்றன.

இந்த நிகழ்ச்சித் திட்டம் 2015 நவம்பர் மாதம் முதன் முதலாக அநுராதபுரம் மாவட்டத்திலும் அதனைத் தொடர்ந்து அதே ஆண்டு டிசம்பர் மாதம் மன்னாரிலும் 2016ஆம் ஆண்டு மார்ச் மாதம் திருகோணமலையிலும் ஆரம்பிக்கப்பட்டது. 2016ஆம் ஆண்டில் இது இலங்கையிலுள்ள அநேகமான குடும்பங்களை அடையும் வகையில் படிப்படியாக விரிவாக்கம் செய்யப்படும். இந்நிகழ்ச்சித் திட்டம் ஐ.சி.ஆர்.சி.யினால் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், உள்ளூர் அமைப்புகள் மற்றும் அடிமட்ட சேவை வழங்குநர்கள் ஆகியோரினூடாக அமுலாக்கப்படுகின்றது.

துரதி'டவசமாக, காணாமல் போன சில நபர்கள் அவர்கள் காணாமல் போகும்போதே இறந்திருக்கக் கூடும். இந்தக் காரணத்துக்காகவே, உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு அவை மீள ஒப்படைக்கப்படக் கூடியதும் சரியான வகையில் பெயரிடக் கூடியதுமான வகையில், உயிரிழந்தவர்களின் மனித எச்சங்களைத் தேடுதல், மீட்டெடுத்தல் மற்றும் அவற்றைப் பகுப்பாய்வு செய்தல் என்பன காணாமல் போன நபர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பன பற்றித் தெளிவுபடுத்தலில் மிக முக்கிய மூலக்கூறாகவுள்ளன. இந்தச் செயற்பாடுகள், குறிப்பிட்ட காலத்திற்கு முன்னர் இறந்திருக்கக் கூடிய நபர்களின் சிதைவடைந்த அல்லது உருக்குலைந்த மனித எச்சங்களையும் எலும்புகளையும் சரியான வகையில் மீட்டெடுக்கவும் பகுப்பாய்வு செய்யவும் தேவையான குறிப்பான திறன்களில் பயிற்சி பெற்ற நிபுணர்களினாலேயே மேற்கொள்ளப்பட வேண்டியது அவசியமாகும். சிக்கலான சவால்களை உருவாக்கக் கூடிய வகையில், பல மனித எச்சங்களின் தொகுதிகள் பொதுவான ஓர் இடத்தில் ஒன்றாக அடக்கஞ் செய்யப்பட்டுள்ளபோது, இது மிகவும் முக்கியமானதாகும்.

இலங்கையில் ஏற்கெனவே நீதித் துறை மருத்துவ முறையொன்று தாபிக்கப்பட்டுள்ளமையால் ஒன்றில் தனியாக அல்லது கூட்டாக புதைகுழிகளிலிருந்து மனித எச்சங்களை மீட்டெடுத்தல் அல்லது அவற்றை அடையாளம் காணுதல் போன்ற தடயவியல் விசாரணைகளை ஐ.சி.ஆர்.சி. இலங்கையில் மேற்கொள்ளவில்லை. எனினும், தற்போதுள்ள கட்டமைப்புகளுக்கு ஐ.சி.ஆர்.சி. ஆதரவு வழங்கி வருகின்றது.

இலங்கையிலுள்ள தடயவியல் நிபுணர்கள் அண்மையில் இறந்தவர்கள் தொடர்பாக நீதித் துறை மருத்துவ விசாரணைகளை கிரமமாக நடத்தி வருகின்றனர். எனினும், ஏனைய பல நாடுகளைப் போன்றே, இந்த நிபுணர்கள் விசேடமாக பெருமளவானோர் ஒன்றாகப் புதைக்கப்பட்ட இடங்களிலுள்ள எலும்புகளை மீட்டெடுக்கவும் அவற்றைப் பகுப்பாய்வு செய்வதற்கும் தேவையான விசேட திறன்களில் முழுமையான நிபுணத்துவம் பெற்றவர்களாக இல்லை. இதன் காரணமாக, ஐ.சி.ஆர்.சி.யானது, இலங்கை தடய நோயியல் கல்லூரியின் ஒத்துழைப்புடன் கொழும்புப் பல்கலைக்கழகத்தில் மனித எலும்புகளை மீட்டெடுத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் குறித்த நிபுணத்துவத்தை மையப்படுத்தி தடய மானுடவியல் மற்றும் தொல்பொருளியல் துறையில் முதுவிஞ்ஞானமாணி (M.Sc.) கற்கை நெறியொன்றை ஆரம்பிக்க உதவி வருகின்றது. காணாமல் போனவர்களின் மனித எச்சங்களைப் பகுப்பாய்வு செய்யக் கூடிய தடய மானுடவியல் ஆய்வுகூடமாகவும் தொழிற்படக் கூடிய போதனா ஆய்வுகூடமொன்றை கொழும்பிலுள்ள தடய மருத்துவ மற்றும் நச்சுயியல் நிறுவகத்தில் நிறுவுவதற்கு ஐ.சி.ஆர்.சி. உதவி செய்யவுள்ளது. இலங்கையில் இந்த முதுவிஞ்ஞானமாணிப் பட்டக் கற்கை நெறியின் விருத்தியானது, தற்போதுள்ள தடயவியல் விற்பன்னர்களை மாத்திரம் இலக்கு வைப்பதாகவன்றி, மாறாக, காணாமல் போனவர்களின் எச்சங்களை மீட்டெடுத்தல் மற்றும் பகுப்பாய்வு செய்தல் ஆகிய நீண்டகால முயற்சிகளுக்கு நாட்டினுள் இந்த நிபுணத்துவத்தை உறுதியாகக் கட்டியெழுப்புவதற்கான தளத்தை வழங்குவதற்கான நிபுணத்துவத்தின் நிலைத்தகு தன்மையை நாட்டில் உறுதிப்படுத்துவதற்கு உதவுவதாகவிருக்கும்.

கோரிக்கை விடுக்கப்படும்பட்சத்திலும் ஐ.சி.ஆர்.சி.யின் ஆணையதிகாரத்துடன் இணங்கிச் செல்லும்போதும், காணாமல் போனவர்களின் எச்சங்களை தொழில்வாண்மையுடனும் விரிவாகவும் முகாமை செய்யப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு உதவுவதற்காக தொழில்நுட்ப ரீதியாகவும் கொள்கை மட்டத்திலும் ஐ.சி.ஆர்.சி. தனது நிபுணத்துவ வழிகாட்டலையும் ஆதரவையும் தொடர்ந்து வழங்கும்.


Tuan Zaharan/ICRC

# 8. முடிவுரை

தனது அன்புக்குரியவர் காணாமல் போனமையின் காரணமாக, அவர்களது குடும்பத்தினரால் உணரப்படுகின்ற தாக்கங்கள் பன்முகப்பட்டவை என்பதுடன், அவை உளவியல் மற்றும் சமூகப் பரிமாணங்களோடு தொடர்புபட்டவையாகும். நாட்டின் சகல மாவட்டங்களிலுமிருந்து ஆண்கள், பெண்கள், விடலைப் பருவத்தினர், சிறுபராயத்தவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள், சிங்களவர்கள், இராணுவச் சேவையிலிருந்தவர்கள், தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்கள் எனப் பலரது காணாமல் போதலுக்குக் காரணமான, இலங்கையின் கடந்த கால மோதலானது, ஆயிரக்கணக்கான குடும்பங்களை மனவெழுச்சிசார் மற்றும் சமூக ரீதியான துயரங்களின் சுமைகளுடன் தவிக்கவிட்டுள்ளது. தமது உறவினர்கள் காணாமல் போனமையினால் ஏற்பட்ட துயரங்களையும் சவால்களையும் எளிமையாக ஒரு வழிமுறையில் தீர்வு கண்டு முடிவுறுத்துவது இயலாத காரியமான அதேவேளை, இந்த மதிப்பீட்டினது கண்டறிதல்கள், இந்தத் தேவைகளையும் சவால்களையும் பூர்த்தி செய்யும் செயன்முறையை ஆரம்பிக்கவும் ஆதரவளிப்பதற்கும் தேவையான தகவலை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த அறிக்கையானது, ஐ.சி.ஆர்.சி.யுடனான நேர்காணல்களினூடாக காணாமல் போனவர்களின் குடும்பங்களினால் வெளிப்படுத்தப்பட்டவையும் அவர்களால் எதிர்கொள்ளப்படும் மிகவும் அழுத்தமிக்க தேவைகள் மற்றும் சவால்களின் நேரடி வழிமுறைகளைத் தருவதுமான சூழமைவினுடைய சாராம்சத்தை எடுத்துக் கூறுகின்றது. எனவே, இந்த அறிக்கையானது, எஞ்சியுள்ள கவனஞ் செலுத்தப்பட வேண்டியதும் பொருத்தமானதுமான குடும்பத் தேவைகளை உறுதிப்படுத்துவதனை அறிவிக்கின்றதும் அதற்கு உதவுகின்றதுமான ஒரு கருவியாகப் பார்க்கப்பட வேண்டும்.

இதேவேளை, ஐ.சி.ஆர்.சியானது, இக்குடும்பங்களுக்குத் தமது காணாமல் போன அன்புக்குரியவருக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பன பற்றிய தகவல்களைத் தேடுவதற்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கும். மேலும், தமது காணாமல் போன உறவினர்களுக்கு என்ன நடந்தது மற்றும் அவர்கள் எங்குள்ளார்கள் என்பன தெரியாமையால் ஏற்படுகின்ற நிச்சயமற்ற தன்மையுடன் வாழ்ந்து வருகின்ற இக்குடும்பங்கள் நாளாந்தம் எதிர்நோக்கும் பிரச்சினைகளின்போது, அவர்களுக்கு ஐ.சி.ஆர்.சி. தொடர்ந்தும் ஆதரவு வழங்குவதுடன், இந்தப் பிரச்சினைகளுக்குப் பதலிறுப்பதற்காக அதிகாரத் தரப்பினரும் ஏனைய பங்குதாரர்களும் மேற்கொள்ளும் முயற்சிகளுக்கும் தனது பங்களிப்பை வழங்கும்.

இதனை வாசிப்பவர்கள், இவ்விடயங்கள் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்கோ அல்லது இந்த அறிக்கையின் உள்ளடக்கம் தொடர்பாக எழுகின்ற ஏதேனும் விடயம் தொடர்பான கலந்துரையாடலுக்கோ முன்புற அட்டையின் உட்பக்கத்தில் வழங்கப்பட்டுள்ள கொழும்பிலுள்ள ஐ.சி.ஆர்.சி. பேராயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**"எனது கணவர் இறந்துவிட்டாரா அல்லது உயிரோடு இருக்கின்றாரா என்பது தெரியாமலேயே நிச்சயமற்ற தன்மையுடன் என்னுடைய வாழ்க்கையின் கடந்த 23 வருடங்களைக் கழித்துவிட்டேன். என்னுடைய அனைத்து பிள்ளைகளும் திருமணம் செய்துவிட்டார்கள். எனினும், நான் தனிமையிலேயே வாழ்கின்றேன். நான் உணர்வு ரீதியாகவும் மன ரீதியாகவும் சோர்வடைந்துவிட்டேன். எனது கணவருக்கு என்ன நடந்தது என்பதை எவரேனும் ஒருவர் உறுதியாகக் கூறுவார்களா என எதிர்பார்க்கின்றேன்"**

**- காணாமல் போனவரின் மனைவி -**

**செயல்நோக்கு**

செஞ்சிலுவை சர்வதேசக் குழு (ஐ.சி.ஆர்.சி.) ஆயுத மோதல் மற்றும் ஏனைய வன்முறைச் சூழ்நிலைகளின்போது பாதிக்கப்படுவோரின் வாழ்வையும் அவர்களின் கௌரவத்தையும் பேணிப் பாதுகாத்து, அவர்களின் வாழ்க்கைக்கு உதவிகள் வழங்குவதை பிரத்தியேக மனிதாபிமான செயல்நோக்காகக் கொண்டுள்ள பக்கச்சார்பற்ற, நடுநிலையான மற்றும் சுதந்திரமான ஓர் அமைப்பாகும். மனிதாபிமானச் சட்டம் மற்றும் அகில உலக மனிதாபிமானக் கோட்பாடுகள் என்பவற்றை மேம்படுத்துவதன் மூலமும் வலுப்படுத்துவதன் மூலமும் மனித அவலங்கள் ஏற்படுவதைத் தடுக்கும் முயற்சியிலும் ஐ.சி.ஆர்.சி. ஈடுபடுகின்றது. 1863இல் ஆரம்பிக்கப்பட்ட ஐ.சி.ஆர்.சி., ஜெனீவா சமவாயங்கள் மற்றும் சர்வதேச செஞ்சிலுவை மற்றும் செம்பிறை இயக்கம் ஆகியன உருவாக வழியமைத்தது. இது, ஆயுத மோதல்கள் மற்றும் ஏனைய வன்முறைச் சூழ்நிலைகளில் இவ்வியக்கத்தினால் முன்னெடுக்கப்படும் சர்வதேச செயற்பாடுகளை வழிப்படுத்தி, ஒருங்கமைக்கின்றது.

ICRC

0133/250 12.2016 400